றரப்பதிப்பு விலே சதம் 20

தலைமைத் தபால் நிலேயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலே

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 1991 பங்குனி திங்கள் 28-ம் நாள் (10-4-1960) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் 13 | இதழ் 40

# புதிய தேர்தல் நடத்திஞல் பிரச்னே தீருமா?

## ஸ்திரமான அரசாங்கம் அமைக்க தமிழ் பேசும் மக்கள் ஆதரவு அத்தியாவசியம்

### உரிமைகளே வழங்கும் கட்சியே ஆட்சி நடத்த முடியும்

பாராளுமன்றத்தைக் கலேத்துப் பொதுத் தேர்தல் ஒன்றைத் திரும்பவும் நடத்துவதன்மூலம் இன்று ஏற்பட்டிருக்கும் சிக்கலே எதிர்காலத்திலாவது தீர்த்துவிட முடியுமா?

இலங்கையில் உள்ள அரசியல் அவதானிகள் யாவரும் மேற்கண்ட வினுவுக்கு விடை கண்டுபிடிப்பதில்தான் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

"அப்படித் தீர்த்துவிடலாம் என்பது ஒருபோதும் நிச்சயமில்லே, எத்தனே அரசாங்கத்தை வேண்டுமானுலும் அமைக்கலாம். ஆனுல், சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பைப் பெருத வகையில் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைத்து அமைதியான முறையில் ஆட்சியை நடத்துவதென்பது சந்தேகமான காரியம்" என்று கூறுகிருர் சுதந்திரன் அரசியல் விமர்சகர்.

சுதந்திரன் அரசியல் விமர்சகர் இன்றைய அரசியல் நிலேபற்றித் தொடர்ந்து கூறுவதாவது:—

ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைக்க முடியாத சிக்கலான அரசியல் நெருக்கடியொன்று இப்போது இலங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது.

#### ஒன்றுபடும் சூழ்நிலே இல்லே

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றுபடாதவரையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்த்துக்கொள்ளாமல் எந்த ஒரு கட்சியும் அரசாங்கம் அமைக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றுபடுவதற்கான சூழ்நிலே காணப்படவில்லே. சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஒருசிலரை எப்படியாவது பெயர்த்து எடுக்கலாம் என்ற அசட்டு நம்பிக்கையிலேயே திரு டட்லி சேனநாயகா தமது அரசாங்கத்தைக் குற்றுயிரும் குலேயுயிருமாக இழுத்து வருகிருர். சிம்மாசனப் பிரசங்க விவாதத்துக்கு அப்புறம் இந்த நிலேயும் தொடர்ந்து நீடிக்க முடியாது.

#### டட்லி அரசாங்கம் தோற்ருல்...

டட்லி அரசாங்கம் தோல்வி கண்டால் திரு டட்லி சேனநாயகா பாராளுமன்றத்தைக் கலேக்கும்படி சிபார்சு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறதல்லவா? ஆனுல் திரு டட்லியின் சிபார்சை கவர்னர் ஜெனரல் ஏற்பாரா அல்லது நிராகரிப்பாரா என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லே.

ஆயினும், கவர்னர் ஜெனரல், எதிர்க்கட்சித் தலைவரான திரு சி. பி. டி சில்வாவை அழைத்து அவரால் அரசாங்கம் அமைக்க முடியுமா என்பதை நிச்சயம் அறிந்துவிட்டுத்தான் பாராளுமன்றத்தைக் கலேக்கச் சம்மதிப்பார் என்று நாம் ஓரளவுக்கு உறுதியாகக் கூறக்கூடிய நிலேயில் இருக்கிறேம்

பாராளுமன்றம் கலேக்கப்பட்டு இன்னெரு பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் என்ன சம்பவிக்கும்?

#### புதிய தேர்தலில் யு. என். பி. தோல்வியுறும்

யு என். பி அதிக தொகுதிகளேக் கைப்பற்றும் என்று நிலேமையை அறியாமையினுல் சிலர் கருதுகிருர்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சி மேலும் அதிகப்படியான பலத்துடன் திரும்பி வரும் என்று வேறு சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கிருர்கள். இரண்டு கட்சிகளும் இப்போதுள்ள பலத்தையும் இழந்துவிடக்கூடும் என்பதே நமது அபிப்பிராயமாகும்.

ஒருவேளே, திருமதி சிறீமாவோ பண்டாரநாயகா மீண்டும் மேடை ஏறிக் கண்

(8 ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பேசும் மக்கள் சார்பில் பேசத் தத்துவம்

### தமிழரசுக்கட்சி பெற்றிருக்கிறது புத்தியாக அது நடக்க வேண்டும்

### கொம்யுனிஸ்டு பிரமுகர் சண்முகதாசன் ஆலோசனே

கடந்த பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றி பீட்டி அதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் சார்பில் ஒரே குரல் எழுப்பத் தமிழரசுக் கட்சி தத்துவம் பெற்றிருக்கிறது என்றும் அக் கட்சி இன்றைய அரசியல் சூழ் நிலேயில் மிக்க நிதானத்துடன் புத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கொம்யுனிஸ்டு பிரமுகரான திரு. என். சண்முகதாஸன் சுதந்திரனுக்கு எழுதியுள்ளார்.

"தமிழரசுக் கட்சி இன்றைய இலங்கை அரசியலில் முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. அரசியல் போக்கை வேண்டுமானுல் அப்படியே மாற்றக் கூடிய நிலேயில் தமிழரசுக் கட்சி இருக்கிறது கேள்வி இது தான்; தமிழரசுக் கட்சி யு. என் பியை ஆதரிக்கப் போகிறதா? சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிக்கப் போகிறதா? அல்லது இரண்டில் ஒன்றையுமே ஆதரிக்காமல் பாராளுமன்றம் கலேக்கப்படுவதற்கு வழி கோலப் போகிறதா?"

மேற்கண்டவாறு கேட்கிருர் கொம்யுனிஸ்டு பிரமுகர் திரு. சண்முகதாஸன். விடையையும் அவரே தருகிருர். அவர் கூறுவதாவது:—

"நிலேயான அரசாங்கம் நிறுவப்படுவதற்கு தமிழரசுக் கட்சி ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

#### யு. என். பியை ஆதரிக்கக் கூடாது

"யு, என். பியைத் தமிழரசுக் கட்சி ஆதரிப்பது சரியல்ல. தமிழ் பேசும் மக்க

(8-ம் பக்கம் பார்க்க)

## உதவி இன்ஸ்பெக்டர்கள் தெரிவுக்கான விண்ணப்பங்கள்

### தமிழாசிரியர்களிடமிருந்து விரைவில் கோரப்படும்

### உதவி கல்வி அதிபர் திரு. அல்விஸ் தகவல்

(சுதந்திரன் நிருபர்)

கல்விப்பகுதியின் உதவி இன்ஸ்பெக்டர்கள் (வித்தியாதரிசிகள்) தெரிவுக்கான விண்ணப்பங்கள் தமிழாசிரியர்களிடமிருந்து இம்மாத இறுதியில் அல்லது மே மாத முதற் பகுதியில் கோரப்படும் என்று உதவிக் கல்வி அதிபர் திரு ஈ. எச். டி. அல்விஸ் சுதந்திரன் நிருபரிடம் கூறினுர்.

உதவி இன்ஸ்பெக்டர்கள் பதவிக்கு தெரிவு செய்வதற்கு ஆசிரியர்களிடமிருந்து கடந்த வருடம் ஜூலே மாதத்தில் விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்பட்டன. அப்போது சிங்கள ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும், அனேகமாகத் தமிழ்த் தலைமை ஆசிரியர்களும் விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தார்கள்.

கடந்த ஜனவரி மாதத்தில் சிங்கள உதவி இன்ஸ்பெக்டர்கள் மேற்படி விண்ணப்பதாரர்களிலிருந்து தெரிவு செய்யப் பட்டார்கள். ஆனுல் தமிழ் உதவி இன்ஸ்பெக்டர்கள் தெரிவு செய்யப் படவில்லே.

ஏற்கனவே விண்ணப்பங்கள் அனுப்பிய தமிழ் ஆசிரியர்களிடையே இது பற்றிப் பலத்த சந்தேகங்கள் ஏற்பட்டன. சுதந்திரனுக்கு புகார் செய்தார்கள் அவர்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)



★ இடைவிடாத இருமல்
★ இளேப்பு
★ மூச்சுத் திணறல்
★ கிர்ர் புர்ர் சத்தம்
★ நெஞ்சுவலி
★ தொண்டை வலி




இவைகளே ஒழித்துக் கட்டுவதில் இணேயற்றது. ஈளே நோயினுல் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

# மண்ணிலேபோட்ட பணத்தைப்பொன்னுக்கும் வழிகள் கிராமங்களில் உண்டு

## படித்த வாலிபர்கள் அரசாங்க சேவை மோகத்தை விடுத்து இயற்கை வாழ்வுக்கு உடனே திரும்பத் திடங்கொள்ள வேண்டும்

### சிறு சிறு பண்ணைத் தொழில்களும் விவசாயத் தொழிலும் பொருள் வளத்துக்கு கை கொடுக்கும்

நாட்டின் பொருள் நிலை உயரவேண்டுமானால், பொருள்வளம் பெருக வேண்டுமானால் அதற்கான அடிப்படை கிராமங்களிலேயே அமைக்கப்பட வேண்டும். கிராம வாழ்க்கையின் வாயிலாகவே நாட்டின் பொருள் நிலை தொடங்க வேண்டும். விரிவான அடிப்படையில், பொருளாதார நிலை ஓங்குவதற்கு காணி வைத்திருப்பவர்களும் படித்தவர்களும்பட்டணங்களிலே கைகட்டி வாய்பொத்தி சேவகம் செய்வதை விடுத்து, உத்தியோகத்திலமர்ந்து உல்லாச வாழ்வு வாழ நினைப்பதை விடுத்து, கிராம வாழ்க்கையின் சிறப்பையும், பண்ணை வாழ்க்கையின் மகத்துவத்தையும் தெரிந்து தெளிந்து, எழில் கொலுவீற்றிருக்கும் கிராமங்களை நாடிச் செல்ல வேண்டும். கிராமங்களிலேயே சுக வாழ்க்கையைக் காண முடியும்; இயற்கையான வாழ்வும் அங்குதான் அமைந்துள்ளது; மண்ணிலே போட்ட பணத்தையெல்லாம் பொன்னுக்கும் வழிகள் ஆங்கு நிறைய உண்டு.

#### சிறு துரும்பும் பல் குத்த உதவும்

''அற்பம் அற்பமன்று'' என்பதாக ஒரு பழமொழியுண்டு; எந்தச் சிறிய பொருளும் உதவாக்கரை என்று நாம் அலட்சியமாக இருந்துவிட முடியாது. ஏனெனில் அப்படியான ஒரு சிறு பொருள் சில சமயங்களில் நமக்கு வேண்டிய மிக இன்றியமையாத பொருளாக இருந்துவிடக்கூடும். அச்சிறு பொருளின்றி எதுவுமே செய்ய முடியாத நிலையுங்கூட ஏற்பட்டுவிடும். சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்று சும்மாவா சொன்னார்கள்? ஏன் பெரிய தேரை நகர்த்திச் செல்வதற்கு அவசியமான உருளைகளைத்தேரிற் பொருத்தி வைப்பது மிகச் சிறிய அச்சாணியல்லவா? அச்சாணியின்றேல் தேர் ஓட முடியுமா? ஆகவே சிறு பொருள்களைக்கொண்டு பெரும் பொருள்களை ஆக்க முடியும்; இயக்க முடியும் என்பது வெள்ளிடைமலை. இக்கருத்து கிராமப் பொருளாதாரத்திற்கும் பொருந்தும்.

#### பொருள் வளம் உயரும்

கிராமங்களில் ஆக்கப்படும் அல்லது விளைவிக்கப்படும் சிறு சிறு பொருள்களைக்கொண்டு அக்கிராமங்களின் பொருள் வளத்தைப் பெருக்குவதின்மூலம் பரந்த அடிப்படையில் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும். கிராமங்களிலே குடிசைகளிலும் சிறு துண்டுக் காணிகளிலும், பண்ணைகளிலும் ஒவ்வொரு குடும்பத்தாரும், ஏன் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பேரும் ஏதாவதொரு தொழிலில் ஈடுபட்டு தொழிலையோ விளைவையோ பெருக்கும் போது, அத்தொழில் அல்லது அவ்வேலை எவ்வளவு சிறியதாயினும் அதனால் ஏற்படும் பயன் அக்குடும்பத்தின் வருவாயைப் பெருக்குவதுடன், அவ்வாறான பல குடும்பங்கள் வாழும் அக்கிராமத்தின்மூலம் பொருளாதாரத்திற்கும் உறுதுணையாய் விளங்கும். இவ்வாறாகப் பல கிராமங்களின் பொருள் வளம் உயரும் போது நாட்டின் பொருள் வளம் உயரும் என்பதில் என்ன சந்தேகம்?

அ. விஜயன்
விக்டோரியா

#### பொருள் வசதி உள்ளவர்கள் செய்யக் கூடியது

கிராமப் பொருளாதாரம் வீட்டுப் பொருளாதாரத்திலேயே தொடங்க வேண்டும். கிராமப்புறங்களிற் சிறிது பொருள் வசதியுள்ளவர்கள் தம் சொந்த நிலத்தில், அல்லது தமக்குச் சொந்த நிலமில்லாவிட்டால் சிறு துண்டுக் காணி நிலம் வாங்கி அதில், ஒருபுறம் 30, 40 பழமரங்களைப் பயிர் செய்யலாம்; மறுபுறம் 40, 50 தென்னங் கன்றுகளை வைக்கலாம்; அத்துடன் 4, 5 ஆடு மாடுகளையும் வைத்து வளர்க்கலாம். இவ்வாறே கிராமப் பகுதிகளில் பொருள் வசதியற்றவர்கள், அதாவது ஏழை எளியவர்கள், தம் வீட்டுக் கொல்லையை வீட்டுப்புறப் பண்ணையாக்கிக் கொண்டு அக்கொல்லையின் அளவுக்கு ஏற்றாப்போல் பழமரங்களையும் பிற மரங்களையும் நட்டு வீட்டுத் தோட்டம் போட்டு, ஆடு, மாடு வளர்ப்பையும் மேற்கொள்ளலாம். இப்படியாக கிராம மக்கள் தமக்கிருக்கும் நிலபுலங்களை, அவை மிகச் சிறியனவாயினும் அவற்றை அணுவளவும் வீணாக்காமல் சிக்கன முறையில் பயிர் வளர்ப்பையும், பிராணி வளர்ப்பையும் செய்து வருவார்களானால், திருமகளின் அருள் பரிபூரணமாக அன்னாருக்குக் கிடைக்க வழியேற்படும்.

#### பயிர்ச் செய்கை

நாட்டுப்புறங்களில் வாழ்வோருக்கு பயிர் விவசாயம் முக்கியமான முழு நேரத் தொழிலாக இருந்தாலும், அத்துடன் அவர்கள் காய்கறி விவசாயத்தையும் செய்வது அவசியமாகும். அலை வாழ்க்கையுடைய முற்கால மனிதர் நிலை வாழ்க்கை தொடங்கக் காரணமாயிருந்தது பயிர் தொழிலாகும். பயிர் விவசாயம் என்று கூறும்போது அதில் காய்கறி விவசாயமும் அடங்கும். தன் வீட்டாருக்கு வேண்டிய அன் [illegible] தவர் தம் முன்னேரைப் பின்பற்றி தம் வீட்டுப் புறத்திற்றானே விளைவிக்க வேண்டியது அவசியமாகும். பருவ மழை பொய்த்து பயிர்கள் நன்கு விளையாவிட்டால் கிராமக் குடியானவர்கள் அன்றாட வாழ்க்கைக்கே திண்டாட வேண்டியது வரும். அவ்வமயம் தம் வீட்டாருக்குத் தேவையான உணவுப் பொருள்களில் ஒரு முக்கிய பகுதியான காய்கறிகளையாவது தமது வீட்டுத் தோட்டத்தில் அவர்கள் விளைவித்திருந்தால், அதன் பயன் அவரதும் அவரது குடும்பத்தாரதும் பசியைப் போக்க உதவும்.

#### வீட்டுத் தோட்டம்

கிராமங்களில் பலருக்கு வீடுகளின் சுற்றுப்புறங்களில் நிலம் இருக்கின்றது. வீட்டைச் சுற்றியுள்ள சிறிய இடத்திலுங்கூட, அதிக உழைப்பும் நேரச் செலவுமின்றி தம் குடும்பத்துக்கு வேண்டிய காய்கறிப் பயிர்களை கிராமத்தார் உற்பத்தி செய்யலாம். வீட்டுப்புறப் பண்ணையில் நாளடைவில் பல வசதிகளை கிராமத்தவர் அமைத்துக்கொண்டால் ஊதியம் பெருக இடமுண்டு. உதாரணமாக, ஒரு கிராமவாசி தன் வீட்டுத் தோட்டத்தில் சில நல்லரசு பழச் செடிகளை நட்டு வளர்க்கலாம்; உணவுக்கான சில காய்கறிச் செடிகளையும் விளைவிக்கலாம். இப்படியாக அக் கிராமவாசி தன் வீட்டுத் தோட்டத்தில் பலவகை வசதிகளை அமைத்துக்கொண்டால் அவற்றில் கிடைக்கும் விளைவை வீட்டுத் தேவைக்கும் எடுத்துக்கொண்டு, மீதியுள்ளதை வெளியில் விற்றுச் சிறு ஊதியமும் பெற்றுக் கொள்ளலாம். இவைகளெல்லாம் சிற்சிறு விடயங்கள் என்றாலும் அவைகளை அற்பமானவை என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. கிராமப் பொருளாதாரத்தில் இத்தகைய வீட்டுத் தோட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது என்பதை மறந்துவிடலாகாது.

#### பொழுது போக்கு

வீட்டுத் தோட்டத்தால் கிராமவாசிகளின் பொருளாதாரம் மேலோங்குவது ஒரு புறமிருக்க இதனால் வேறுபல பெறுபேறுகளும் கிடைக்கின்றன. கிராமவாசியின் தொழில் அதாவது அவனது முழு நேர சீவனத்துக்கான தொழில் ஒரு வேளை வேறொன்றாக இருக்கலாம். ஆனால் அவன் வீட்டுத் தோட்டம் போட்டுக்கொள்வதின்மூலம், அவனுக்குக் கிடைக்கும் சிறிதும ஓய்வு நேரத்தை வீணாக்காது அவன் பிரயோஜனமாகச் செலவிட முடியும்; வீட்டுத் தோட்டம் போடுவதை அவன் ஒரு சிறந்த பொழுது போக்காகக்கொள்ளலாம். அவன் வீட்டிலுள்ள பெண்களும் சிறுவர் சிறுமியரும் வீட்டுப் புறப்பண்ணை வளர்ப்பதில் அவனுக்கு உதவியாயிருப்பர். இதுபோக வீட்டுத் தோட்டத்தினால் கிடைக்கும் வேறுசில நன்மைகளும் உள.

#### சுகாதார வாழ்வு கிடைக்கும்

வீட்டைச் சுற்றி தோட்டமிருப்பதால் சுத்தமான காற்றும் சுகாதாரமான வாழ்வும் தோட்டக்காரருக்குக் கிட்டும்; வீட்டிலுள்ளவர்கள் தம் சூழலில் பசுமையைக் காணும்போது கண்ணுக்குக் குளிர்ச்சியையும் மனதுக்குக் கிளர்ச்சியையும் பெறுகின்றனர். காய்கறித் தோட்டத்திலிருந்து அவ்வப்போது புதிதான காய்கறிகளைப் பறித்துக்கொள்ளலாம். அது போன்றே வீட்டுப் பசுவிலிருந்து நயமான பாலைப் பெற்றுக்கொள்ளலாம். இப்படிப்பட்ட சௌகரியங்களெல்லாம் வீட்டுப்புறப் பண்ணை வைத்திருப்பவருக்கன்றி வேறு யாருக்குக் கிடைக்கும்? இவ்வாறாக கிராமக் குடும்பமொன்றில் முழு நேர தொழில் செய்பவருக்கு வீட்டுத் தோட்டத்தால் வரும் ஊதியமும் சேர்ந்தால் அவரது வாழ்க்கைத்தரம் உயருமென்பதற்கு ஐயமில்லை.

#### சிக்கனம் கைக்கூடும்

வீட்டுத் தோட்டம் அமைக்க விரும்புவோர் பெரும்பாலும் வீட்டுக்கு முன்புறத்தில் காய்கறிச் செடிகளை நடுவது சிறப்பாகும். பீட்ரூட், கெரட், கோவி போன்ற ஆங்கிலக் காய்கறி வகைகளையும், வெங்காயம் மிளகாய், தக்காளி, வெண்டை, கத்தரி, அவரை முதலிய நம் நாட்டுக் காய்கறிகளையும், கீரை வகைகளையும் வீட்டுக்கு முன்புறத்திலுள்ள காணியில் பயிராக்கலாம். இவற்றின் வளர்ப்பில் கிராமப் பெண்களும் சிறுவர்களும் கண்ணுங்கருத்துமாயிருந்தால் இதனைத் தம் பொழுது போக்காக அவர்கள் கொண்டிருந்தால் நகரத்தாரைக் கண்டு செய்யும் ஆடம்பரச் செலவினங்கள் மிகுதியாகக் குறைந்துவிடும். சிறிய இடத்தை வைத்துக்கொண்டு அதிகச் செலவில்லாமல், அந்நியருடைய உழைப்புத் துணை இல்லாமல் குடும்பத்திலுள்ளவர்களே இத்தகைய தோட்டங்களை நிர்வகித்து வருவதால், வாழ்க்கைச்செலவு குறைந்து வருவாய் பெருகி, பொருளாதாரம் மேலோங்கும் என்பதுறுதி.


#### பழத் தோட்டம்

இதுவரை காய்கறித் தோட்டம் பற்றிக் கவனித்தோம். இனி பழமரத்தோட்டம் பற்றிக் காண்போம். கிராமப் பகுதிகளில் வீட்டுக்கு முன்புறம் காய் கறித் தோட்டம் அமைக்குங்கால் வீட்டின் பின்புறம் அதாவது வீட்டுக் கொல்லையில் பழமரங்களையும் பிறமரங்களையும் கிராமத்தவர் நாட்டிப் பயன் எடுக்கலாம். நாம் சற்று முன் கூறியது போல் ''அற்பம் அற்பமன்று'' எனும் முதுமொழிக்கிணைய ஒரு சில பழமரங்களை வீட்டுக் கொல்லையில் வளர்த்து கிராம மக்கள் தம் வருவாயை ஒரு சிறிதளவாவது பெருக்கிக் கொள்ள முடியும்.

#### அழகும் நிழலும் கிடைக்கும்

ஒழுங்காக நடப்பட்ட தருக்கள் வீட்டுக்குத் தனி யழகையும் சோலையையும் தருவனவாகும். வெயில் வேளையில் மரங்கள் வெப்பத்தைத் தணித்து தண்மையைத் தருகின்றன. மதிய வேளையில் பொழுது போக்குவதற்கு மரநிழல் ஏதுவாயிருக்கும். மனைகட்டுவதற்கும் வேளாண்மைத் தொழிலுக்கும் குடிசைத் தொழிலுக்கும் மரங்கள் இன்றியமையாதவை. வேறு சில மரங்கள் இன்றியமையாத

(6-ம் பக்கம் பார்க்க)



திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்.

விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மேஸ் லோர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் மகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் பரபட்டர போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்கு சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உடைதுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உப விநியோகஸ்தர்கள்:

ராஜரூதன் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

தி கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

தபாற்பெட்டி 88, கொழும்பு
காட்சியறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்
போன்: 7:851.

உயர்ந்த சேவை

1½" மொடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.

2" மொடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.

3" மொடல்-மணித்தியாலம் 4800-16800 கலன் இறைக்கிறது.

டிலிவரிக்கேற்ப ஹெட்டுக், சக்ஷன் லிவ்ட்டும் தேவை

ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி

ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். பூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம். போன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



## குயுக்தி

பெ பரமானந்தம், சுதுமலை

கே: என் காதலி என்னோடு பேசத் தயங்குகிறாளே?

ப: வாய் பேசாமல் இருக்கட்டுமே. அதனால் பாதகம் என்ன? கண்கள் பேசுகின்றன அல்லவா?

ஃ

செல்வி. கு பரமேஸ்வரி, மீசாலை.

கே: உலகம் ஒரு மாயை என்கிறார் எங்கள் ஆசிரியர் ஒருவர்...?

ப: அப்படியானால் மாயை என்பது உருண்டையாகவா இருக்கும் என்று அவரிடம் திருப்பிக் கேட்டுப் பாருங்கள்.

ஃ

மு. ஆனந்தன், மட்டக்களப்பு.

கே: தமிழ்ப் படவுலகில் சிறந்த நகைச் சுவை நடிகர் இப்போது யார்?

ப: என். எஸ். கிருஷ்ணனுக்குப் பின் இன்று சிறந்த நகைச்சுவை நடிகராக ஜொலிப்பவர் தங்கவேலு தான்.

ஃ

ஆர். எம். சுப்பையா, ஹட்டன்.

கே: காதல் என்பது என்ன?

ப: ஏமாந்த ஆடவனின் கழுத்தில் சாமர்த்திய சாலியான பெண் சுருக்குப் போட்டு இழுக்கும் ஒரு வித பாசக் கயிற்றின் பெயர் தான் காதல்.

ஃ

ஜெயராணி ஜோஸப்: கல்முனை.

கே: காதலிக்கும் மனைவிக்கும் வித்தியாசம் என்ன?

ப: காதலி ஆடவனை அடக்கி நடக்கிறாள். மனைவி ஆடவனிடம் அடங்கி நடக்கிறாள்.

கே: மரத்தில் மலராது அந்தரத்தில் மலரும் பூ எந்தப் பூ?

ப: மத்தாப்பூ!

ஃ

நெ. இராமபாதம், கொழும்பு.

கே: கடவுளின் பிரதிநிதி யார்?

ப: மனச்சாட்சி.

ஃ

எல். கல்த்தான், கொழும்பு.

கே: தமிழ்ப் படவுலகுக்கு அவசியம் தேவையானது என்ன?

ப: குறைந்த பட்சம் நான்கு டஜன் கத்தரிக்கோல்கள். நீளத்தை வெட்டிக் குறைக்காவிட்டால் தமிழ் பட உலகம் உயர முடியாது.

ஃ

கே. லக்ஷ்மி, மட்டக்களப்பு.

கே: நம் நாட்டுக் காதலுக்கும் மேல் நாட்டுக் காதலுக்கும் வித்தியாசம் என்ன?

ப: நம் நாட்டுக் காதல் கலியாணத்தில் அல்லது தற்கொலையில் முடிவுறும். மேல் நாட்டுக் காதல் அதற்கு மேலும் சென்று விவாகரத்தில் அல்லது கணவனின் படுகொலையில் முடிவுறும்.

ஃ

ரா. செந்தில் நாதன், பதுளை.

கே: பெண்களை மலருக்கு ஒப்பிடுவதேன்?

ப: மணந்ததும் இரண்டும் மவுசு கெட்டுவிடுவதால்.

ஃ

எஸ். சாம்பசிவம், தெனியாய.

கே: காதலில் சிக்கிய இரண்டு உள்ளங்கள் ஒன்றையொன்று உணர்ந்து கொண்டால்......

ப: வருட முடிவில் மூன்று உள்ளங்கள் ஆகலாம்.

கே: காதலுக்கும் காமத்துக்கும் வித்தியாசம் என்ன? இரண்டும் ஒன்றுதானே?

ப: தொல்காப்பியர் காலத்தில் காமம் என்பது புனிதமான காதலைத்தான் குறித்தது, நாற்றம் என்பது நல்மணத்தைக் குறித்ததைப் போல இன்று காமத்துக்கு வேறு பொருள் ஏற்பட்டு விட்டது. காதல் வெண்ணெய் என்றால் காமம் சுண்ணாம்பு ஆகிவிட்டதே!

ஃ

ஆர். எம். சந்திரன், கொழும்பு.

கே: நான் விவாகம் செய்து கொள்ளப் போகிறேன் குயுக்தியாரே, அதன் மூலம் நாட்டுக்கு என்ன நன்மை செய்யலாம்?

ப: ஜனத்தொகையை அதிகரிக்காமல் விட்டு வைத்திரானால் அதுவே போதும்.

> திருவாளர் குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்.
> த. பெட்டி 1183.
> கொழும்பு-12.

ஃ

க. சுப்பிரமணியம், களபூமி.

கே: டி. பி. சுபசிங்கா சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டதும் திரு. டட்லியின் முகம் எப்படியிருந்தது?

ப: ஊசிப் போன இட்லியைப் போல் உப்பிக் கிடந்தது.

கே: உங்கள் உள்ளத்தில் சதா ஊசலாடும் எண்ணம் என்ன? குயுக்தியாரே?

ப: இப்போது பணம், பணம், பணம் என்பதுதான். வீட்டு வாடகை ஆறு மாதம் பாக்கி கிடக்கிறதே!

ஃ

ஏ எம். ராவிக், பாலத்துறை.

கே: ஐக்கிய தேசியக் கட்சியை ஏன் பொது மக்கள் வெறுக்கிறார்கள்?

ப: அது பணக்காரர்களுடைய கட்சிதானே, பொது மக்களில் எத்தனை பேர் பணக்காரர்கள் இருந்து விடப் போகிறார்கள்?

ஃ

செல்வி பொ. தங்கநாயகி, கிரான்,

கே: தங்களை என் திருமணத்திற்கு அழைத்தால் வருவீர்களா?

ப: நிச்சயமாக வருவேன். அவகாசம் கிடைக்க வேண்டும். விருந்தும் கிடைக்க வேண்டும்.

ஃ

கலைதாசன், கல்லடி உப்போடை,

கே: நமது தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு 'கபினட்' அமையுங்கள் குயுக்தியாரே.

ப: அவசரப்படாதீர்கள். கொஞ்சம் பொறுங்கள். அடுத்து வரும் பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணம், வவுனியா, உடுப்பிட்டி ஆகிய இடங்களையும் வென்று கொண்டு 'கபினட்' அமைப்போம்.

ஃ

சா. ந ஆறுமுக வடிவேல், மட்டக்களப்பு

கே: தமிழரசுத் தந்தை திரு. [illegible] செல்வநாயகம் வாலிபராக இருந்தால் நமது கட்சியின் நிலை இன்னும் உத்வேகமாக இருக்கும் அல்லவா?

ப: இல்லை. வாலிபராக இருந்தால் அவர் மீது பொறுமையும் அதிகமாக இருக்கும். வயோதிபராயிருப்பதனால் தான் எல்லோரும் அவர் சொல்லுக்கு மதிப்பு வைத்துக் கட்டுப்படுகிறார்கள்.

ஃ

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி.

கே: இலக்கியச் சுவை, அங்கதச் சுவை, நகைச் சுவை— இந்தச் சுவைகளில் மிகவும் இனிமையான சுவை எது குயுக்தியாரே?

ப: கணக்கான காப்பியும், அளவான பாலும், வெள்ளைச் சீனியும் கலந்த காப்பியச் சுவைக்கு இவை எதுவும் ஈடாகா என்கிறார் ஒரு காப்பியப் பிரியர்.

ஃ

வே. க. சண்முகவேலு, காவத்தை.

கே: இலங்கைத் தமிழினம் இன்று தமிழரசுக் கட்சியின் கீழ் ஒன்று திரண்டு விட்டது. கட்சியின் எண்ணங்கள், செயல்களைச் சூட்டோடு சூடாக அறியத் துடிக்கிறோம் ஆகவே இனி மேல் சுதந்திரன் வாரம் இருமுறை வெளி வந்தால் என்ன?

ப: இந்த மாதிரியான கேள்விகளைக் குயுக்தியாரிடம் கேட்டு என்ன பயன்? கேட்க வேண்டிய இடம் வேறு சுதந்திரன் நிர்வாகிகளிடம் கேளுங்கள்.

ஃ

ஏ. நவரத்தினம், செங்கலடி

கே: எந்த அரசாங்கம் வந்தாலும் மந்திரிப் பதவிக்காக ஓடும் முதலியார் காரியப்பர் இப்போது அசந்து போய்க் கிடப்பதேன்?

ப: அசந்து போகாமல் என்ன செய்வார்? மனுஷர் கண்ணை மூடினால் அடுத்த தேர்தலைப் பற்றித்தான் கனவு காண்கிறார். அந்தக் கனவில் மஷூர் மவ்லானா அல்லவா கழுத்தில் மாலையுடன் கல்முனை எம். பி. யாகப் பவனி வருகிறார். இந்தக் காட்சியை பிரதி தினமும் காண்பவர் அசந்து போகாமல் வேறு என்ன செய்வார்?

ஃ

மு. இராமநாதன், பண்டத்தரிப்பு

கே: கம்பர் கண்ட பெண்களுக்கும் இக்காலப் பெண்களுக்கும் வித்தியாசம் உண்டா?

ப: இருப்பதாகத் தெரியவில்லை. கம்பர் அயோத்தியின் பெண்களிடத்தில் எதையெதையெல்லாம் வெளிப்படையாகக் கண்டாரோ அவற்றையெல்லாம் நாமும் கொழும்பு ஏழில் உள்ள பெண்களிடத்தில் வெளிவெளியாகக் காண்கிறோம். கம்பர் காலத்து பெண்கள் கூட நைலோன் தான் உடுத்திருப்பார்களோ?

# புன்னகை!

வண்ணச் சிலம்பொலி பண்ணிசைத் தேவர
வஞ்சிநீ சாலையில் குஞ்சரம் போலடி
வைத்து நடக்கவில்லை;—தினம்
யுத்தம் தொடுக்கவில்லை;—எழிற்
பன்னிறக் கங்கணம் மின்னிக் குலுங்கிடப்
பைங்கரம் வீசி, என் பக்கலி லேவந்துன்
பான்மையைக் காட்டவில்லை;—ஒரு
தேன்மொழி யூட்டவில்லை!

ஏழை மகனென்ற தாழ்வு நினைப்பிலோர்
ஏக்கமென் நெஞ்சினை என்றும் குடைய, நின்
இன்பச் சுடர்மனையை—நாடி
அன்புத் தவங்கிடப்பேன்;—செவ்
வாழைக் குருத்தினைப் போன்று, நீ சன்னலில்
வண்ண நிலாமுக வட்டம் தெரிந்திட
வாடிக்கை யாகநிற்பாய்; அச்சில்
வார்த்தது போலிருப்பாய்!

நெஞ்சத்தில் ஓடும்நின் எண்ணந்தான்
யாதென்று, என்
நெஞ்சம் அறிந்திட வாய்ப்பிலை யே, என்று
நெஞ்சகம் வாடிநிற்பேன்;—நீயோ
நீள்சிலை யாகநிற்பாய்.— மனம்
துஞ்சித் தளர்ந்திட்ட போதொரு நாளிலுன்
சுந்தரப் பொன்னிதழ் மீதிற் குறுநகைச்
சோதி நெளியக்கண்டேன்;—என்மனப்
போதும் மலரக்கண்டேன்!

ஆடும் பவள இதழ்க்கடைப் பில், தவழ்ந்
தாசை யுடன்முளை விட்ட முறுவலில்
அற்புதம் கோடிகண்டேன்!—துன்ப
வெற்புகள் ஓடக்கண்டேன்!—இன்னும்
கோடி யுகங்கள் கழிந்திடி னும், உன்றன்
கோதற்ற மெல்லிதழ் மீதினி லேவந்து
குந்திய புன்னகையை,—என்றன்
சிந்தை மறப்பதுண்டோ?

—சே. கனகசபை, [illegible]


## ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை-வைகாசி 28-ந் திகதி

அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் நீங்களும் பரீட்சையில் தேறி

### ஒரு ஆசிரியராகலாம்

- ★ பரீட்சை விபரம்
- ★ புதிய பாடத் திட்டம்
- ★ எமது பாடங்கள்

என்பன பற்றிய விபரங்கட்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்

தபாற்பெட்டி 649, கொழும்பு. போன்: 9759



## அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

### ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
(Spermatone Compound)

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

### 'மோடர்ன் கிளினிக்'
(MODERN CLINIC)

255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விரும்பாத எந்த அரசியல் சட்டத்தையும் எந்த ஒரு நாட்டிலும் அமுல் செய்ய முடியாது

## ஒற்றை ஆட்சி தமக்கு தேவையில்லை என்று தமிழ் பேசும் மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள்

### சிங்கள அரசாங்கம் செவி சாய்க்கப்போகிறதா அன்றி இனநெருக்கடியை வளர்க்கப்போகிறதா?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 23 தொகுதிகளில் 19 தொகுதிகளில் போட்டியிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 10 இடங்களை [illegible]ப்பற்றிய தோடு 1,76,492 வாக்குகளையும் பெற்றிருக்கிறது.

தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட பலர் சிறந்த பண்பாளர் என்பதும் மக்கள் பணியில் நாட்டம் உள்ளவர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள் தாம். எனினும் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் வாக்களிக்கும் போது தமிழ் அரசுக் கட்சி அபேட்சகர்களின் தனிப்பட்ட நிறைகுறைகளைப் பற்றி சிறிதும் பொருட்படுத்தாது நடந்த தேர்தலை ஒரு பொது சன வாக்கெடுப்பாகவே (Plebiscite) கருதி வாக்களித்துள்ளார்கள். அல்லாவிடில் சில சாதாரண தமிழ் அரசுக் கட்சி அபேட்சகர்களை எதிர்த்து போட்டியிட்ட படித்தவர்கள் — பட்டம் பெற்றவர்கள்—பெரும் பதவி வகிப்பவர்கள் படு தோல்வியுற்றதுடன் சில இடங்களில் கட்டுப் பணத்தையும் இழந்திருப்பார்களா?

#### தொண்டராக சேவை செய்ய வேண்டும்

ஆதலால் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எவராவது தமது தனிப்பட்ட செல்வாக்கினுல் தாம் வெற்றி பெற்றுள்ளோம் என்று இறுமாப்புக் கொள்ளாது, தாம் பெரும் தலைவர்கள் என்று தலை வீக்கம் கொள்ளாது தன்னடக்கத்தோடு மக்கட் தொண்டர்கள்—பணியாளர்கள் என்று தம்மைக் கருதி சேவை செய்ய வேண்டும்.

#### ஆணவத்தின் வீழ்ச்சி

அரசியல் வானில் நெடுங் காலம் ஒளிவீசிய திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் திரு சி சுந்தரலிங்கம் ஆகியோரின் தோல்வி எமது பாராளுமன்ற உறுப்பினருக்கு ஓர் அரிய பாடமாய் அமைய வேண்டும். திரு பொன்னம்பலத்தின் வீழ்ச்சி—திரு. சுந்தரலிங்கத்தின் வீழ்ச்சி அவர்களின் அறிவின் வீழ்ச்சியென்றே, ஆற்றலின் வீழ்ச்சியென்றோ கருதமுடியாது அது உண்மையில் மக்களைப் புறக்கணித்த—ஏமாற்றிய அவர்களின் "நான்" என்ற அகந்தையின், ஆணவத்தின் வீழ்ச்சி யென்றே கொள்ள வேண்டும்.

ஈழவேந்தன்

#### பேரிடி

1956-ல் பத்து தமிழரசுக் கட்சி அபேட்சகர்களை அனுப்பிய தமிழ் பேசும் மக்கள 1960-ல் பதினைந்து அபேட்சகர்களை அதுவும் பெரும்பான்மை வாக்குகளோடு அனுப்பியது "தமிழர்கள், தொடர்ந்து எதையும் எதிர்க்க மாட்டார்கள்; அவர்கள் பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்கலாம்" என வீண் விம்புபேசிய சிங்கள அரசியல் கட்சிகளுக்கு ஓர் பேரிடியை—ஒரு பேர் அதிர்ச்சியை அளித்திருக்கிறது. முன்பெல்லாம் சிங்களத் தலைவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி தமிழ் பேசும் இனம் ஏமாந்தது உண்மை தான். ஆனால் இனிமேல் அவ்விதம் ஏமாற தமிழ் பேசும் இனம மறு கிறதென்பதை இத்தேர்தல் இனிது எடுத்துக் காட்டியிருக்கிறது

#### வரலாற்று ஆசிரியர் கருத்து

இங்கு இந்திய வரலாற்று ஆசிரியர்களுள் தலை சிறந்த ஒருவரான திரு அனில் சந்திரபானேஜி அவர்களின் கருத்தை நினைவு படுத்தல் நலம் அவர் ஓர் இடத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

"No Constitution can be worked successfully in any country if it fails to satisfy the political hunger of the people. If organised political opinion is opposed to a particular Constitution it is practically useless to discuss its merits and demerits"

இதன் தமிழாக்கம் பின் வருமாறு:—

"மக்களின் அரசியல் பசியை தீர்க்கத் தவறும் எந்த அரசியல் சட்டத்தையும் ஒரு நாட்டில் வெற்றிகரமாக நடைமுறைக்கு கொண்டுவர முடியாது. கூட்டான ஒரு அரசியல் அபிப்பிராயம் அந்நாட்டில் அரசியல் சட்டத்தை எதிர்க்கிறதெனின் அச்சட்டத்தின நன்மை தீமைகளைப் பற்றி ஆராய்தல் தேவை

(9-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

### சார்வரி வருஷம்

#### வாக்கிய பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் கொக்குவில் இ. சி இரகுநாத ஐயர் அவர்களால் கணிக்கப்பட்ட சார்வரி வருஷ வாக்கிய பஞ்சாங்கம் வரப்பெற்றோம்.

இப்பஞ்சாங்கம் சுமார் 300 வருடங்களாக, சோதிட சாத்திர விற்பன்னர்களான முனிசிரேஷ்டர்கள் கையாண்ட வாக்கிய முறைப்படி, கணிக்கப்பட்டு வருகின்றது எனவேதான் ஜாதக பலன் கூறுவதற்கு இப்பஞ்சாங்கம் மிகவும் பொருத்தமானது என சோதிடர்கள் பொதுவாக அபிப்பிராயப்படுகின்றனர் போலும்.

நாளாந்தம் உள்ள திதி, நட்சத்திரம் முதலியனவற்றின் நேரங்களைக் குறிப்பிடும் போது காலையை (A. M.) சாதாரண அச்சிலும் மாலையை (P. M.) தடித்த அச்சிலும் தந்திருப்பது கால மயக்கத்தைத் தவிர்க்கிறது.

'சாருவரி யாண்டதனிற் சாதி பதினெட்டுமே திரமனு நோயாற் றிரிவார்கள்—மாரியில்லை, பூமி விளைவில்லாமற் புத்திரரு மற்ற வரும், ஏமமின்றிச் சாவாரியம்பு' என்பது இப்பஞ்சாங்கம் கூறும் வருஷ பலனாகும்.

பஞ்சாங்கம் அழகாகவும் விளக்கமாகவும் அச்சுப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூபா 1-25

#### திருக்கணித பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் மட்டுவில் சி சுப்பிரமணிய ஐயர் F. R. A. S. அவர்களால் கணிக்கப்பட்ட சார்வரி வருஷ திருக்கணித பஞ்சாங்கம் வரப்பெற்றோம்.

புராதன காலத்தில் இயற்றப்பட்ட வாக்கியங்களைத் திருத்தங்களில்லாது திரும்பத் திரும்ப உபயோகித்துக் கணிப்பதால் வரும் கிரக நிலைகள் பிரத்தியட்சத்துக்குச் சரிவராமைகண்டு விஞ்ஞான கணித முறைப்படி சுப்பிரமணிய ஐயர் பஞ்சாங்கம் தயாரிக்கப்பட்டு வருகிறது. எனவே மேல்நாடுகளில் தூரதரிசனிமூலம் நிர்ணயிக்கப்படும் கிரக சஞ்சாரங்களுக்கு ஒத்ததாக இப்பஞ்சாங்கத்துக் கிரக நிலைகள் அமைவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

வழமைப்பிரகாரம் பஞ்சாங்கம் சுத்தமாகவும் தெளிவாகவும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. வருஷப் பலன் கூறுகையில் சினிமா நட்சத்திரங்களுக்குப் பீடையென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சோதிடம் தோன்றிய காலத்தில் நட்சத்திரங்கள் இருந்ததுண்டு. சினிமா நட்சத்திரங்களும் அப்போது இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியானால் சினிமாவுக்கு எப்படிப் பலன் கூற முடிந்தது? விலை ரூ. 1-25.

#### நாவலர் மலர்

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் ஓர் உறுப்பாய் இலங்கும் "நாவலர் கழகத்தில்" மலர்ந்த மலர்தான் 'நாவலர்" என்ற ஆண்டு மலர்.

இம்மலர் ஆங்கிலம், தமிழ் என இரண்டு பெரும் பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் அகில உலகின் மொழியென்பதும் அறிவின்

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### சிறு கதையில் தவறு

"சுதந்திரன்" இதழை அநேக வருடங்களாகத் தொடர்ந்து படித்துப் பயனடைந்து வருபவர்களில் நானும் ஒருவன். இலங்கை வாழ் தமிழ்பேசும் சமுதாயத்தின் உரிமைக் குரலாகப் பவனி வரும் ஒரேயொரு இதழ் சுதந்திரன் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அந்தரங்கத்தில் நடக்கும் அட்டூழியங்களையும் அநியாயங்களையும் அம்பலத்துக்குக் கொண்டுவந்து சமுதாயச் சந்தையிலே நிறுத்தும் பெற்றியிலே வெற்றி பெற்றது சுதந்திரன் இதழ்.

இன்னும் ஈழத்தின் சிறுகதைத்துறையிலே அயராது உழைத்து அத்துறையின் உயர்ச்சிக்கு அடிகோலியது சுதந்திரன். எத்தனையோ இளம் எழுத்துச் சிற்பிகளை ஈழச் சமுதாயத்துக்குத் தந்த ஒப்புயர்வற்ற சஞ்சிகை சுதந்திரன்.

இலக்கியச் "சிற்பி" சரவணபவன் பி. ஏ யையும் ஈழத்துச் சோமுவையும் (சோமகாந்தன்) நாகராசனையும் எழுத்தாளர்களாகி ஈழத்துச் சிறுகதைத் துறையிலேயே புதிய திருப்பு முனையை உண்டாக்கிய பெருமை யாருக்கு உரியது? சுதந்திரனுக்குத்தான்.

வாரா வாரம் நல்ல சிறு கதைகளைத் தாங்கி வந்து வாசகநேயர்களை மகிழ்ச்சி... ...சுதந்திரனில் கடந்த வாரம் தவறு நேர்ந்துவிட்டது. திரு. ஏ. பி. வி. கோமஸ் எழுதியிருந்த "அகத்தின் அழகு...!" என்ற சிறுகதை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் "விவேகி" பத்திரிகையின் மார்ச் இதழில் பிரசுரமாகியிருக்கிறது. பின்பு சுதந்திரனில் பிரசுரமாகியிருந்ததைப் படித்து விட்டுத் திக் பிரமை கொண்டேன். சுதந்திரனிலும் எழுத்துத் திருட்டா? இதயம் நொந்தேன்.

திரு. கோமஸ் முன்பு சுதந்திரனில் கதை எழுதியதாக நினைவிருக்கிறது. முந்தி எழுதிய கோமஸும் 'அகத்தின் அழகு...!' சிறு கதை எழுதிய கோமஸும் ஒருவரா—அல்லது இரண்டு பேரா? சிறுகதை இலக்கியம் ஈழத்தில் முன்னேறியிருப்பதை நினைக்கும் போது நெஞ்சம் இன்பமடைகிறது. ஆனால் "அகத்தின் அழகு" என்ற கதை சிறுகதைத் துறைக்கு ஏற்பட்ட ஒரு இழுக்கு. ஒரு சர்வகலாசாலையில் நடந்ததாகக் கற்பனை பண்ணி வீண் வார்த்தைகளால் கதையை வளர்த்திருக்கிறாரே தவிர அதில் கருப் பொருளும் சிறுகதைக்கு உரிய அம்சக் கோவையும், இலக்கணமும் துளியும் இல்லை.

—இ. செ. கந்தசாமி,
பரிசல்ல வீதி,
எட்டியாந்தோட்டை.

குறிப்பு:

'அகத்தின் அழகு...!' என்ற சிறு கதை சில மாதங்களுக்கு முன்பு திரு ஏ பி. வி. கோமஸ் பி ஏ யால் எழுதிச் சுதந்திரனுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி கதை இன்னொரு பத்திரிகையில் முன்னதாகவே பிரசுரமாயிற்று என்றால் கதாசிரியர் அப்பத்திரிகைக்கும் அதே கதையை அனுப்பியிருந்தால் தான் அது முடியும்.

காலங் கடந்துவிட்டதால் சுதந்திரனில் பிரஸ்தாப கதை பிரசுரமாகாது என்ற எண்ணத்தில் கதாசிரியர் அப்படி அக்கதையை இன்னொரு பத்திரிகைக்கும் அனுப்பும் போது சுதந்திரனுக்கு அது பற்றித் தகவல் தந்திருக்க வேண்டியது அவருடைய நீங்காக் கடமை. அதை அவர் செய்யவில்லை. அதனால்தான் வந்தது வினை. வருந்துகிறோம்.

'அகத்தின் அழகு...!' என்ற சிறு கதை அதில் வலியுறுத்தப்பட்டுள்ள மனோ தத்துவக் கருத்து ஒன்றுக்காகவே சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்டது.

—ஆசிரியர்.


ஆஸ்த்மா என்ற-தொய்வால் அவதிப்படும் அன்பர்களே

அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூரண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம்.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"

ஒரு நவீன சஞ்சீவி

"ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் ரூ. 15-00.
(மிக உபாதை தரக்கூடிய, நாள்ப்பட்ட ஆஸ்த்மாவுக்கு)
"ஆஸ்த்மடிக்கா" சாதாரணம் ரூ. 5-00.

வி பி. பி. சதம் 85.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஓடர்களுக்கும்

டாக்டர்,

மொடர்ன் கிளினிக்
MODERN CLINIC

255, காலி ரோட், (பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்)
கொழும்பு—4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டு முத்தமிழ் விருந்து:

# ஒருத்தி அங்கு காத்திருப்பாள்!

—''திமிலைத்துமிலன்''—

ஆடும் நிலவினைக் கோடு கிழித்திரு
 ஆம்பல் அரும்பியது—விழி
 ஆம்பல் அரும்பியது—என்னை
தேடும் கயலினை சூடி மகிழ்ந்திடத்
 திங்கள் எழும்பியது—வானிற்
 திங்கள் எழும்பியது!

நித்தில மஞ்சக் குமுதம் இரண்டெந்தன்
 நெஞ்சை நிரப்பியது—இளம்
 நெஞ்சை நிரப்பியது—அவள்
புத்தம் புதுஇதழ்க் கொத்திற் பனித்துளி
 கொஞ்ச விரும்பியது—தொட்டுக்
 கொஞ்ச விரும்பியது!

ஆற்று மணலிடைக் காத்து இருந்தவள்
 ஆடை திருத்தையிலே—என்னைக்கண்டு
 ஆடை திருத்தையிலே—அங்கு
பூத்த புதுமலர் சேர்த்து விழுங்கிடப்
 போதை துரத்தியது—என்ன ஒரு
 போதை துரத்தியது!

முல்லை முகையிற் பவளம் இணைந்து
 முறுவல் முளைக்கையிலே—மெள்ள ஒரு
 முறுவல் முளைக்கையிலே—நாணம்
சொல்லிற் குழையக் 'கவிஞரே' என்றவள்
 தொட்டு உலுப்பிவிட்டாள்—கரம் நீட்டித்
 தொட்டு உலுப்பிவிட்டாள்!

●

"நீங்களா?" என்றபடி எழுந் தமர்ந்தேன்.
 "நித்திரையா?" மெல்ல அவள் நிமிர்ந்து நின்றாள்.
"தூங்குகிறார் கவிஞ''ரென்று அம்மா சொன்னாள்.
 தொட்டெழுப்பி விட்டதற்காய்..."தோஷமில்லை..."
"நான்குமணி யாகிறதே... நீங்கள் எப்போ
 நாளைக்கோ புறப்பாடு?" என்றாள். "ஆமாம்.
வாங்குவதை வாங்கிவிட வேண்டுமின்று
 வசதியென்றால் நீங்களொரு உதவி..." என்றேன்

"உதவியா? என்னாலா?" என்றாள். "ஆமாம்
 ஒருத்தி அங்கு காத்திருப்பாள். அவளுக்காக
விதம் விதமாய்ப் புத்தாடை வாங்க வேண்டும்
 விருப்பம் போல் நீங்களதை..."என்றேன். என்ன?
உதயத்துத் தாமரையாய் மலர்ந்த வண்ண
 ஒளி வதனம் சுருங்குவதேன்...? ஓ கா! மீண்டும்
"இதை நீங்கள் விரும்பாட்டால்...பரவாயில்லை."
 என்றேன் நான் "இல்லை! இல்லை..."எழுந்து போனாள்.

பகற் கனவு பொய்யாது. பலிக்கு மென்பார்.
 பாவை இவள் ஏன் வந்தாள் நினைவில்? ஆகா!
அதற்கேற்ற வாறுஎன்னைத் துயிலெழுப்ப
 அவளாக வந்தாளே! அதுவும் பொய்யா?
இதற்கிடையில் எனக் கென்ன உறவா இங்கே?
 எவனோ நான்- வாடகைக்கு இருக்கும் ஜீவன்.
எதற்காக இவளை மனம் எண்ண வேண்டும்?
 எண்ண அலை ஓயவில்லை. வந்து விட்டாள்.

●

'புறப்படுங்கள்' என்றபடிப் பொய்யான புன்முறுவல்
ஒன்றை உதிர்த்தி ஒய்யாரத் தென்றலென
வந்துநின்றாள் என் எதிரில் வண்ணப்பொற் சித்திரமாய்.
சிந்தையிலே ஆசைச் சிரிப்பொன்றைக் கிள்ளிவிட்டு
எந்தனைப் பார்த்தாள் எடுத்தேன் பணப்பையை
"எதற்காக? நீங்கள் இங்கிருக்க நான்மட்டும்?"
"அதற்காக இல்லை......" ஆமாம்; கொழும்பு நகர்ப்
போக்கே இதுதான் "போகலாம்" என்றபடி
அவசர மாக அலங்காரம் செய்துவைத்து
காற்சட்டை மாட்டிக் கழுத்தணியும் சுட்டிவிட்டு
சப்பாத்தைப் பார்த்தேன. சரிதான் அவள் அதனை
அப்போது நீட்டி அணியுங்கள் என்று சொன்னாள்.
வேறென்ன இன்னும் விபரமாய்ச் சொல்வதற்கு?
'கார்' ஒன்றை நோக்கிக் கையடித்தேன். வந்தவுடன்
ஏறி நகரை இருநொடியிற் சென்றடைந்து;
வாங்குவதை வாங்கி வந்தோம் அதே இரவு:—

சரியாக மணி பத்தரை! யாரோ என் அறையை நோக்கி வரும் காலடியோசை. கதவு கிச்சிடும் ஒலி. கதவு மெதுவாக நீக்கப்பட்டது.

"நீங்கள் தூங்கவில்லையா?" அவள் கேட்டவாறே உள்ளே கால்வைத்தாள்.

"தூங்கச் சற்று நேரமாகும். ஏன்?" என்றேன்.

"உங்களிடம் ஒரு சந்தேகம்......"

"சந்தேகமா? என்னிடமா?.........என்ன சந்தேகம்?" நான் கேட்டேன்.

"சொல்லத்தானே போகிறேன். இல்லாவிட்டால் இந்தஇரவிலே தனியாக ஒருவரின் அறையிலே......"

"வந்திருக்கமாட்டீர்கள். உங்கள் அம்மாவும் விட்டிருக்கமாட்டார்கள்......"

"நான் படித்தவள். ஒரு பி. ஏ. இதுதான் அம்மாவின் நம்பிக்கை......"

"ஆமாம்; சந்தேகம் என்கிறீர்களே! உங்களுக்குத் தெரியாதது எனக்கென்ன தெரியப் போகிறது? என்றேன் சிரித்தபடி.

"நீங்கள் கவிஞர்..."அவள் சொன்னாள் முதலெொள்ளாயிரம் அவள் கையில் இருந்தது.

 கண்டன உன் கண் கலந்தன
 நல்நெஞ்சம்.
 தண்டப்படுவ தடமென்
 தோள்......

அதற்குமேல் வாசிக்க விடவில்லை அவள். படாலெனப் புத்தகத்தை அடித்து மூடினாள்.

அவள் வதனம் நோக்கினேன். விழி மலர்கள் குளமாக விம்மின. பேசமுடியாது அவள் திணறினாள்.

"கலா! என்ன இது?......" நான் கேட்டேன். நிமிர்ந்தாள். என்னை நோக்கினாள். திரும்பினாள். ஓடினாள்! ஓடியேவிட்டாள்.

●

அடுத்த நாள் 'ரெயி'லடிக்கு அவளே வந்தாள். என்னை ரெயிலேத்தி விட்டுத் திரும்புவாள் என்று தான். நினைத்தேன். 'ரெயில்' புறப்பட இன்னும் ஒரே ஒரு நிமிடம்.

"கலா! 'ரெயில்' புறப்படப் போகிறதே! இறங்குங்களேன்.

அவள் இறங்கவில்லை, அப்படியே இருந்தாள்.

மணி அடித்தது!

"கலா!"......நான் கத்தினேன். அவள் அசையவில்லை. 'ரெயில்' புறப்பட்டது.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! ஒருபுறம் பயமாகக் கூடவிருந்தது! உடலும் உள்ளமும் உதறலெடுத்தது.

என்ன இது! கட்டை மாதிரி இருக்கிறாளே!

"பயப்படாதீர்கள். ஏன் இப்படிப் பயந்து நடுங்குகிறீர்கள்?" அவள் சர்வ சாதாரணமாகவே கழுத்தை நொடித்தாள். எனக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. வெறுமனே அவளை நோக்கினேன்.

"மட்டக்களப்புக்கு ஒரு உல்லாசப் பயணம். புது வருட விடுமுறைக்கு ஒரு பொழுது போக்கு. அதுவும் ஒரு கவிஞரின் துணையோடு அவ்வளவு தான். அத்தோடு உங்கள் அவளையும் பார்த்து ஆசி கூறப் போகிறேன். இதற்கு நீங்களேன் பயப்பட வேண்டும்?" அவள் மீண்டும் என்னைச் சீண்டினாள்.

'சரிதான்!' நான் பேசவில்லை. (கார் எங்களை வீட்டு வாசலிலே இறக்கி விட்டுச் செல்கிறது. ஒரு இளம் பெண் ஓடோடி வருகிறாள்.)

●

அவள்:- அண்ணா! அண்ணா! வந்துட்டீங்களா? இவங்க வந்து......?

நான்:- இவங்க வந்து ஒரு பி. ஏ. நான் எடுத்த வாடகை வீட்டு அம்மாவின் மகள், ஊர் பார்க்க வந்திருக்கிறாங்க.

அவள்:- வாருங்கள், வணக்கம்.

கலா:- வணக்கம்.

நான்:- கலா! இவள் தான் நான் சொன்னேனே அவள். அதாவது என் தங்கை பெயர் முல்லை.


கலா:- ஆ! அப்படியா?...... (கலா முல்லையை அணைத்தபடி உள்ளே செல்கின்றாள். என்னை நோக்கி அவள் விழிகள் குறும்பாகச் சிரிக்கின்றன அளவில்லா ஆனந்தம் வதனத்தில் நிரம்புகிறது)

கலா:- முல்லை! உங்க அண்ணாவிடம் அம்மாவுக்கு ஒரு தந்தி கொடுக்கச் சொல்லிவிடு.

நான்:- ஏன்?

கலா:- புதுவருஷம் இங்கே தான் புறப்பட்டு வரச் சொல்லி. சொல்லேன் முல்லை!

நான்:- அடடா! முல்லை ... தம்மை ... பி. ... கேலிதான்.



நல்லூர் கிராமச் சங்கத் திருநெல்வேலி ஆறாம் வட்டார உறுப்பினராகிய திரு சி. கந்தசாமி யாழ்ப்பாணம் முனியப்ப சுவாமி ஆலயத்திலிருந்து நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு காவடியுடன் அங்கப் பிரதட்சணம் செய்கிறார். அவர் சுதந்திரன் நிருபரிடம் பின் வருமாறு கூறினார்:— "1946-ம் ஆண்டு தொடக்கம் தமிழினம் ஒரு தலைவரின் கீழ் ஒற்றுமைப்பட வேண்டுமென பிரார்த்தித்தேன். எனது பிரார்த்தனை நிறைவேறும் காலம் யாழ்ப்பாணம் கோட்டைக் கருகாமையில் அமைந்திருக்கும் முனியப்ப சுவாமி ஆலயத்தில் இருந்து நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குக் காவடியுடன் அங்கப் பிரதட்சணம் செய்வதாக எண்ணி இருந்தேன். எனது நேர்த்தி இறைவன் அருளால் 1960-ம் ஆண்டு அதாவது பொதுத்தேர்தலோடு நிறைவேறக் கூடியதாக வந்தது குறித்து மகிழ்கிறேன். அருமையான ஒரு தலைவரைத் தெரிந்து அவரின் கீழ் ஒன்றுபட்டமைக்காக தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்."

# சங்கப் பலகை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திறவுகோலாய் அது இன்று இலங்குகிறதென்பதும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத பேருண்மைகள் தாம். ஆனால் தமிழையும் தமிழ் இனத்தையும் வாழ்வித்த "நாவலர்" பெயரில் வெளிவரும் நாவலர் மலர் தமிழுக்கு முதன்மை கொடாது ஆங்கிலத்திற்கு அடிபணிந்தது வருந்தத்தக்கது. தமிழுக்கு முதன்மை கொடுத்து தரணி மொழியாம் ஆங்கிலத்தை தழுவுவது தவறல்ல. ஆனால் அருந் தமிழின் இடத்தில ஆங்கிலத்தை அரிஆசனை ஏற்றுவது அறிவுடைய செயல் அல்ல.

இம்மலரின் ஆங்கிலக் கட்டுரைகளையும் அருந் தமிழ்க் கட்டுரைகளையும் நுகரும் போது பெருமளவு கருத்துக் குவியலை ஆங்கிலக் கட்டுரைகளிற்றான் காணக்கூடியதாக இருக்கிறது. இதேயளவு கருத்துச் செறிவு தமிழ்ப் பகுதியிலும் நிறைந்திருப்பின் பன்மடங்கு மகிழ்ச்சி தந்திருக்கும்.

சென்சீனத்தின் சிறுபான்மையர் நிலை (National Minorities in China) என்ற ஆங்கிலக் கட்டுரை இங்கு வாழ் செந்தமிழ் பேசும் மக்களின் சிந்தனைக்கு ஓர் விருந்தென்றே கூற வேண்டும். இக்கட்டுரையைப் படிக்கும் போது சீனத்தில் உள்ள ஆறு சத விகித சிறுபான்மையினருக்கு அந்நாட்டின் அரைப் பகுதிக்கு மேலான இடத்தை அவர்களின் மரபு வழித் தாயகம் எனக் கொடுத்திருக்கும் பெரும்பான்மை இனத்தின் பெருந்தன்மையையும், இங்கு ஈழத்தில் சிங்களப் பெரும்பான்மையினர் இங்குள்ள சிறுபான்மையினர் மொழியுரிமை குடியுரிமை ஆகியவற்றைப் பறித்ததோடு அவர்களின் வாழ்விடத்தையும் முற்றுகையிட முனைந்திருக்கும் இனவெறியையும் ஒப்பிட்டுப் பார்த்து ஏங்காது இருக்க முடியாது.

தமிழ்ப் பகுதியில் இ. வா. ஜெகநாதனின் 'கல்விக் கோயில்' என்ற கட்டுரையும் திரு. மு. வ. வின் "மதிப்பாய் வாழும் நிலை" என்ற கவிதையும திரு க. கைலாசபதியின் "நாவலர் பாதையில்" என்ற புதுக் கண்ணோட்ட கட்டுரையும் மற்றும இன்னோரன்ன பிறவும் படித்துப் பயன்பெறத்தக்கனவென்று கூறலாம்.

—ஈழவேந்தன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி வளர மக்களுக்கு அரசுரிமை தேவை

## ஆங்கிலம் அகிலம் முழுவதும் பரவ முடிந்தது இதனால்தான்

## தமிழ் உரைநடை வளர்ந்த வரலாறும்

### அதில் உள்ள சிறப்புகளும் குறைபாடுகளும்

ராஜன் சுவாமிநாதன் எம். ஏ.

மொழி பாட்டாகவே பிறந்தது என இன்றைய மொழி நூலறிஞர் கருதுகின்றனர். உரைநடையிலும் பார்க்கப் பாட்டுப் பழமையானது. இந்த உண்மை பொதுவாக எல்லா மொழிகளுக்கும் பொருந்துவதாகக் காணப்படுகிறது. தமிழ் மொழியைப் பொறுத்தவரையிலும் பாட்டே பழமையானது. நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களுள் சங்க இலக்கியங்களே மிகப் பழமையானவை. அவை அனைத்தும் பாட்டாக இருப்பது கண்கூடு.

தொல்காப்பியத்தில் உரைநடைபற்றிய குறிப்புக்கள் சில காணப்படுகின்றன. தொல்காப்பியத்திற்குக் காலத்தால் பின்தோன்றியதெனக் கருதப்படும் சிலப்பதிகாரம் உரைநடையிட்ட செய்யுள் எனவும் போற்றப்படுகிறது நமக்குக்கிடைத்த பண்டைய நூல்களுள் சிலப்பதிகாரத்தில்தான் முதன் முதலாக உரைநடையின் தோற்றத்தைக் காண்கிறோம்.

#### உரையாசிரியர்கள்

சிலப்பதிகாரத்திற்குப்பின் இறையனார் களவியலுரை ஒரு சிறந்த உரைநடை நூலாகக் கருதப்படுகிறது. பின் பன்னிரண்டாம் நூற்றுண்டளவில் தமிழ் உரைநடைக்குப் புத்துயிர் வழங்கப்பட்டது. செய்யுளாகத் தோன்றிய பல இலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் உரையாசிரியர் பலர் உரைவகுக்கலானுர்கள். நச்சினர்க்கினியர், பேராசிரியர், பரிமேலழகியார், இளம்பூரணர், சேனவரையர், அடியார்க்கு நல்லார் ஆகியோர் குறிப்பிடத்தக்க உரையாசிரியர்கள்.

#### உரைநடைச் சிறப்பு

இவர்களுடைய உரைநடையிலே ஓர் அழகைக் காணலாம். ஒவ்வொரு சொல்லுக்கும் உயிர் உண்டு; ஒவ்வொரு சொல்லும் பொருளைத் தெளிவாக உணர்த்தும். எடுத்துக் கொண்ட பொருளைத் தெளிவாக வரையறுத்துக் கூறி படிப்பவர்களை மயங்க வைக்காத பண்பையும் இவர்களின் உரைநடையில் காணலாம். கருத்திற்குக் கட்டுப்படாது எழுதுகோல் தானுக எழுதிச் செல்லும் போக்கை இந்த உரையாசிரியர்களின் உரைநடையில் காண முடியாது. மேலும் அவர்களுடைய நடை கம்பீரமான நடை; கட்டுப்பாடுடைய நடை. அவர்கள் நடையில் எளிமையைக் காண முடியாதெனினும் உரைநடையின் உயர்வைக் காண முடிகிறது.

#### நாவலர் உரைநடை

இந்த உரையாசிரியர்களின் மரபைப் பின்பற்றி பிற்காலத்துத் தமிழறிஞர்கள் உரைநடையை வாழச் செய்தார்கள்; செம்மையாக அமையச் செய்தார்கள். பத்தொன்பதாம் நூற்ருண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஆறுமுக நாவலர் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு சிறந்த இடம் பெற்றுள்ளார். உரையாசிரியர்களின் உரைநடையில் எதுகை மோனை ஒலிக்கிறது. அங்கு பாட்டு நடையின் செல்வாக்கை ஓரளவு காண முடிகிறது. ஆயின் நாவலரின் உரைநடையில் எளிமையுண்டு; தெளிவும் உண்டு. நாவலர் நடை பேச்சு நடையோடு ஒத்துப்போகக்கூடியது.

தமிழ் உரைநடையை முதன்முதலாகத் திறம்படக் கையாண்ட பெருமை ஆறுமுக நாவலர்க்கு உரியது என்றும் தமிழ் உரை நடைக்கே அவர் தந்தை என்றும் அறிஞர் போற்றுவர்.

#### பாதிரிமார் உரைநடை

ஆறுமுக நாவலருக்கு முன் இங்கு வந்த மேல்நாட்டுக் கிறிஸ்தவ பாதிரிமார்களும் தமிழ் உரைநடையில் ஈடுபட்டனர். கிறிஸ்தவர் இங்கு வந்த காலத்தில் அவர்கள் நாட்டில உரைநடை வளர்ந்து செழிக்கத் தொடங்கிவிட்டது. அவர்கள் தம் மதத்தைப் பரப்புவதற்கு உரைநடையை ஒரு சிறந்த வாயிலாகக்கொண்டனர். ஆதலால் தமிழர்களிடையே தமிழர் போல வாழ்ந்து தமிழைப் படிக்கலானுர்கள். அவர்கள் மதத்தொண்டாற்ற வேண்டும் என எண்ணித் துணிந்தவர்கள். ஆதலால் அத்தொண்டாற்றுவதற்கு வேண்டியவற்றை பல தொல்லைகளுக்கிடையேயும் செய்து முடித்தார்கள். அந்நாட்களில் பண்டிதர்களிடம் தமிழ் பயில்வதென்ருல் எளிதன்று.

பெஸ்கியின் அவிவேக பூரண குரு கதை ஒரு நல்ல உரைநடை இலக்கியம். தமிழ் நாட்டிலே பெஸ்கி, வீரமாமுனிவர் என்றே அழைக்கப்பட்டார். வீரமாமுனிவர் இயற்றிய சதுர அகராதியும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் துணை புரிந்தது.

#### சிறு கதைகள் நாவல்கள்

தமிழ் நாட்டில் இவ்வாறு தவழத் தொடங்கிய உரைநடையை சில அறிஞர்கள் புதிய துறைகளில் பயன்படுத்தத் தொடங்கினர். நாவல் சிறுகதை என்பன தமிழுக்குப் புதியவை. மேல்நாட்டார் தொடர்பாலும் உரைநடையின் வளர்ச்சியாலும் நாவல் சிறுகதை எழுதும் முயற்சி தமிழ்நாட்டிலும் தோன்றியது. முதன் முதலில் தமிழில் எழுதப்பட்ட 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் நாவல் ஆங்கில நாவல் முறையை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. இதனை எழுதியவர் பத்தொன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த வேதநாயகம் பிள்ளை என்பவர். இவ்வாறு திரு வ. வெ. சு. ஐயர் 'மங்[illegible]' என்னும் சிறுகதையை எழுதி பின்தோன்றிய சிறுகதை எழுத்தாளர்க்கு வழி காட்டினுர்கள். இவர்களைப் பின்பற்றி இன்று தமிழ்நாட்டில் நாவலும் சிறுகதையும் எழுதுபவர் தொகை பெருகியுள்ளது.

#### தனித்தமிழ் இயக்கத்தின் பிறப்பு

தமிழ் உரைநடையில் வடமொழிச் சொற்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலம் ஒன்று இருந்தது மணிப்பிரவாக நடை நிலைத்திருந்த காலத்தில் வடமொழிச் சொற்கள் அளவின்றித் தமிழில் புகுந்தன. "தனித் தமிழ் உண்டோ?" "ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்று அறையவே நாணுவர் அறிவுடையோரே" என்ற குரல் எழுப்பப்பட்டது. இந்தக் குரலே பிற்காலத்தில் தனித் தமிழ் இயக்கத்தின் பிறப்பிற்குக் காரணமாக அமைந்தது.

#### இலக்கியம் ஒரு சிலரின் உடைமை ஆயிற்று

வடமொழிப் பற்றும் மோகமும்கொண்ட பலர் தூய தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் தடையாக இருந்தார்கள். அந்நாட்களில் தமிழ் நாட்டில் பார்ப்பனர்களே செல்வாக்குடையவராகவும் படித்தவராகவும் இருந்தனர். மற்றையோர் ஒருசிலரே ஆங்காங்கு காணப்பட்டனர். சாதி வெறியும் தலைவிரித்தாடியது. ஆதலால் இலக்கியம் ஒருசிலரின் உடைமையாக இருந்தது செல்வாக்கோடு வீற்றிருந்த டாக்டர் சாமிநாதையர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டையும் தாமோதரம்பிள்ளை அவர்கள் செய்த தொண்டையும் ஆராய்ந்து தாமோதரம்பிள்ளையை சாமிநாதையர் எவ்வாறு மதித்தார் என்பதனையும் சற்றுச் சிந்திப்பவர்களுக்கு உண்மை விளங்கும்!

#### வடமொழி மோகம்

அந்நாட்களில் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் ஆசிரியர்களாக இருந்தவர்களில் பெரும்பாலோர் வடமொழி மோகம் கொண்டவர்களே. ஆதலால் வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதும் பழக்கத்தையே மாணவர்கள் மேற்கொண்டனர். அது மட்டுமன்றி திருமணம், மகிழ்ச்சி போன்ற சொற்களைத் தாம் எழுதும் கட்டுரைகளில் எழுதினுல் அவற்றை அடித்து 'கல்யாணம்,' 'சந்தோஷம்' என்று எழுதும் ஆசிரியர்களும் இருந்தனர்!

#### தனித் தமிழ் அறிஞர்கள்

இந்த நிலையை எதிர்த்து தனித்தமிழ் வாழும் என்ற

(9-ம் பக்கம் பார்க்க)

## மண்ணிலே போட்ட

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வை வேறு சில மரங்கள் வேலி அமைப்புக்கும் மறைப்புக்கும் உபயோகப்படும். மேலும் ஆடு மாடு, கோழி குஞ்சு முதலியவை கோடையிலும் கொதி வெயிலிலும் மரங்களின் நிழலில் தங்கி ஓய்வெடுப்பதால் அவை நோய்வாய்ப்படாது நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து நிறைந்த பயனைத் தருகின்றன. இன்னேரன்ன பயன்கள் மரங்களை வைத்து வளர்ப்பதால் ஏற்படுகின்றனவாதலால் கிராமப்புறங்களில் வாழ்வோர் தம் சிறு துண்டுக் காணியிலும் வீட்டுக் கொல்லைப்புறத்திலும் பல பயன்தரு மரங்களை வளர்ப்பதால் நன்மையாகும்; வருவாய்க்கும் வழியாகும்.

#### பனை, தென்னையும் நடலாம்

முக்கனிகள் என்று நம் தமிழ் இலக்கியங்களில் தித்திக்கப் பேசப்படும் மா, பலா, வாழை என்னும் பழ மரங்கள் நம் ஈழநாட்டுக் கிராமங்களில் நன்கு செழித்து வளரக் கூடியவை. இம் முக்கனிமரங்கள் தழைத்து வளர்வதற்குத் தகுதியான சுவாத்தியமும் ஏற்ற நிலப்பாங்கும் எம் நாட்டில் உண்டு. இவைபோக, தோடம், எலுமிச்சை, திராட்சை, பப்பாளி, கொய்யா, முருங்கை, விளா ஆகிய பல வகைப் பழமரங்களையும் தருக்களையும், இந் நாட்டுக் கிராமப் பகுதிகளில் ஏராளமாக உண்டாக்கலாம். வீட்டுக் கொல்லையின் ஒரு புறத்தில் 20, 25 தென்னம்பிள்ளைகளை வளர்க்கலாம்; வேலி ஓரத்தில் வேருக 20, 25 பனைகளை வைத்து உண்டாக்கலாம்; கிணற்று நீரை நம்பிக் கமஞ் செய்யும் கிராமங்களில், வாய்க்கால் மருங்குகளில் அகத்தியைப் பயிர் செய்யலாம்; நிழலுக்காக வேம்பு, புளி, போன்ற மரங்கள் இரண்டொன்றை நடலாம்.

#### மருந்துச் செடிகள்

இன்னமுங் கூறப்போனுல் வீட்டு வைத்தியத்துக்குத் தேவையான மருந்துச் செடிகளையும், குடும்பப் பெண்மணிகள் தலையில் சூடிக் கொள்வதற்கான ரோசா, மல்லிகை, முல்லைச் செடி வகைகளையும் வீட்டுத் தோட்டத்தில் வைத்து வளர்க்கலாம். இவ்வாருக உண்பதற்கும் உணவு தயாரிப்பதற்கும், வைத்தியத்திற்கும் வைத்தழகு பார்ப்பதற்கும், நிழல் தருவதற்கும் நிறுத்திவைத்து வேலி போடுவதற்கும் உபயோகமான மரங்களைக் கிராம மக்கள் தம் தோட்டங்களில் வைத்து வளர்த்து வந்தால் அவர்களுடைய அன்ருடக் குடும்பச் செலவுகள் குறைந்து, வருவாய் அதிகரித்து வாழ்க்கைத்தரம் உயரும்.

#### நாற்று நடுவது நலம்

தன் வீட்டுத் தோட்டத்திலும் காணியிலும், பழ மரங்களைப் பயிர் செய்யும் கிராமவாசி தன் கவனத்திற் கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள. பழ மரங்களாயினும் சரி பிறமரங்களாயினும் சரி, விதையைக் கொண்டு செடியை உண்டாக்குவதற்கு நீண்டகாலம் பிடிக்குமாதலால், மரக்கொம்பையோ, வேறிடத்தில் தயாராகியுள்ள செடியையோ கொண்டுவந்து நடுவதுதான் நல்லது. பழமரமாயின் ஒட்டுக் கன்றுகளையே நடவேண்டும். ஒட்டு மரம் விரைவில் வளரும்; அதிக இடத்தை அடைத்துக் கொள்ளாது. ஒட்டு மரத்தின் கனிகள் உருசியாகவும் சிறப்பாகவும் இருக்கும்; மரம் விரைவில் பலனளிக்கும். சொந்த உபயோகத்துக்காக அதாவது குடும்ப உபயோகத்திற்காக பழமரம் வைக்க விரும்புவோர் பலரக மரங்களையும்

(7-ம் பக்கம் பார்க்க)


மௌலானு

அச்சடி சீத்தைகள்



ரமணீகரமாக காட்சியளிக்க இன்றே தெரிவு செய்யுங்கள்

★ கண்ணைக் கவரும் டிசைன்கள்.
★ சாயம் மங்காதவை.
★ நீடிய உழைப்பு.
★ தரத்தில் உயர்வானது.

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும் புத்தம் புதிய டிசைன்களை, தெரிவு செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

மௌலானு (சிலோன்) லிமிட்.,
கொழும்பு, மருதானை, கண்டி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பழந்தமிழர் திருமணத்தில் தீ வலம் வருதல்

## ஐயர், தாலி எதுவும் இல்லை

### அன்பு, பண்பு, ஒழுக்கம், பருவம்-இவற்றின் அடிப்படையில் சாதாரணமாக நடந்தது

### ஆரியம் புகுந்ததால் சம்பிரதாயச் சடங்குகள் தோன்றின—தறுதலைகள் தவறுல் வரைமுறைகள் வந்தன

### 'காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்'—ஆதித் தமிழரின் திருமணம் பற்றிய கருத்து இதுதான்

நாகரிகம் முதிர்ந்த இக்காலத்தில், காதலைப் பற்றிப் பேசாதவரே இல்லை. காதற் கதைகளும், கவிதைகளும், காதல் திரைப் படங்களும் மலிந்து வரும் இந்நாளில் பழங்காலத்தில் காதலுக்குத் தரப்பட்ட மதிப்பே தனி.

ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பு, வடவேங்கடம் தென் குமரி ஆயிடைப் பட்ட தமிழ் கூறு நல்லுலகில் பெரும்பான்மையோர் காதலித்துத் தான் திருமணம் செய்து கொண்டனர். ஆரியர்கள் தங்கள் வாழ்க்கை முறையைப் புகுத்திக் கொண்டிருந்த அந்த நேரத்திலும் தமிழர்கள் தங்கள் காதல் வாழ்க்கையை விட்டு விடவில்லை; ஆரியரது மணமுறையை ஏற்றுக் கொள்ளவுமில்லை ஏனெனில், அவர்களது திருமணங்களில் அன்பிற்கு மதிப்புக் கிடையாது.

#### ஆரியர் திருமணமும் தமிழர் திருமணமும்

அவர்களது திருமணங்கள் பிரமம், பிரசாபத்தியம், ஆருடம், தெய்வம், அசுரம், கந்தர்வம், இராக்கதம், பைசாசம் என எட்டு வகைப் படு . இவற்றுள் பிரமம் என்பது நாற்பத்தெட்டு வயதான பிரம்மச்சாரிக்கு அதே கோத்திரத்திலுதித்த 12 வயதான மங்கையை, அவள் பருவமடைந்த ஒரு மாதத்திற்குள் திருமணம் செய்வதாகும். பிரசாபத்தியம் என்பது பரிசப் பணத்தை வரதட்சிணையை) அடிப்படையாகக் கொண்டதாகும். இப்படிப் பட்ட காதலுக்கு மதிப்பில்லாத திருமணங்களைத் தமிழர்கள் பின்பற்றவில்லை. தமிழரது திருமணங்கள் சாதி மத பாகுபாடுகளைக் கடந்து, அன்பு, அறிவு, அழகு, அருள், ஆண்மை, பொருள், ஒழுக்கம், பிறப்பு, நிறை, வயது ஆகிய பத்துப் பொருத்தங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நடந்து வந்தன.

#### மணமக்கள் சம்மதம்

மேலும் திருமணத்திற்கு மணமக்களின் சம்மதம் முக்கியமாகக் கருதப்பட்டது. ஒரு பெண்ணின் வாழ்வில் காதல் நிகழாதிருப்பின், அவளுக்கேற்றவனை பெற்றோர் தேர்ந்தெடுப்பர். பிறகு அவர்களிருவரையும் சந்திக்க வைத்து, அவர்களது உடன்பாட்டைப் பெற்ற திருமணத்திற்கு, "களவின் வழி வராத மணம்" என்று பெயர். ஆனால் இவ்வகைத் திருமணம் எங்கோ ஓரிடத்தில் மிக அரிதாக நிகழும். பெரும்பாலும் காதல் வழி வந்த திருமணங்கள் தான் நடந்து வந்தன.

#### கள்ளக் காதலும் வம்பர் அவதூறும்

அக்காலத்தில் ஒருவன் ஒருத்தியைக் காதலித்து, அவளும் அவன் மீது காதல் கொண்டால், இருவரும் பிறர் அறியாவண்ணம் கள்ளத்தனமாக பல நாட்கள் பேசி மகிழ்ந்திருப்பார்கள். அந்திப் பொழுதிலும், அகால வேளையிலும், தினைப் புனத்திலும், வீட்டின் பின் புறத்திலும் அவர்களது காதல் வளர்ந்து வரும். அந்தக் காதல் களிப்பிலே அவர்கள் திருமணத்தைப் பற்றி மறந்து விடக் கூடாது என்று எண்ணித்தானோ என்னவோ, வம்பர் சிலர் அவர்களைப் பற்றி அவதூறு பேச ஆரம்பித்து விடுவார்கள். மேலும் அவர்களது காதல் சந்திப்புகள் இரண்டு மாதங்களுக்கு மேல் நீளக் கூடாதென்று, அகப் பொருள் இலக்கணங்கள் வரையறுக்கின்றன.

"களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப"
(இறை-அகப்-32)

#### தோழியின் பங்கு

எனவே காதலிக்குக் கவலை பிறந்து விடும். அதையறிந்த காதலன் அவளது பெற்றோரிடம் சென்று திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வான். சில ஆடவர்கள் திருமணத்தைப் பற்றிய அக்கறையே இல்லாமலிருப்பதுண்டு. அப்பொதெல்லாம் காதலியின் தோழி, தன் சொல்வன்மையால் அவனை அக்கறை கொள்ளச் செய்வாள். அந்த அளவிற்கு தோழிக்கு உரிமையுண்டு.

சில சமயங்களில் தம் மகளின் காதலை அறியாத பெற்றோர், வேறோர் மணமகனைத் தேட ஆரம்பித்து விடுவார்கள். அப்போதும், தோழி தான் அவளது பெற்றோரிடம் விவரத்தை விளக்கிக் கூறி, அவளது விருப்பத்தை நிறைவேற்றி வைப்பாள். இதனால் அக்காலத்தில் நடந்த எல்லாத் திருமணங்களும் பெற்றோரின் சம்மதம் பெற்றுத்தான் நடந்தன என்று சொல்வதற்கில்லை.

#### உடன் போக்கு

சில காரணங்களை முன்னிட்டு, ஒரு சில பெற்றோர் தம் மகளின் விருப்பப்படி மணம் செய்விக்க மறுப்பதுமுண்டு அப்போதும் தோழி தான் காதலர்க்கு உதவி செய்வாள். உற்றாரும் உறவினரும் [illegible] அவள் [illegible] செய்து தருவாள். இங்ஙனம் காதலனுடன் பிறர் அறியாமல் காதலி வெளியூர் செல்வதை 'உடன் போக்கு' என்று நம் இலக்கியம் சிறப்பிக்கிறது ஆனால் இன்று இதே நிகழ்ச்சி 'ஓடிப் போனவள்' என்று இழிவாகப் பேசப்படுகின்றது

பழங் காலத்தில் பாவையொருவள் தான் விரும்பியவன் பின் சென்று விட்டால், அவள் பெற்றோர் அவளது மனவுறுதியைப் போற்றி, அவர்களிருவரையும் திரும்ப அழைத்து வந்து மணம் முடித்து வைப்பர். அப்படி அவர்கள் மணம் செய்து வைக்காவிட்டாலும் காதலர்கள் கவலைப்பட மாட்டார்கள். ஏனெனில், அந்நாளில்.

"கொடுப்போர் இன்றியும்
கரணம் உண்டே"
(தொல்-கற்: 2)

என்றபடி பெற்றோர் இல்லாமல் தாங்களே மணம் செய்து கொள்வார்கள்.

#### காதலுக்கு இருந்த மதிப்பு

இன்று, இவ்வகைக் காதலர்களை வழியில் யாரேனும் கண்டால், பழித்துப் பேசிப் பாதகம் செய்வார்களே தவிர உதவ முன் வர மாட்டார்கள். ஆனால் அன்று வழியில் யாரேனும் கண்டால் அவர்கள் மீது அனுதாபங் கொண்டு, அவர்களது நல் வாழ்க்கைக்கு வழி வகுத்துக் கொடுப்பர். மேலும் அந்தப் பெண்ணின் தாயைக் கண்டால், "அன்னாய்! மலையிடைப் பிறந்த சந்தனம் அந்த மலைக்குப் பயன் தராது; கடலிடைப் பிறந்த முத்து, அதை அனுபவிப்பவர்களுக்குத் தான் பயன்படும்; அது போலவே, பருவமடைந்த நின் மகளும் அவளது காதலனுக்குத் தான் பயன்படுவாள். அவளும் எல்லாவகையிலும் சிறந்தவனையே காதலிக்கிறாள். எனவே அவர்களைப் பிரிக்காதீர்கள்."

(கலி-9)

—என்று அக்காதலர்களுக்காக வாதாடுவார்கள்! அந்த அளவிற்குக் காதலுக்கு மதிப்புத் தந்தனர்! காதலர்களும் ஒருவர்க்கு ஏற்படும் சிறு துன்பத்தையும் மற்றவர் தனக்கேற்பட்ட மாபெரும் துன்பமாகக் கருதிக் கலங்குவர்.

#### காதல் மங்கையர் அனுபவம்

அதனால்தான் ஒரு மங்கை நல்லாள் சூடான உணவு எதையுமே உண்ண மறுத்தாள். ஏனெனில் அந்த உணவில் சூடு தன் நெஞ்சினுள் இருக்கும் கண்ணாளனைச் சுடுமே என்று பயப்பட்டாளாம்!

"நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து"
(—குறள் 1128)

மற்றொரு பூவை. "தூங்குவதற்குக் கண்ணை இமைத்தால் எனது விழிகளில் வீற்றிருக்கும் காதலர் மறைந்து விடுவாரே! அதனால் தான் இமைகொட்டாமல் விழித்திருக்கிறேன். அதையறியாத இவ்வூரார், அவர் தான் எனக்கு இந்தத் 'துயிலா நோயை'த் தந்தார் என்று அவர் மீது பழி கூறுகிறார்களே!" என்று வருந்தினள்.

"இமைப்பின் கரப்பாக்கு
அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும் இவ்வூர்"
(—குறள் 1129)

#### திருமணம் சாதாரண நிகழ்ச்சி

இத்துணை நுட்பமான காதலர்களுக்கு, அன்று திருமணம் ஒரு தடையாக இருக்கவில்லை சுமார் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு இன்பத் தமிழகத்தில் திருமணம் என்பது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகவோ அன்றி பெரிய விழாவாகவோ நடைபெறவில்லை. காதல் வயப்பட்ட இருவர் மறைவாகச் சந்தித்துத் தங்கள் காதலை வளர்த்து வருவார்கள். சின்னாட்களில் அச்சிற்றிடையாளுக்கு இல்லறத்தின் மீது பற்றுதல் தோன்றும். உடனே, அவன் அவளது பெற்றோரிடம் நேரிடையாகவோ அன்றி மறைமுகமாகவோ

(15-ம் பக்கம் பார்க்க)

# மண்ணிலே போட்ட

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்த்தல் நல்லது. பல்வகை மரங்களிருந்தால் ஏதாவதொரு பழமரம் பலன் தந்துகொண்டிருக்கும் பப்பாளி, எலுமிச்சை வகையில் ஒரு சில, வாழை, மா வகையில் நாலைந்து, இப்படியாக பல இன மரங்களைப் பயிர் செய்தால், இவை மாறி மாறி வருட முழுதும் பயன் விளைவித்துக் கொண்டிருக்கும்.

#### பழத்தோட்டத்துக்கு இரு இன மரங்கள்

ஆனால் பழவியாபாரத்திற்காகப் பழத்தோட்டம் போட வேண்டுமென விழையும் கிராமமக்கள் இரு இன மரங்களுக்கு மேல் பயிராக்கல் நல்லதல்ல. வியாபார நோக்கங்கருதிப் போடும் பழத்தோட்டத்தில் மரங்களைத்துமே ஒரே வளர்ச்சியும் பருவமும் உடையனவாக இருந்தால், பழ மரங்கள் பலன் தரும் காலம் குறிப்பிட்ட ஒரு வருடத்தில் முடிந்துவிடும். பிறகு வியாபாரம் தடைப்பட்டு முற்றாக வருவாய் இல்லாதொழியும், எனவே வியாபாரம் தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், கிராம மக்களுக்குத் தொடர்பாக வருவாய் வந்துகொண்டிருக்க வேண்டுமானால், தொடக்கத்தில் அவர்கள் ஒன்றிரண்டு இனத்தைச் சேர்ந்த பழமரங்களைப் பயிர் செய்வதுடன், இடையிடையே காலந்தோறும் புதியனவாகச் சில மரங்களை வளர்ப்பதும் இன்றியமையாததாகும்.

#### இரு இன மரங்களால் வரும் அனுகூலம்

பழத் தோட்டம் போடுவோர் இரு ரகங்களுக்கு மேல் மரம் வைத்து வளர்ப்பது நல்லதல்ல என்று சற்று முன்னர் கூறினோம். அதற்குக் காரணமில்லாமலில்லை. ஓரிருவகைப் பழ மரங்களை மட்டும் வியாபார நோக்கத்தின்பொருட்டு ஒருவர் பயிர் செய்தால் அம்மர உற்பத்தியில் அவர் கண்ணுங் கருத்துமாயிருந்து, அப்பழச் செய்கையின் விபரங்களை நன்கு அறிந்து, அதனை முன்னேற்றுவிக்க முயல்வார். அன்றியும் வெளியூர் வியாபாரத்திற்காக மொத்தமாகப் பழங்களை அனுப்பி வைப்பதற்கு ஓரிரு ரகமாயிருப்பது நல்லது. எடுத்துக்காட்டாக வட மாகாணப் பகுதிக்குரிய கிராமங்களில் வாழை, மா, திராட்சை, முருங்கை ஆகிய வற்றில் இரண்டை உற்பத்தி செய்து அவற்றைக்கொண்டு வியாபாரம் செய்து பொருளீட்டலாம். அதுபோன்று மலைநாட்டுக்குரிய கிராமங்களில் தோடம் பழம், அன்னாசி ஆகிய இருவகைப் பழமரங்களைச் சிறந்த முறையில் வளர்த்து, உற்பத்தியைப் பெருக்கலாம். இவ்வாறாக வியாபாரம் ஒன்றைமட்டும் கருதி பழ மர உற்பத்தியில் ஈடுபடும் கிராம மக்கள் ஓரிரு வகைகளைச் சிறப்பாக உற்பத்தி செய்வதே அவர்களுக்கு அதிகப் பயன் தருவதாகும்.

மேற்கூறியவற்றால் கிராமப் பொருளாதாரத்தை வளர்க்க விரும்பும் கிராமத்தவர் வருவாய்க்கான எத்தொழிலையும் அது எவ்வளவு அற்பமாகவோ சிறியதாகவோ இருப்பினும் புறக்கணிக்காது, அவற்றில் கருத்தூன்ற வேண்டுமென்பதும், அம்முறைபற்றிப் பார்க்கும் போது, கிராமங்களில் வீட்டுக்கு முன்புறம் காய்கறித் தோட்டமும் பின்புறம் பழமரத் தோட்டமும் அமைப்பதால் அம்மக்களது பொருள் வருவாய் பெருகும் என்பதும் பெறப்படும்.

(உபயம் இலங்கை வானொலி)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




● மாதத் தவணைக் கட்டணங்களில் பெறுக் கொள்ளலாம்.
● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி. கொழும்பு-11
போன் : 4243, 5080

**சுதந்திரன்**
SUTANTIRAN

1960 ஏப்ரல் மாதம் 10-ந் தேதி

194அ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.
தொலை பேசி எண்: 3411. த. பெ 1183

# இருபது தமிழ் பேசும் பிரதிநிதிகள் பகிஷ்கரித்தனர்

# கவர்ணர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்தை

## பகிஷ்காரமா? வெளிநடப்பா?

ஜனநாயக அரசியலிலே பலாத்காரத்துக்குத் துளிகூட இடமில்லை நமக்குப் பிடிக்காத ஒரு காரியத்தையோ, நிகழ்ச்சியையோ, சம்பவத்தையோ, சட்டத்தையோ ஆட்சேபிப்பதற்கும், எதிர்ப்பதற்கும் பல சாத்வீக வழிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு ஜனநாயகம் அங்கீகாரம் அளித்திருக்கிறது.

ஆத்மீகத் தலைவர்களான புத்தர், ஏசுநாதர் முதல் அரசியல் தலைவரான காந்தி மகாத்மாவரை இத்தகைய புனிதமான எதிர்ப்பு வழிகளில் சிலவற்றைக் கடைப்பிடித்து நமக்கு முன்மாதிரி காட்டியிருக்கிறார்கள்.

ஹர்த்தால், பகிஷ்காரம், வெளிநடப்பு, கறுப்புக் கொடி உயர்த்தல், சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் முதலியன அத்தகைய சாத்வீக எதிர்ப்பு வழிகளில் சிலவாகும்.

ஒடுக்கப்பட்டவர்கள் தம் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தித் தமது எதிர்ப்பைத் துலாம்பரமாகக் காட்டுவதற்கு மேற்கூறிய வழிகளில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து அனுஷ்டிப்பதை யாரும் குற்றமாகவோ, குறைவாகவோ கருத இடமில்லை.

இலங்கைப் பாராளுமன்றம் சிங்கள மக்களுக்கு மட்டும் சொந்தமான ஒரு ஸ்தாபனமல்ல. தமிழ் பேசும் மக்களுக்கும் அது சொந்தமானதாகும். சிங்கள மக்களுக்கு அங்கு வழங்கப்படும் உரிமைகள், சலுகைகள் தமிழ் பேசும் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்க, வாதாட, மறுக்கப்பட்டால் எதிர்த்து நிற்கத் தமிழ் பேசும் மக்களுக்குப் பூரண உரிமையுண்டு.

கவர்ணர் ஜெனரலுடைய சிம்மாசனப் பிரசங்கம் சிங்களத்தில் நிகழ்த்தப்படும்போது அது தமிழிலும் நிகழ்த்தப்பட வேண்டும் என்று கோருவது இந்த உரிமையின்பாற்பட்டதாகும். நியாயப்பூர்வமான இக்கோரிக்கைக்கு "கவர்ணர் ஜெனரலுக்கு தமிழ் பேச வராது. எனவே பிரசங்கம் தமிழில் பேசப்படமாட்டாது" என்று பதில் தருவது விதண்டாவாதம் ஒழிய வேறொன்றுமில்லை.

சிம்மாசனப் பிரசங்கம் முறைப்படி பிரிட்டிஷ் இராணியினால்தான் நிகழ்த்தப்பட வேண்டியது. இதை நிகழ்த்திப் பாராளுமன்றத்துக்குத் திறப்பு விழா நடத்தி வைப்பதற்காக பிரிட்டிஷ் இராணி ஒவ்வொரு தடவையும் இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வருவதில்லை.

சிம்மாசனப் பிரசங்கத்தைக் கவர்ணர் ஜெனரல் பிரிட்டிஷ் இராணியின் பிரதிநிதியென்ற முறையிலேயே நிகழ்த்துகிறார். இதுதான் அரசமைப்புச் சட்டம் தரும் வியாக்கியானமாகும். பிரிட்டிஷ் இராணிக்குச் சிங்களம் பேசத் தெரியாது. எனினும் அவருடைய பிரதிநிதியான கவர்ணர் ஜெனரல் சிங்களம் தெரிந்தவராகையால் சிங்களத்தில் பிரசங்கத்தை நிகழ்த்துகிறார். பிரிட்டிஷ் இராணி ஆங்கிலத்தில் செய்யக்கூடிய பிரசங்கத்தை அவருடைய பிரதிநிதியாக ஒரு கவர்ணர் ஜெனரல் சிங்களத்தில் நிகழ்த்தக்கூடுமானால், கவர்ணர் ஜெனரலின் சிங்களப் பிரசங்கத்தை அவர் பிரதிநிதியாக வேறு ஒருவர் தமிழில் ஏன் நிகழ்த்த முடியாது? அப்படி நிகழ்த்தினால் குடிமுழுகிப்போய்விடுமா?

மனமுண்டானால் இடமுண்டு என்பார்கள். இன்றுள்ள நெருக்கடியில், உண்மையில், பெரும்பான்மை மக்கள் சிறுபான்மை மக்களின் நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் பெற வேண்டும் என்று அந்தரங்கசுத்தியுடன் விரும்பியிருப்பார்களானால் வீண் வரட்டுக் கவுரவம் பாராட்டிக் கொண்டிராமல் சிம்மாசனப் பிரசங்கத்தை தமிழிலும் நிகழ்த்த ஏற்பாடு செய்திருக்கலாம் அல்லவா? பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்களுக்குப் பரந்த பண்பட்ட மனப்போக்கு இல்லாமலிருப்பதே இத்தகைய குறுகிய வகுப்புவாதத் திமிருக்குக் காரணமாகும்.

சிங்களத்தில் நிகழ்த்தப்படும் சிம்மாசனப் பிரசங்கம் தமிழிலும் நிகழ்த்தப்படாவிட்டால் அதை எதிர்ப்பது என்று தமிழரசுக் கட்சியினரும் தமிழ்ப் பிரதேசத்துச் சுயேச்சைப் பிரதிநிதிகளும் செய்த முடிவு சரியானது; வரவேற்கக்கூடியது. ஆனால் அவர்கள் தம் எதிர்ப்பைக் காட்டத் தேர்ந்தெடுத்த வழி சரியானதா? பொருத்தமானதா?

ஜனநாயக முறைப்படி இரண்டு சாத்வீக வழிகளில் இந்த சம்பவத்துக்கு அவர்கள் தம் எதிர்ப்பைக் காட்டியிருக்கலாம். ஒரு வழி பகிஷ்காரம் (Boycott). மற்றொரு வழி வெளிநடப்பு (Walkout).

முதல் வழியையே அவர்கள் கடைப்பிடித்தனர். அதாவது சிம்மாசனப் பிரசங்கத்தைப் பகிஷ்காரம் செய்தனர். ஆனால் இந்தப் பகிஷ்கரிப்பு உறைப்பாக அமையவில்லையென்பதை நாம் மிகவும் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். பகிஷ்கரிப்பு செய்ததைவிட கவர்ணர் ஜெனரல் தமது சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்த எழுந்ததும் இருபது பிரதிநிதிகளும் ஒன்ருக எழுந்து வெளிநடப்புச் செய்திருந்தால் அந்த எதிர்ப்பு இன்னும் பன்மடங்கு உக்கிரமானதாக அமைந்திருக்கும் என்பதே நமது கருத்தாகும்.

எதிர்ப்பு நடவடிக்கையின் அடிப்படை நோக்கம் என்ன? அதன் நோக்கம் ஒரு சமுதாயத்தினருக்கு அல்லது ஒரு நாட்டினருக்கு இழைக்கப்படும் அநீதியினால் அக்கிரமத்தினால், பாதிக்கப்பட்டவரின் உள்ளத் துடிப்பை வெளியுலகம் நன்கு அறியும் வண்ணம் சமாதானமான ஆனால் அதேசமயம் பலிதமான (Effective) முறையில் பிரதிபலிப்பதாகும்.

குறிப்பிட்ட சூழ்நிலையில் இந்த அடிப்படை நோக்கம் பகிஷ்காரத்தைவிட வெளிநடப்பினால்தான் பலிதமாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றப்பட்டிருக்கும்.

ஆரம்பக் கூட்டமாக நடைபெறும் பாராளுமன்றத் திறப்பு விழாவில் கலந்துகொள்ளும் 151 பிரதிநிதிகளில் யார்—எவர் என்பது பலருக்குத் தெரிந்திருக்க முடியாது. பத்திரிகைக்காரர்களே புது முகங்களான பிரதிநிதிகள் யார் யார் என்று தெரியாமல் திண்டாடும்போது மற்று யார் அறிந்துவிட முடியும்? அந்தக் கும்பலான ஜனக்கூட்டத்தில் யார் சமூகமாயிருந்தார்கள், யார் பகிஷ்கரித்தார்கள் என்பதைக் கணக்கிட்டுவிட முடியுமா? வராமல் இருந்தவர்கள் உண்மையில் பகிஷ்காரத்தில்தான் கலந்துகொண்டார்களா அல்லது வயிற்று வலி வந்ததனால் வரமுடியாமல்போயிற்று என்பதை எப்படி நிர்ணயிப்பது?

இந்த விஷயத்தில் தமிழரசுக் கட்சி மருமகனுக்கு முன்பு வரத் தயங்கும் மாமியாரைப்போல் மறுகிக்கொண்டது பெருந் தவருகும். தமிழரசுக் கட்சியின் தலைமையில் இருபது பிரதிநிதிகளும் ஒன்ருக உட்கார்ந்திருந்து அமைதியாக வெளியேறியிருந்தால் எவ்வளவு அழுத்தமாக அமைந்திருக்கும் அந்த நிகழ்ச்சி.

அங்கு கூடியிருந்த வெளிநாட்டுத் தூதுவர்கள், ஸ்தானீகர்கள், உலகப் பத்திரிகை நிருபர்கள், அரசியல் பிரமுகர்கள், நீதியரசர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் ஆகிய அனைவருடைய மனதிலும் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் காட்டும் ஆக்ரோஷமான எதிர்ப்பு கருத்தைத் தைத்திருக்குமல்லவா? அரிய சந்தர்ப்பம் தவறிவிட்டது.

'ஒரு இனத்துக்கு இழைக்கப்படும் அநீதியை அவ்வினம் கட்டுக்கோப்பாக, மூர்த்தண்ணியமாக, தொடர்ச்சியாக, துணிந்து முழுமூச்சுடன் எதிர்த்து நிற்பதன்மூலந்தான் விடுதலைக்கும் விமோசனத்துக்கும் வழி காண முடியும்' என்ற [illegible] தமிழரசுத் தலைவர்கள் இந்தக்கட்டத்தில் சற்றுத் தளர்ந்தது ஏனோ? தயங்கியதுஏனோ?

---

கவர்ணர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்தை இருபது தமிழ் பேசும் பிரதிநிதிகள் பகிஷ்கரித்தனர். தமிழில் அது நிகழ்த்தப்படாததே அதற்குக் காரணம் ஆகும்.

கடந்த புதன்கிழமை பி.ப. 2½ மணிக்கு இலங்கைப் பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரைக் கவர்ணர் ஜெனரல் ஆரம்பித்து வைத்துத் தமது சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் அது நடந்தது. தமிழுக்கு இடமளிக்கப்படவில்லை. அதனால் தமிழ் பேசும் பிரதிநிதிகள் மொத்தம் 20 பேர் அதைப் பகிஷ்கரித்தார்கள்.

பகிஷ்கரித்த தமிழ் பேசும் பிரதிநிதிகள் விவரம் வருமாறு:—

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் 15 பேர், யாழ்ப்பாணம் பிரதிநிதி திரு அல்பிரட் துரையப்பா, வவனியாப் பிரதிநிதி திரு டி. சிவசிதம்பரம், உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு எம் சிவசிதம்பரம், நிந்தவூர்ப் பிரதிநிதி ஜனப் எம். ஐ. எம். அப்துல் மஜீத், பொத்துவில் பிரதிநிதி ஜனப் எச். ஐ. எம். அப்துல் மஜீத்.

## உதவி இன்ஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை என்ன? ஏன் இன்னமும் உதவித் தமிழ் இன்ஸ்பெக்டர்கள் தெரிவு செய்யப்பட வில்லை என்று சுதந்திரன் நிருபர் உதவிக் கல்வி அதிபர் திரு ஈ. எச். டி. அல்விஸைக் கேட்ட போதே அவர் முன்கூறிய பதிலை அளித்தார்.

முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டது சிங்கள ஆசிரியர்களிடமிருந்து மட்டும் தான் என்றும் தமிழ் ஆசிரியர்களிடமிருந்து இம்மாத இறுதியிலோ அல்லது மே மாத முதற் பகுதியிலோ விண்ணப்பங்கள் கோரப்படும் என்றும் திரு அல்விஸ் கூறினார் முன்னர் விண்ணப்பித்த தமிழ் ஆசிரியர்களும் இனிமேல் புதிதாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

## புதிய தேர்தல் நடத்தினல்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணிர் வடித்தால் சிறீலங்கா சுதந்திரக் கட்சி இப்போதுள்ள பலத்தை ஓரளவுக்குப் பாதுகாத்துக்கொள்ள முடியும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் தோல்வியடையத்தான் வேண்டி வரும். எப்படியென்பதைப் பார்ப்போம்:

### எதிர்க்கட்சி பலக்கும்

மற்றொரு பொதுத் தேர்தல் வந்தால் இடதுசாரிக் கட்சிகள் முன்னர் விட்ட பிழையை மீண்டும் விடப்போவதில்லை. எப்படியும் ஒரு தேர்தல் உடன்படிக்கை செய்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். இப்போது அவர்களுக்கு-சமசமாஜி 10, எம் ஈ. பி. 10, கொம்யுனிஸ்டு 3-மொத்தம் 23 ஸ்தானங்கள் உண்டு. உடன்படிக்கை செய்துகொண்டால் இவர்கள் எப்படியும் கூட்டாக 35 ஸ்தானங்கள்வரை கைப்பற்றலாம். அதாவது இப்போதுள்ளதைவிட 12 ஸ்தானங்கள் அதிகப்படியாகப் பெறலாம்.

### தஹநாயகாவின் செல்வாக்கு

தோல்வியடைந்த மாஜிப் பிரதமர் திரு தஹநாயகா மீது இப்போது சிங்களப் பகுதிகளில் ஒரு பெரிய அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது. திரு தஹநாயகா நல்ல மனிதர் என்றும் நேர்மையானவர் என்றும் தோற்றுவிட்டாரே என்றும் பலர் கவலைப்படுகின்றனர்.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டியவர் திரு தஹநாயகா. வேலைநிறுத்தம் என்ற கொள்ளை நோயை ஒழித்து துறைமுகத்தில் கப்பல்கள் காத்திரா வண்ணம் செய்தார் திரு. தஹநாயகா.

சொன்ன பிரகாரம் ஒரு சிறந்த பொதுத் தேர்தலை மிகவும் ஒழுங்காகவும் கண்ணியமாகவும் நடத்தி முடித்தவர் திரு தஹநாயகா என்னெல்லாம் இலங்கையின் தென்பகுதியில் பொது ஜன அபிப்பிராயம் வளர்ந்து வருகிறது. போதாக் குறைக்கு தோல்வி கண்ட பின்னும் அவர் க்ஷேத்திர தரிசனம் செய்வதன் மூலம் பக்தியுணர்ச்சியுள்ள பௌத்த சமுதாயத்தினரின் நல்லெண்ணத்தைப் பெற்று வருகிறார்.

எனவே அடுத்த பொதுத் தேர்தலில் திரு. தஹநாயகாவினுடைய எல். பி. பி. கட்சி ஒரு ஐம்பது இடத்துக்காவது போட்டியிட்டால் குறைந்த பட்சம் 15 ஸ்தானங்களையாவது கைப்பற்ற இடமுண்டு என்று தெரிகிறது. அதாவது இப்போதுள்ளதை விட 11 ஸ்தானங்கள் அதிகப்படி.

### கட்சி நிலைமை

இந்த ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் சேர்ந்து இப்போது கையிலிருப்பதிலிருந்து 20 ஸ்தானங்களையாவது இடது சாரிகளுக்கும், எல். பி. பி க்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டியிருக்கும்.

சிங்களப் பகுதியில் இந்த நிலை ஏற்பட தமிழ்ப் பகுதிகளிலிருந்து 20 பிரதிநிதிகளாவது தமிழரசுக் கட்சியில் வருவார்கள் என்பது நிச்சயம்.

ஆகையால் அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின் கட்சிகளின் நிலை ஓரளவுக்

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பேசும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு மாறான கட்சி அது. பெரும்பாலான சிங்களம் பேசும் மக்களும் யு. என். பியை எதிர்க்கிறார்கள். பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்த்தது யு. என். பி. கண்டி யாத்திரை ஏற்பாடு செய்து அதன் மூலம் உடன்படிக்கை ரத்தாவதற்கும் 1958 கலவரத்துக்கும் வழி செய்தது. அதனால் யு. என். பியைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்கக் கூடாது.

### சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிக்க வேண்டும்

"சுதந்திரக் கட்சி 1958 கலவரத்தில் என்ன பங்கு கொண்டிருந்தாலும் அந்தக் கட்சி யு. என். பி யை விடச் சிறந்தது. சிங்களவர்களில் முற்போக்கு எண்ணமுடையவர்கள் அந்தக் கட்சியில் இருக்கிறார்கள். சமசமாஜக் கட்சி, கொம்யுனிஸ்ட்டு கட்சி ஆகிய எதிர்க் கட்சிகளும் யு. என். பியை அல்ல சுதந்திரக் கட்சியைத்தான் ஆதரிக்கலாம். ஆகவே தமிழரசுக் கட்சியும் சுதந்திரக் கட்சியை ஆதரித்து ஸ்திரமான அரசாங்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பதுதான் புத்திசாலித்தனம்.

"உரிமைகளை அதிகம் கேட்டுக் கொண்டு இருப்பதற்கு இது தருணமல்ல. சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் தமிழரசுக் கட்சி காரியமாற்ற வேண்டும்."-இவ்வாறு திரு. சண்முகதாஸன் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி வளர மக்களுக்கு....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையை உணர்த்திய பேரறிஞர் மறைமலையடிகளாரைத் தமிழகம் என்றென்றும் பாராட்டும். தனித் தமிழில் கொண்டிருந்த பற்றினால் வேதாசலம் என்னும் தம் பெயரையே தனித் தமிழில் மறைமலை என வழங்கச் செய்தார். இவர்களைப் பின்பற்றி சூரிய நாராயண சாஸ்திரியாரும் பரிதிமாற் கலைஞர் எனத் தம் பெயரை மாற்றினார். தனித்தமிழ் இயக்கத்திற்கு நீலாம்பிகையம்மையார் செய்த தொண்டையும் நாம் மறப்பதற்கில்லை. இந்த இயக்கம் இன்று செல்வாக்குப் பெற்றுவிட்டது. திரு. வி. க. நாவலர் சோமசுந்தர பாரதியார், டாக்டர் மு. வ. போன்ற அறிஞர்கள் தாம் எழுதிய நூல்களைத் தூய தமிழிலே எழுதி இருக்கிறார்கள். பன்மொழிப் புலவரும் வடமொழி நன்கு கற்றவருமான தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களும் தனித்தமிழிலே எழுதுகிறார்கள்.

தனித்தமிழிலே சில பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இன்று வெளிவருகின்றன வென்றால் இந்த இயக்கம் காலப் போக்கில் முழு வெற்றியடையும் என்பதற்கு ஐயமில்லை. பத்திரிகைகளில் கூட விஞ்ஞானம் என்ற சொல் அறிவியல் எனப்படுகிறது.

தமிழ் நாட்டில் அவ்வப்போது தோன்றிய பல பத்திரிகைகளும் தமிழ் உரைநடையை வளர்த்தன என்பதில் ஐயமில்லை. பத்திரிகைத் தமிழில் எளிமையைப் புகுத்தியவர் திரு. வி. க. அவர்களே. இதனைக் கல்கி அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### எழுத்துத் தொழில்

இன்றைய இலக்கியம் அனைத்தும் உரைநடையைக் கருவியாகக் கொண்டுள்ளது. கவிதையோ செய்யுளோ எழுதுபவர் மிகச் சிலர். ஆயின் பொழுதுபோக்குக்கு எழுதும் காலம் மறைந்து எழுத்தைத் தொழிலாகக் கொள்ளும் காலம் தோன்றிவிட்டது. ஆதலால் பொது மக்களின் விருப்பத்தைப் புறக்கணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் நூல்களின் தரத்தைக் காலம் என்னும் உரைகல் உரைத்துக் காட்டும். மக்கள் விருப்பம் எக்காலத்திலும் ஒன்றாக இருப்பதில்லை. மனித இனத்தின் அடிப்படை விருப்பம் மட்டும் மாறுவதில்லை.

### ஆங்கில நடை

ஆங்கிலேயருடைய செல்வாக்கை நாம் வாழ்க்கை முறையில் மட்டுமல்லாமல் நாம் எழுதும் மொழியிலும் காண்கிறோம். இன்றைய எழுத்தாளர்களில் சிலர் ஆங்கிலத்தை அப்படியே பின்பற்றி எழுதுகிறார்கள். அவர்களுடைய வாய்க்கியம் தமிழாக அமைவதில்லை, இதற்குக் காரணம் ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் எழுதுவதே. எடுத்துக் காட்டாக you are cordially invited என்பதனை 'நீங்கள் அன்பாக அழைக்கப்படுகிறீர்கள்' என எழுதுபவரும் உண்டு.

### பேச்சு நடையும் எழுத்து நடையும்

தமிழ்ப் பேராசிரியர்களிடமிருந்து தமிழ் மொழியைக் காக்க வேண்டும்; பேச்சு மொழியில் எழுத வேண்டும் என்ற குரலும் இன்று கேட்கிறது. நாம் தமிழில் பேசுகிறோம்; எழுதுகிறோம். நாளிது வரை பேச்சுக்கும் எழுத்துக்கும் வேறுபாடு இருந்தே வருகிறது. இதுகாறும் கூறியவற்றைப் பேச்சு மொழியில் எழுதினால் எவ்வாறு அமையும்? காலப்போக்கில் தமிழுக்கு இன்னும் ஒரு தங்கை (அல்லது பிள்ளை) பிறந்து விடுமா? பேச்சுத் தமிழில் எழுதுவது இலக்கியத்தின் ஒரு பிரிவாக அமையுமா? இவற்றையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பேச்சு மொழியில் வழங்கும் ஒரு சில சொற்களை இன்று நாளிதழ்களும் வார இதழ்களும் பயன்படுத்துகின்றன. பேச்சு மொழி நாட்டிற்கு நாடு, நகரத்திற்கு நகரம், மாவட்டத்திற்கு மாவட்டம், கிராமத்திற்குக் கிராமம் வேறுபடுவதைக் காண்கிறோம். ஈழ நாட்டுப் பேச்சு மொழியில் வழங்கும் சில சொற்களைத் தென்னகத்துத் தமிழர் விளங்கிக் கொள்ள மாட்டார். எடுத்துக்காட்டாக காடையர் என்ற சொற்பொருள் அவர்களுக்குத் தெரியாது. காடையர் என்ற சொல் ஈழத்தில் எழுத்திலும் பேச்சிலும் வழங்குகிறது.

### கலப்பின் விளைவு

பேச்சு வழக்கில் எழுதுவதால் சொற்கள் வளரும்; சுவை மிகும்; பேச்சு மொழிக்கு உயிர் அதிகம் என்று கருதுபவர்களும் உண்டு. காலப்போக்கில் பேச்சு மொழியிலுள்ள நல்ல சொற்கள் எழுத்து மொழியிலும் மெல்ல மெல்லப் புகுந்துவிடும் எனலாம்.

சொல்லின் பொருள் ஒன்றாக இருக்க அச்சொல் வேறு பொருளைக் குறிப்பதாகக் கையாளப்படுவதாயும் இன்றைய உரைநடையில் காணலாம். 'பாவிப்பு' என்ற சொல்லை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

(13-ம் பக்கம் பார்க்க)

## புதிய தேர்தல்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

குப் பின்வருமாறு தான் என்று கணிக்கக் கூடியதாக இருக்கிறது.

| | |
|---|---|
| எஸ் எல். எப். பி. | 40 |
| யு. என். பி. | 35 |
| தமிழரசுக் கட்சி | 20 |
| சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்டு கட்சி | 20 |
| எம். ஈ. பி. | 15 |
| எல். பி. பி. | 15 |
| இதரர்கள் | 6 |
| | 151 |

### தமிழரசுக் கட்சியின் முக்கியத்துவம்

மேற் கூறிய முறையில் கட்சி நிலையை அமைந்தாலும் தமிழரசுக் கட்சி ஒரு கேந்திர ஸ்தானத்தை வகிக்கும் என்பது தெளிவாகிறதல்லவா?

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுப் புதுத் தேர்தல் நடந்தாலும் இன்றுள்ள சிக்கல் தீர்ந்து விடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

தமிழ்ப் பேசும் மக்கள் மட்டும ஒரே கட்சியில் சேர்ந்தவர்களாகப் பார்த்துத் தங்கள் பிரதிநிதிகளைத் திரும்பவும் தேர்ந்தனுப்புவார்களேயானால் அவர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதில் வெற்றியடைவது நிச்சயம்.

## மக்கள் விரும்பாத . . .


(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யில்லாத செயலாகும். காரணம் அது அரசியல் அரங்கில் இருந்து நீக்கப் பட வேண்டிய சட்டமாகும்.

### தமிழ் பேசும் மக்கள் தீர்ப்பு

தமிழ் பேசும் மக்கள் தமக்கு ஒற்றை ஆட்சி அரசமைப்புச் சட்டம் தேவையில்லை; கூட்டாட்சி அமைப்புச் சட்டம் வேண்டும் என்று கடந்த பொதுத் தேர்தலில் தீர்ப்புக் கூறிவிட்டார்கள் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து 15 பிரதிநிதிகளை அவர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்து அனுப்பியதன் மூலம் இந்தக் கருத்தையே அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ் பேசும் மக்களின் ஒருமித்த குரலுக்கு சிங்கள அரசாங்கம் செவி சாய்க்கப் போகிறதா அல்லது தாம் பெரும்பான்மை இனம் என வெறும் வீரம் பேசி—சிறுபான்மை இனத்தின் சீற்றத்திற்கு ஆளாகி இலங்கையிலே இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வழி வகுக்கப் போகிறதா? சிறிது காலம் பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழ் பேசும் மக்களின் ஒருமித்த உரிமைக் குரலுக்கு, அன்போடு விடுக்கும அரைகூவலுக்கு சிங்கள அரசாங்கம் செவி மடுக்கின்—மதிப்பளிக்கின் நிச்சயம் செந்தமிழ் பேசும் மக்க[illegible]—நல்லுறவுண்டு என்று அறுதியிட்டுக் கூறலாம்.



வல்வை:

# மின்சார விநியோகம் அங்குரார்ப்பணம்

## துரைரத்தினம் எம்.பியால்

வல்வெட்டித்துறைப் பட்டின சபைக்கு சுன்னாகம் அரசினர் மத்திய மின்சார நிலையத்திலிருந்து கிடைத்துள்ள மின்சார விநியோகத்தை பருத்தித்துறைத் தொகுதியின் புதிய பாராளுமன்ற அங்கத்தவர் திரு க. துரைரத்தினம் கடந்த முதலாந் தேதி அங்குரார்ப்பணஞ் செய்து வைத்தார். நீண்ட நாட்களாக வல்வெட்டித்துறைப் பட்டினத்துக்கு இருந்து வந்த மின்சாரத் தட்டுப்பாடு இப்போது நீங்கிவிட்டதெனலாம்.

அங்குரார்ப்பண விழா வைபவம் சம்பந்தமாகச் சில தில்லுமுல்லுகள் நடந்தன. திரு துரைரத்தினம் மின்சார விநியோகத்தை அங்குரார்ப்பணஞ் செய்து வைப்பதைத் தடுப்பதற்குத் திட்டமிட்டுச் செயல்புரிந்த பட்டின சபை அங்கத்தவர் ஒருவரின் முயற்சி பட்டின சபைத் தலைவரின் திடமான உறுதிப்பாட்டினால் படுதோல்வி அடைந்தது.

திரு துரைரத்தினம் பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டதும் மேற்படி விழாவினை அவரே அங்குரார்ப்பணஞ் செய்து வைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பட்டின சபை அங்கத்தவரும் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணியின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வி கண்டவருமான திரு சுந்தரலிங்கம் பட்டின சபையில் தீர்மானம் கொண்டு வந்து திரு துரைரத்தினம் மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைப்பதைத் தடுத்து நிறுத்திவிட விழைந்தார். எனினும் அவருடைய முயற்சி பலனளிக்கவில்லை.

# வெளிநாட்டு 'ஸ்காலர்ஷிப்' பெற சிங்களம் அவசியமில்லை

## தமிழரசார் எதிர்ப்பு வென்றது

வெளி நாடுகள் வழங்கும் ஸ்காலர்ஷிப்புகளைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழி தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற விதியை தமிழரசுக் கட்சியினரின் எதிர்ப்புக் காரணமாக கல்வி அமைச்சர் திரு. பி. எச் அலுவிஹாரா ரத்துச் செய்து விட்டார். இத் தகவலைத் திரு அலுவிஹாரா பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தைச் சந்தித்தபோது தெரிவித்தார்.

வெளிநாடுகள் வழங்கும் ஸ்காலர்ஷிப்புகளைப் பெற்று வெளிநாடுகளுக்குப் பயிற்சிக்காகச் செல்லும் மாணவர்களுக்கு சிங்களம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும் என்ற ஒரு பாரபட்சமான விதியை முன்பு இருந்த கல்வி அமைச்சர் திரு. தஹநாயகா கடைப்பிடித்து வந்தார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாராளுமன்றத்தில் பேசிய வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அநீதியான இவ்விதி பற்றிக் குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

செக் நாடு வழங்கியிருக்கும் உபகாரச் சம்பளத்தைப் பெற விண்ணப்பிக்கும் மாணவருக்கு சிங்களம் தெரிந்திருக்க வேண்டும் என்று 'சுஸட்' பத்திரிகையில் விளம்பரம் வெளிவந்திருப்பதாகவும், இதனால் தமிழ் மாணவர் பங்குபற்ற முடியாமல் இருக்கிறதென்றும் திரு அமிர்தலிங்கம் சுட்டிக் காட்டிக் காரசாரமாகப் பேசினார்.

வியாழக்கிழமை திரு இராசமாணிக்கத்தைச் சந்தித்த கல்வி அமைச்சர் [illegible] பிரஸ்தாப விதியை [illegible] செய்துவிட்டதாக அவரிடம் தெரிவித்தார்.

சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச்சிறந்தவை

கொழும்பு கொமேர்ஷல் கொம்பனி லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 629



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீப் டிக்கட்!

சிறுகதை — எழுதியவர்: 'முல்லைச்சிவன்'

"ஐயா, சுவீப் ரிக்கட் ......சுவீப்ரிக்கட்......ஐம்பது சதம், ஐம்பது சதம்."

"வேண்டாம் அப்பா கொண்டு போ"-சலிப்புடன் கூறினேன்.

ஆஸ்பத்திரி சுவீப் என்று ஒன்றைத் தொடங்கிய காலம் முதல் இன்று வரை நானும் தான் எடுத்து வருகிறேன் இந்த சுவீப் ரிக்கட்டை. அட எடுத்த ரிக்கட்டுகள் அத்தனைக்கும் தான் அதிர்ஷ்டம் அடிக்க வேண்டாம், எடுத்தவற்றுள் ஒன்றுக்காவது விழக்கூடாது? போகுது சனியன். இனி மேல் வேண்டாம் இந்த ரிக்கட் ஆசை"-இப்படி நினைத்துக்கொண்டு, ஏறினேன் பஸ்ஸில்.

ஐயா, வந்தால் ஐம்பதினாயிரம், போனால் ஐம்பது சதம். இன்றைக்கும் ஒன்றை எடுத்துப் பாருங்கள்," வழமையான அதே பல்லவியைப் பாடினான்.

இப்படி அவன் சொல்லிச் சொல்லி, எனக்கு விற்ற டிக்கட்டுகளின் பெறுமதியே ஐம்பதில்லை, ஒரு லட்சம் ரூபா வரும். எப்படியானாலும் பாழாய்ப்போன மனம் தான் கேட்குமா?

"இன்று பாக்கிற்கு போகவில்லை. போயிருந்தால், வசந்திக்கும் எனக்கும் கடலைக்கே ஐம்பது சதம் செலவாகிப் போயிருக்கும். அந்த ஐம்பது சதத்திற்கு இன்றைக்கு மட்டும் ஒரு சுவீப் ரிக்கட் வாங்குவோம்" இப்படி ஒரு நினைவு தட்டித் தந்தது.

என் பொக்கட்டிலிருந்த ஐம்பது சதம் அவன் பொக்கட்டுக்கு மாறியது.

ரோஜா நிற ரிக்கட்டை கிழித்து என் பொக்கட்டுக்குள் திணித்துக் கொண்டேன். அந்த ரோஜா நிறம் 'பாக்' கையும் வசந்தியையும் நினைவூட்டியது.

"டிங்...டிங்..."

பஸ், நிலையத்தை விட்டுப் புறப்பட்டது பருத்தித்துறையை நோக்கி ஓடத் தொடங்கியது.

என் சிந்தனை விமானம் வசந்தியைத் தேடி 'பாக்'கிற்கு ஓடியது.

★

இப்போ வசந்தி என்னை எதிர்பார்த்து 'பாக்'கில் காத்திருப்பாள். நான் வழக்கமாக ஆபீஸ் முடிந்ததும் 'பாக்'கிற்குப்போவேன். அவளும் பாடசாலையால் நேரே வருவாள். ஐந்தரை மணி வரை அந்த ரோஜா செடி அருகே உள்ள பெஞ்சில் நானும் அவளும் ஒட்டினாற் போலிருந்து கொஞ்சிக் குலாவுவோம். அந்தநேரத்தில் நாம் அடையும் ஆனந்தத்தை, இன்பத்தை கம்பனாலோ, பாரதியாலோ எவராலுமே வர்ணித்துவிடமுடியாது.

அன்று ஞாயிற்றுக்கிழமை நானும் வசந்தியும் இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவள், அருகில் இருந்த ரோஜா செடியிலுள்ள மலரை தன் மலர் கன்னத்துடன் வளைத்து ஒட்ட வைத்தபடி, "வாசு உங்களுக்கு இந்த ரோஜா மலரைப் பிடிக்குமா?" என்று கேட்டாள்.

நான் தடுமாறினேன்.— இரண்டில் எது ரோஜா மலர் என்று புரியவில்லை. இரண்டும் சிவந்த ரோஜா மலராகவே தெரிந்தது. இருந்தும் அவள் முகம் மலரை விட மிஞ்சி விட்டது அழகில்.

"இல்லை, அந்த ரோஜாவைப் பிடிக்காது; இந்த ரோஜாவைத்தான் பிடிக்கும்," என்று அவள் கன்னத்தில் தட்டினேன்.

"போங்கள், நான் அதையா கேட்டேன்? எனக்கு ரோஜா மலர், ரோஜா நிறம் என்றால் கொள்ளை ஆசை, வாசு"

"அப்படியா? அப்படியானால் உனக்கு நான் எடுக்கும் சாறி, சட்டை எல்லாமே இனி ரோஜா நிறத்தில்தான். கல்யாண வைபவத்திற்கு உடுக்க எடுக்கும் 'அந்த'ச் சேலை, சட்டை கூட ரோஜா நிறத்தில் தான். சரியா, வசந்தி?"

"அந்த இன்ப தினம் எப்போ வாசு வரும்?"

"அது பற்றித்தான் நானும் பல நாட்களாக சிந்தித்தேன். சென்ற இரவு தான் அம்மாவின் மூலம் அப்பாவுக்குத் தெரிவித்தேன். அம்மா அதை அப்பாவுக்கு தெரிவிக்கும் போது அம்மாவின் மேல் புலிபோலப் பாய்வார், டீசல் என்ஜினைப் போல இரைவார் என்று அஞ்சி, இதயத்தை கையில் பிடித்தபடி அடுத்த அறையில் இருந்தேன்.

என்ன அதிசயம்! நான் எதிர்பார்த்தபடி அப்பா பாயவுமில்லை, இரையவுமில்லை! 'உனது வழியில் தூரத்து உறவு என்கிறாயே, பெண்ணும் படித்தவள், ஆசிரியை, தம்பிக்கும் பிடித்தவள் என்று நீ கூறும் போது எனக்கு ஆட்சேபனையே இல்லை.''

என் ஆச்சரியம் மேலும் அதிகரித்தது. அப்பா தான் அப்படிப் பேசுகிறாரோ? என்ற சந்தேகம் எனக்கு. மெல்ல வெளியே சென்று, கதவின் இடை வெளியினூடாகப் பார்த்தேன். சந்தேகமில்லை, அப்பா தான் அங்கே பேசிக்கொண்டிருந்தார்!

எம் திருமணம் தொண்ணூறு வீதம் நிறைவேறி விட்டதாக எண்ணி ஆனந்தப்பட்டேன். அப்பா இடையில் ஒரு பெரும் பாறையை போட்டார் என் இதயத்தில்.

"சீதனம்......?"

"......" அம்மா மௌனம் சாதித்தாள். அவளுக்குத் தெரியும் வசந்தி உங்கள் கஷ்ட நிலையை.

அப்பா பேசினார்: "தம்பி" அக்கவுண்டன்ட்-அவன் தராதரத்திற்கு எப்படியும் ரொக்கமாக ஒரு பதினைந்து, நகை—நட்டாக, வீடு—வாசலாக குறைந்தது ஒரு அறுபது, மொத்தம் எழுபத்தைந்து வாங்க வேண்டாமா, செல்லம்?" என்று அம்மாவைக் கேட்டார் அப்பா.

அம்மா தொடர்ந்து மௌனம் சாதித்தாள்.

"என்ன, சொல்லு செல்லம்"

"எதற்கும் பெண் வீட்டாரைக் கேட்போம்" என்றாள் அம்மா.

அப்படியா வாசு? நானும் நேற்றுத்தான் அக்காவின் மூலம் அம்மாவிடமும் அப்பாவிடமும் தெரிவித்தேன். அவர்கள் ஆராய்ச்சியில் வெற்றி பெற்ற விஞ்ஞானியைப் போல ஆனந்தப்பட்டார்கள். ஆனால் அவர்கள் ஆனந்தம் கண நேரந்தான் வாழ்ந்தது.

"சீதனத்துக்கு வழி வேண்டுமே?" என்று கேட்டு, ஆனந்தத்தைச் சாகடித்தாள் அம்மா.

மூவரும் சிந்தித்தனர். பின், உங்கள் பெற்றோரை கண்டு பேசிக் கொள்ளுவதாக முடிவு செய்துள்ளனர்" என்றாள் வசந்தி. அவள் முகத்தில் கவலை ரேகைகள் படரத் தொடங்கின.

நான் அவளைச் சமாளிக்க முயன்றேன்.

"வசந்தி, என்னைப் பொறுத்த மட்டில் நானே உனக்கு சீதனம் தந்து உன்னைப் பெறவும் தயார். ஆனால், என் அப்பா...? அவர் ஒரு போக்கானவர். 'பணம், பணம்' என்று சதா பணத்தையே நினைப்பவர்; இதற்கு அனுமதிக்க மாட்டார்."

வசந்தி பேசாமல் இருந்தாள். நான் தொடர்ந்து சொன்னேன் —

"அப்பா, எனக்கு பெண் வீட்டார் தரும் சீதனத்தால் உங்களுக்கு ஏதாவது நன்மை உண்டா? ஏன் இப்படி "சீதனம்" "சீதனம்" என்று உளறுகிறீர்கள்? பணம் ஒன்று தான் வசந்தியிடம் இல்லை. வேறு அவளிடம் இல்லாதது என்ன? அவளைவிட இல்வாழ்க்கைக்கு உகந்த ஒரு பெண்ணை உங்களால் தேடித் தர முடியுமா? உங்களுக்கு ஏன் அப்பா இந்த அர்த்தமற்ற ஆசையும் பிடிவாதமும்? நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நான் வசந்தியைத்தான் மணந்துகொள்ளப் போகிறேன்." என்று அவருடன் தர்க்கம் போட்டிருந்தால், எம்மிடையேபிரிவு ஏற்பட்டிருக்கும். குடும்பம் அக்கு வேறு ஆணி வேறு ஆக குலைந்துபோய் குடும்பத்தின் கௌரவமும் விலைகூறப்பட்டிருக்கும். அத்துடன் பெற்றோரின் சம்மதமின்றி, ஆசிர்வாதமின்றி மேற்கொள்ளும் இல்வாழ்க்கை ஒருபோதும் சீர் சிறப்புடன் நிலைபெற்று வாழ முடியாது ஆதலால், பெற்றோரின் ஆசிர்வாதத்துடன்தான் நாம் நம் இல்வாழ்க்கையில் புகவேண்டும். இல்லையா வசந்தி? உன் கருத்தென்ன?

"முற்றிலும் உண்மை. பெற்றோரின் மனதைக் கோணவைக்கக்கூடாது, வாசு"

எம் கருத்து ஒருமித்திருந்ததில் ஒரு திருப்தி. எப்படியானாலும் படித்தவள் அல்லவா?

"அப்படியாயின் அவர்களின் சம்மதத்தை பெற முடியாதபடியால், பிரமச்சாரிகளாகத்தானே வாழ வேண்டும்?"

"வேறு வழி ஏது, வாசு?"-தேம்பினாள்.

"கலங்காதே வசந்தி. நல்லவர்களை கடவுள் ஒரு போதும் கைவிடமாட்டார்."

ஆறு மணியாகிவிட்டது. இருள் படரத் தொடங்கியது வசந்தியின் முகத்திலும் முந்திய செந்நிறம் கலைந்து. கவலை என்னும் கருமை படிந்திருந்தது. இருவரும் கவலையைச் சுமந்துகொண்டு வீடு சென்றோம்.

அம்மா என்னிடம் வந்து, "தம்பி, வசந்தியின் பெற்றோர் தம்மால் பத்தாயிரத்திற்குமேல் தர தம்மிடம் வசதியில்லை என்று கூறியுள்ளார்கள். அப்பாவோ அறுபதினாயிரத்திற்குக் குறைந்தால் விவாகப் பேச்சையே எடுக்க வேண்டாமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்" என்று கூறினாள்.

வசந்தியின் பெற்றோர் வறியவர்கள். அவள் ஆசிரியையாகுமுன் அன்றாட வாழ்க்கைச் செலவுக்கே திண்டாட்டப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்கள் அறுபதினாயிரத்திற்கு எங்கே போவார்கள்?

அப்பாவின் முடிவையும் வசந்தியின் நிலைமையையும் தெரிந்துகொண்ட பின்னும் வசந்தியை சந்திப்பதற்கு நான் விரும்பவில்லை. சந்திப்பதிலும் பேசுவதிலும் என்ன பலனைத்தான் அடைய முடியும்? வீணாக நம் ஆசையைக் கூட்டி, ஏக்கத்தை அதிகரிப்பதே அன்றி வேறு எந்த நன்மையுமில்லை. இதை எண்ணி, 'பாக்'கிற்குப் போவதை இரண்டு நாட்களாக நிறுத்திக்கொண்டேன்.

★

"நல்லூர்...நல்லூர்..." கண்டக்டர் என்னைப் பார்த்துச் சொன்னான்.

நான் நல்லூரில் இறங்க வேண்டியவன் என்பது அப்போதுதான் நினைவு வந்தது. இறங்கி வீட்டிற்கு நடையைக் கட்டினேன்.

வசந்தியை சில நாட்களாக சந்திக்காதது பெரும் சங்கடமாக இருந்தது நித்திரை, சாப்பாடு எதுவுமே இல்லை எனக்கு. இப்படியே மேலும் இரண்டு நாட்கள் எப்படியோ கரைந்தன.

நாலு மணிக்கு ஆபீஸ் வேலையைமுடித்துக்கொண்டு வெளியே வந்து பக்கத்திலிருந்த கடையில் அன்றைய பத்திரிகை ஒன்றை வாங்கிப் படித்தேன்.

"சுவீப் முடிவுகள் ஐந்தாம் பக்கத்தில்" என்று முதலாம் பக்கத்தில் போடப்பட்டிருந்தது.

'ஐந்தாம் பக்கம்!-சை, முதலாம் பக்கத்தில் போட்டிருந்தால், "டக்"கெனப் பார்க்கலாமே. இது இரண்டு பக்கங்களைப் புரட்ட வேண்டியிருக்கிறதே!' என்று என் மனம் அவசரப்பட்டது.

ஐந்தாம் பக்கம்—

சுவீப் முடிவுகள்...

எனது ரிக்கட்...?

பொக்கட்டுக்குள் கையை விட்டு துளாவி எடுத்தேன். என் உள்ளத்தைப்போல ரிக்கட்டும் கசங்கிப்போயிருந்தது.

அவசர அவசரமாக நம்பர்களைப் பார்த்தேன். என் கண்களால் நம்பவே முடியவில்லை. எனது நம்பரும் முதலாம் பரிசிற்குரிய நம்பரும் சரியாக இருந்தது!

ஆனால்...? எனது ரிக்கட்டின் முன் எழுத்திற்கும் பத்திரிகையில் இருந்த எழுத்திற்கும் வித்தியாசம்-எனது ரிக்கட் 'G' பரிசிற்குரிய ரிக்கட் 'C' —சை, சை! என்ன ஏமாற்றம்!!

என்றாலும் எனக்கு ஒரு சந்தேகம்-என் கண்கள் என்னை ஏமாற்றி இருக்கக்கூடுமென்று. பக்கத்தில் கண்ணாடி அணிந்திருந்த ஒருவரிடம் (அவருக்கு நன்றாகத் தெரியும் என்ற நினைவில்) கொடுத்து, "அச்சு சரியாக பிடிக்கவில்லைபோலிருக்கிறது. தயவு செய்து பாருங்கள் இந்த எழுத்து 'G' தானா அல்லது 'C' யா என்று" என் மனம் பட்ட அவஸ்தை. அவசரம் சொல்ல முடியாது.

"என்ன மிஸ்டர், பளிச்சென்று தெரிகிறதே பாருங்கள், 'G' போல இல்லை...?

"ஆமாம், சரிதான் 'G' தான்"—அவசரகாரனுக்கு புத்தி மத்திமம்.

முதல் பரிசு அடித்துவிட்டேன் என்பதையும் சொல்லவில்லை, நன்றியையும்கூடத் தெரிவிக்கவில்லை, ரிக்கட்டை இறுக்கிப் பிடித்துக்கொண்டு தலைகால் புரியாமல் ஓடினேன், 'பாக்'கிற்கு.

நேரம் நாலரை மணி. வசந்தியும் வரும் நேரந்தான். ஆனால் அவள் இன்று வருவாளோ இல்லையோ? சற்றுப் பொறுத்திருப்போம் என்று பெஞ்சில் இருந்தேன். இருக்கத்தான் முடிந்ததா? ஒரு நிமிடத்திற்கு ஒன்பது தடவை வீதம் பலமுறை பாக்கைச் சுற்றினேன்.

என் காதலரசி—வசந்தி வந்தாள்! அவளை அடையாளமே கண்டுகொள்வது சிரமமாய் போய்விட்டது. கவலை அவளை வாட்டிவிட்டது அப்படியாக.

"வசந்தி......!"

"வாசு......!"

(15-ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன், பாவாடை, கிமோனோ முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருள் வளம் பெருக்கும் தொழிலாளப் பெருந்தகையாளர் பேட்டி

## சுண்ணும்புத் தொழில் பற்றிய சுவையான தகவல்கள்

[ பேட்டி கண்டவர்: "மாலதி" ]

அந்தத் தகரக் கொட்டகையின் நடுவே, சுமார் நான்கு அடி உயரத்தில் தக தக என்ற தணல் குவியல். அதை அழகாகத் திரையிட்டுத் தழுவிக்கொண்டு மகிழ்ந்தது தீக்கொழுந்து. அப்போது மாலை ஏழு மணி!

"திரு கிருஷ்ண பிள்ளை இருக்கிருரா?"

"அவர் இப்போது தான் வெளியே போயிருக்கிருர்."

வெள்ளை வெளேரென்று குவிந்து கிடந்த சல்லிக் கற்களைக் கூடையிலே அள்ளிக்கொண்டிருந்த இளைஞன் தான் பதில் தந்தான்.

'கிளிக்'... ஆமாம் அந்தக் காட்சியைக் 'கமரா' கௌவிக் கொள்ளத் தவறவில்லை. ஆனல் அடுத்த நாட்காலையிலும் அதற்கு வேலையிருந்ததை அது அறிந்ததோ என்னவோ!

"இந்த நீற்றுச் சூளையை வைத்து நடத்துபவர் கிருஷ்ணபிள்ளை தானே!"

"அவரிடம் தான் நான் வேலை செய்கிறேன். அவரை நீங்கள் சந்தித்துக் கொண்டே போகலாமே!"

இளைஞன் குறிப்பிட்ட இடத்திலே திரு கிருஷ்ண பிள்ளையைச் சந்தித்துவிட்டு வீடு திரும்பினேன்.

அடுத்த நாள் அங்கு நான் போனபோது, அந்த இடமே வெறிச்சோடிக் கிடந்தது. 'சல்லி'க் கற்குவியல் மாத்திரம் என்னை வரவேற்கச் சிரிப்பது போல் வெள்ளை வெளேரென்று காட்சி தந்தது. திகைத்து நின்றேன். "என்னடா இது, ஒருவரையும் காணுமே!" சுற்றும் முற்றும் பார்த்தேன். அந்த இளைஞன் இரைக்க இரைக்க ஒடி வந்தான். வியர்த்துக் கொட்டியது. பாவம்! என்னைக் கண்டு விட்டு, எத்தனை அவசரமாக வந்திருக்கிருன்! இதற்கிடையிலே கதவைத் திறந்து கொண்டு வீட்டினுட் புகுந்தான் அவன்.

பக்கலிலே கிடந்த பலகைக் கட்டிலிலே பாய் விரிக்கப் பட்டது. அமைதியாக அமர்ந்தேன்.

'நீங்கள் எந்தப் பத்திரிகைக்கு நிருபர்?"

அந்த இளைஞன் முதன் முதலாகத் துணிந்து கேட்ட கேள்வி இது.

"நான் எந்தப் பத்திரிகைக்கும் நிருபரில்லை. உங்களைப் போன்ற தொழிலாளிகளை, சுதந்திரனிலே அறிமுகப் படுத்துகிறேன்"

எங்கள் பேட்டி இளைஞனின் கேள்வியுடனேயே ஆரம்பமாயிற்று.

நான் இவ்வளவையும் அளந்துகொண்டு போகிறேனே எங்கே பேட்டி நிகழ்ந்ததென்று கூருமல்! கோட்டை முனையிருக்கிறதே!- அதுதான் மட்டக்களப்புச் சந்தைக்குப் பின்புறமாக;- அங்கே இருக்கும் முதலாவது நீற்றுச் சூளை!

"உங்களுடைய பெயரைச் சொல்லவில்லையே!"

"என்னுடைய பெயரா?" ஒரு சின்னச் சிரிப்புச் சிரித்தான் இளைஞன். "சி. தம்பு!"

"நாங்களில்லாவிட்டால் இன்றைய நாகரிகமெல்லாம் போச்சுது ஏனென்று கேட்கிறீர்களா? நீறில்லாமல் கட்டிப் பாருங்களேன் வீடு! சரி, அதுதான் போகட்டும்; தாம்பூலம் போட்டு இதழுக்குச் சாயம் கொடுத்து விட முடியுமா உங்களால்? வெற்றிலை போட்டுப் பாருங்களேன். வெள்ளையடித்துப் பாருங்களேன். வெள்ளையென்ருல், 'ஸ்னே' வையும், டால்கம் பௌடரையும் நான் சொல்லவில்லை. வீட்டுக்கு வெள்ளையடிப்பதைத் தான் சொல்கிறேன். இவையெல்லாம் சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். கோபித்துக்கொள்ளாதீர்கள்.

"இதோ குவியலாய்க் கிடக்கிறதே, இதுதான் 'சல்லிக்கல்'. கற்குடாவிலே இந்தக் கல் எடுக்கப்படுகிறது. அங்கேயே ஒரு லொறி சல்லிக் கல், ரூ 37-50 சதம் கொடுத்து வாங்குகிறோம். கொண்டுவரும் கூலிரூ 35-00 ஏற்றிப் பறிப்பவர்களுக்கு ரூ 10-00 எல்லாம், ஒரு லொறிக்கு ரூ 82-00 முடிகிறது.


"ஒரு லொறிச் சல்லி எங்கள் சூளையிலே மூன்று தடவைக்கு அளவாயிருக்கும். சல்லியுடன் கரியும் கலந்து, சூளையிலே நிரப்பித் தீ வைப்போம். இரவு முழுதும் கழிந்து, அடுத்த நாட்காலையிலே அவற்றை இறக்கி, அரை அடிக் கனத்திலே பரப்பி வைப்போம். அதன் பின் தண்ணீர் தெளித்தவுடன் சுடுபட்ட சல்லி பூக்கத் தொடங்கும். நீறு பூத்ததும் அதை குவித்து விற்க வேண்டியதுதான்.

"சிப்பிகளைச் சுட்டே சுண்ணும்பு எடுக்கப்படும். இந்தச் சிப்பிகளை, 'தகரம்' ரூ. 31-00 வீதம் முகத்துவாரத்தில்வாங்குவோம். நீறு சுடுதுவபோலவே சுண்ணும்பும் சுடப்படுகிறது. நீற்றிலும் பார்க்க அதிக நீர் ஊற்றப் படுவதே இதில் ஒரு வித்தியாசம். குழைத்தெடுத்ததும் சுண்ணும்பு விற்பனைக்குத் தயாராகிவிடும்.


"ஒரு புசல் நீறு, சில்லறையாக ரூ. 1.50 தாகவும் மொத்தமாக, 70 சதவீதமும் நாங்கள் கொடுக்கிறோம். எங்கள் நீறு அம்பாறை வரை செல்கிறது. கட்டை போட்டுக் கூட நீறு சுடுகிருர்கள் ஆனல் கரி போட்டுச் சுடும் நீறே சிறந்தது.

"சுண்ணும்பு, புசல் ஆறு ருபாவாக விற்பனையாகிறது. நாங்கள் சிறு சிறு குடலைகளாகக் கட்டி, குடலை ஒன்று இரண்டு சத வீதமும் கொடுக்கிறோம். வியாபாரிகள் அதை ஐந்து சதமாக விற்கிருர்கள்.

"எங்கள் சூளையில் ஒரு தடவையில் 30 புசல் சுண்ணும்பும் 60 புசல் நீறும் பெறலாம்.



சல்லியுடன் கரியும் கலந்து சூளையை நிரப்பிவிட்டால் அப்புறம் தீ வைக்க வேண்டியதுதான்.



சூளையிலிருந்து வெந்த கல்லிலே நீர் தெளித்தவுடன் நீறு பூத்துவிடும்.



இவைதான் சூளக்குப் போய் சுண்ணும்பாகும் சல்லிக் கற்கள். சிறுவன் அள்ளிக் கொண்டிருக்கிருன்.

'பெரும்பாலும் இந்தத் தொழிலிலே காலையிலும் மாலையிலும்தான் வேலையிருக்கும்."......

தம்பி தம்பு, தனது தொழில் மகத்துவத்தைக கூறி முடித்து விட்டான். அவனைத் தனிப்பட்ட முறையில் சும்மா விட்டு வைப்பதா?

"உங்கள் ஒன்றுவிட்ட தமயனிடம்தானே வேலை செய்கிறீர்கள். வருவாய் எப்படி?"

"நாட்கணக்கிலே கூலியில்லை. ஒரு கொட்டு நீறு பூக்க வைத்துக் கொடுக்க, ரூ. 4 50 தருகிருர். அத்தோடு அயலிலே கொண்டு கொடுக்கும் ஒவ்வொரு மூடைக்கும் கூலி 25 சதம். கூறப் போனல் நாளொன்றுக்குரூ 4-00 கிடைப்பதாகச் சொல்லாம். வருடத்தில் 7 மாதமே நல்ல வேலை நடக்கும். நாளொன்றுக்கு ரூ. 2 50 வரை செலவாகும். படம் பார்ப்பது உடுப்பு எல்லாம் சேர்த்தால் கையும் கணக்கும் சரிதான்."

"நல்ல வேடிக்கைதான். உங்களுக்கு எழுத வாசிக்கத் தெரியாதா?"

"ஏடொன்றைக் கொடுத்துப் பாருங்களேன்; அப்பாவின் எழுத்துப் போல எனறு அழத் தொடங்கிவிடுவான்" ......இப்படிக் கூறிக்கொண்டு வந்தமர்ந்தார் திரு. கிருஷ்ணபிள்ளை. தம்பு எங்களிடமிருந்து நழுவிவிட்டான். அவரோடு பேச்சுக் கொடுத்தேன்.

"தம்பு உங்களிடம் எவ்வளது காலமாக இருக்கிருன்?"

"மூன்று வருடமிருக்கும். பெற்ரேரில்லை. ஒரு தமயனுண்டு அவனும் நாடோடி."

"உங்களுக்கென்று சங்கங்கள் ஏதாவது இல்லையா?"

"ஏனில்லை? ஐக்கிய சுண்ணும்புத் தொழிற் சங்கமிருக்கிறது அது 17-11-55ல் ஸ்தாபிக்கப்பட்டுப் பதிவு பெற்றது அங்கத்தவர் 21 பேரிருக்கிருர்கள். கைத்தொழில் இலாகா எங்களைப் புறக்கணித்து நடக்கிறது. தனதிகாரி நான்தான். பண உதவி கிடைக்காவிட்டாலும் கூட சங்கத்தில் இப்போது ரூ. 200/- வரை சேமிப்பு இருக்கிறது."

"அப்படியா? நல்லது. நீங்கள் பத்திரிகைகள் வாசிப்பீர்களல்லவா? உங்களுக்குப் பிடித்தமான பத்திரிகை எது?"

"நேராகவே சொல்லி விடுகிறேன். சுதந்திரனேதான்."

இன்னும் 1958 வகுப்புக் கலவர காலத்தில் நடந்த சில சம்பவங்கள்பற்றியும் திரு கிருஷ்ணபிள்ளை சொன்ஞர். பொழுதுபோனதே தெரியவில்லை.


சுதந்திரன் இல்லையேல் சுபீட்சமில்லை



**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழிக்க, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'சூர்யகலா பத்தும் பெற்று நீ பெரு வாழ்வு வாழு'

## ரஸிகர் ஒருவரின் ஆசி நடிகையை கலக்கியது


ரஸிகர் ஒருவர் தமக்கு அனுப்பிய ஆசி தம்மை அப்படியே கலக்கியடித்து விட்டதாகக் கூறினார் நடிகை சூர்யகலா. "சூர்யகலா, பத்தும் பெற்று நீ பெருவாழ்வு வாழு" என்று அந்த ரஸிகர் ஆசிச் செய்தி அனுப்பியிருந்தாராம். "போயும் போயும் பத்தும் பெற்றுத்தானா பெருவாழ்வு வாழ வேண்டும்? பத்தைப் பெற்றுவிட்டால் கிடைப்பது பெருவாழ்வா அல்லது தெருவாழ்வா? அதை நினைத்தாலே பயமாயிருக்கிறது" என்கிறார் சூர்யகலா.

ரஸிகர்களைப்பற்றி அவர் சில சுவையான தகவல்களையும் வெளியிட்டார். அவர் சொன்னதாவது:-

"எங்காவது நான் காரில் போகும்போது கார் சற்று நின்றாலும் போதும்; சூழ்ந்து கொண்டுவிடுகிறார்கள் ரஸிகர்கள். எனக்குக்கூட நினைவில்லாத சில கதாபாத்திரங்களின் பெயர்களைச் சொல்லி அழைக்கிறார்கள். சில வசனங்களையும் சொல்கிறார்கள். சற்று தள்ளி நின்று 'சூர்யகலா டோய்;' என்று 'ஆய்... ஊய்...' குரல் எழுப்புகிற ரஸிகர்களையும் கண்டிருக்கிறேன். 'மின்னல் பூச்சி ஜாக் கட்டு' என்று பாடுபவர்களையும் பார்த்திருக்கிறேன்.

"பத்திரிகைக்காரரிடமிருந்து தப்பித்துவிடலாம். படப்பிடிப்பாளரிடமிருந்தும் விடுபட்டுவிடலாம். நன்கொடை கேட்க வருகிறவர்களிடமிருந்தும் மீண்டுவிடலாம். ஆனால் இந்த ரஸிகர்களிடமிருந்து தப்பிப்பது என்பது சொப்பனத்தில்கூட நடக்காது. அந்தத் தொல்லைக்கு எல்லையே கிடையாது.

"இப்படிச் சிலசமயங்களில் எனக்கு அலுப்புச் சலிப்பை உண்டாக்கினாலும் ரஸிகர்கள் இல்லையென்றால் புகழுக்கு ஏது பெருமை என்றுதான் முடிவுக்கு வருகிறேன்"—இவ்வாறு நடிகை சூர்யகலா கூறினார்.



"ஆஸ்பத்திரியில் நீ நர்ஸாக இருக்கலாம்; ஆயினும் வெளியில் நீ என் மனைவிதானே அதில்லாவிட்டால், சரி இப்போதைக்கு காதலிதானே,, என்று கனிவோடு குனிந்து நெற்றிப் புருவங்களை ஒட்ட வைத்து நிலைத்த கண்களால் கணேசன் பேசுவதன் அர்த்தம் புரிகிறதா? வாசு பிலிம்ஸ் 'கைராசி' என்ற படத்தில் சரோஜாதேவி—ஜெமினி கணேசன்.

# வில்லன்களின் தொல்லைகள்

## வில்லாதி வில்லன் பாலையா

### அனுதாபத்துடன் சொல்கிறார்

வில்லன்களைக் கண்டால் மற்றவர்களுக்கு எப்படியோ! எனக்கு அவர்களிடம் அனுதாபம் உண்டாகி இருக்கிறது! அதற்குக் காரணம் நான் வில்லனாகப் படங்களில் நடிக்கிறேனே அதனால்.

சிந்தித்துப் பார்த்தால் கதையில் வரும் வில்லன்களினால்தான் கதாநாயகனுக்கு கௌரவம் கிடைக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட பெருமைக்குக் காரணமாக விளங்கும் வில்லன்களிடம் எந்தக் கதாநாயகனுக்காவது அன்பு இருக்கிறதா?

ஊஹூம் கிடையாது ஐயா கிடையாது!

அந்த வில்லாதிகள் தாங்கள் உடற்கட்டுடன் இருந்தாலும் சோணிக் கதாநாயகர்கள் தருகிற 'அடி'க்குத் துவண்டு விழுகிறார்கள்!

கதாநாயகனைவிட அழகாக இருந்தாலும் கதாநாயகியைச் சில ஆயிரம் அடிகள் காதலித்துவிட்டு, அப்புறம் சகோதரனாகிறார்கள். அல்லது, 'என்னை மன்னித்துவிடு' என்று முணுமுணுக்கிறார்கள். இன்னும் கதையின் தலைவிதிப்படி அவனுக்கு இஷ்டமில்லாவிட்டாலும் குடிக்க வேண்டியதிருக்கிறது. விழிகளைச் சுழற்ற வேண்டியதிருக்கிறது. இன்னும் சீட்டாட்ட கிளப்புக்குச் சென்று காசு வைத்து சீட்டு ஆடி, அடிதடி ஸ்டண்டுகளுக்கு ஈடு கொடுக்க வேண்டியதிருக்கிறது. இவையெல்லாம் இல்லையென்றால் குறைந்தபட்சம் பணத்தையாவது கொள்ளையடிக்கத் திட்டம் தீட்ட வேண்டும்.


இவை எதுவுமே இல்லையென்றால் அவன் வில்லாதி வில்லனாக முடியுமா?

ஒருவன் கதைக்கு நாயகன் என்று சொல்லிக்கொண்டு ஒரு பெண்ணுக்குப் பின்னால் சிறு புல்லைக் கடித்துத் துப்பிக்கொண்டே 'காதல்' என்ற பெயரால் சுற்றிக் கொண்டே இருப்பான்! ஆனால் அதே பெண்ணுக்குப் பின்னாலோ முன்னாலோ வில்லன் போனால் அது குற்றம்—[illegible] 'கிளிக்' சென்றோ, 'கண்டாளா' என்றோ கத்திவிட்டு ஓடி விடும், நைலான் நடையில்.

சில நாட்களாக இந்தச் சினிமா வில்லன்களுக்கு ஒரு விமோசனம் ஏற்படுவதில்தான் என் உள்ளம் திட்டமிட்டு வருகிறது.

இருக்கட்டும்! இருக்கட்டும்! கண்டுபிடிக்கிறேன் சரியான வழி ஒன்றை.

—பாலையா



பட விமர்சனம்:

# கடன் வாங்கி கல்யாணம்

தலைப்புதான் கடன் வாங்கி கல்யாணமே தவிர கல்யாணம் ஆகும் கட்டத்தில் எவரும் எவரிடமும் கடன் வாங்காமலே கல்யாணங்கள் ஒன்று இரண்டல்ல மூன்று நடந்துவிடுகின்றன. ஆனால் கல்யாணம் நடைபெறுவதற்கு முன்னால் சொந்தச் செலவுகளுக்காக திவான் பகதூர் பாலையாவும் அவர் சகா தங்கவேலுவும் முடிந்த இடங்களிலெல்லாம் இயன்றளவு தொகையை வாங்கிக்கொண்டு கடைசியில் கடன் அறவிட வருபவர்களிடம் அட்டகாசம்பண்ணுகிறார்கள்; சாமி வேஷத்தில் சாகஸம் செய்து தப்பிக்கொள்கிறார்கள்.

விஜயாவின் தயாரிப்பு. அனுபவம் பெற்ற நாகிரெட்டியும் சக்கரபாணியும் தயாரித்திருக்கிறார்கள். பிரசாத் டைரக்ட் செய்திருக்கிறார். ஜெமினி கணேசன், சாவித்திரி, தங்கவேலு, ஈ. வி. சரோஜா, பாலையா, டி. ஆர். ராமச்சந்திரன், ஜமுனா, சாரங்கபாணி, முத்துலட்சுமி, ரங்கராவ் முதலான முன்னணி நட்சத்திரங்கள் நடித்திருக்கிறார்கள்.

எத்தனைதான் சிறந்த நடிகர் நடிகைகள் நடித்தாலும் கதை அம்சம் கெட்டியாக இருக்க வேண்டும். அப்போதுதான் நடிப்பும் சோபிக்கும். இந்த உண்மை படத்தைப் பார்க்கும்போது பளிச்சென்று தெரிகிறது.

நாடுகாத்த நங்கை என்ற பெயரில் நாடகம் ஒன்றையும் சினிமாவில் சேர்த்திருக்கிறார்கள். காட்சிகள் கண்ணை உறுத்தும் வர்ணத்தில். என்றாலும் ஈ. வி சரோஜாவின் நடனமும் பாவமும் நம்மை ஈர்க்காமல் இல்லை.

மிஸ்லியம்மா படப்பாட்டுகளின் மெட்டில் கடன் வாங்கி கல்யாணம் படப்பாட்டுகள் சில வருகின்றன. அனுபவிக்கக்கூடியவை. வாஹினி ஸ்டுடியோ அல்லவா? அதனால் உபயோகிக்கப்பட்ட 'செட்டு'களின் எண்ணிக்கைபற்றியும் படப்பிடிப்பின் தரம்பற்றியும் சொல்லத் தேவையில்லையே! அதற்கெல்லாம் ரொம்ப ரொம்பச் செலவு செய்திருக்கிறார்கள்.

கொழும்பு கிங்ஸ்லியிலும் மற்றும் சினிமாஸ் [illegible] னத்தாரின் முக்கிய [illegible] டர்களிலும் இப்படம் [illegible] பிக்கப்படுகிறது.


# 'ஹொன்னப்ப பாகவதர் நினைவு எப்பொழுதும் வருகிறது'

## சரோஜா தேவி சொன்னது

இன்றைய சினிமா உலகில் புகழ் பெற்று விளங்கும் நடிகை சரோஜாதேவி சொன்னார்: "ஹொன்னப்ப பாகவதரின் நினைவு தான் இன்று நான் நடிக்கக் காரில் ஏறும் போதெல்லாம் வருகிறது. மறக்க முடியாதவர் அவர்".


"அவர் வீடு தேடி வந்து என்னை சினிமாவில் நடிக்கும்படி வற்புறுத்தினார் அப்போது நான் சிறுமி. 'ஊஹூம் மாட்டேன்' என்று பிடிவாதமாகச் சொன்னேன். விட்டாரில்லை, எப்படியோ தாஜாபண்ணி காளிதாஸ் என்ற படத்தில் நடிக்க என்னை ஒப்பந்தம் செய்துவிட்டே வீட்டை விட்டு நகர்ந்தார்" என்று சரோஜாதேவி மேலும் சொன்னார்.

டைரக்டர் நீலகண்டனும், டைரக்டர் ஸ்ரீதரும் தம்மால் மறக்க முடியாத மற்றுமிருவர் என்றும் சரோஜாதேவி சொன்னார். "டைரக்டர் நீலகண்டன்தான் எனக்கு தமிழ் நன்றாகப் பேசக் கற்றுக் கொடுத்தார். கல்யாணப்பரிசு டைரக்டர் தாம் மட்டும் அந்தப் படத்தின் மூலம் பெருமை அடைந்து விடாமல் என்னையும் உருக்கமாக நடிக்க வைத்து எனக்கும் புகழ் தேடித் தந்தார். இவர்களை எல்லாம் எப்படி நான் மறப்பேன்" — இவ்வாறு சரோஜாதேவி சொன்னார்.



இன்பம் காண ஏங்கும் இளம் நங்கை ஒருத்தி இன்னொருத்தியைச் சிவிச் சிங்காரித்து விடுவதென்பது சாதாரணமாக நடக்கக் கூடிய காரியமா? தாம்பரம் லலிதாவை எம். என். ராஜம் இப்படியெல்லாம் சிங்காரிப்பது ஜூபிடர் "அமுதவல்லி" என்ற படத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்மினியின் கலக்கத்தைப் போக்க யாருமில்லையா? கமால் பிரதர்ஸ் ஏ. வி எம். ஸ்டுடியோவில் தயாரிக்கும் 'தெய்வப் பிறவி' யைப் பார்த்த பின்னர் தான் பதில் சொல்லமுடியும்.

## பங்குனி உத்தர மகோற்சவம்

கொழும்பு கொம்பனித் தெரு சுப்பிர மணிய சுவாமி கோவிலில் 10-4-60-ல் பங்குனி உத்தர மகோற்சவம் விமரிசையாக நிகழ விருக்கின்றது. கூட்டு வழிபாடு முதலிய பல பக்தி நிகழ்ச்சிகளுடன் இரவு 7.00 முதல் 11.00 மணிவரை அகில இந்திய வானொலி புகழ் திரு. என். ராதா கிருஷ்ணனின் நாதஸ்வர இசைக் கச்சேரியும் நடைபெறும் என்று தெரிகிறது.

---

### ஆண்டு விழா

கொழும்பு கொச்சிக்கடை ஐக்கிய சகாய சேவா இலவச கலவன் இராப்பாடசாலையின் எட்டாவது ஆண்டு நிறைவு விழா 10-4-60 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு திரு. வி ஏ சுகததாஸ எம். பி. தலைமையில் விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். விழாமுடிவில் கதம்ப நிகழ்ச்சியொன்றும் இடம் பெறும்.

## 'செந்தழிழ்ச் செல்வி 'ழ' கரம்'

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணி" என்றுங் கூறினார் செந்நாப்போதார். அத்தகு தொழிலை அழகு படுத்திச் செழும் பொருளுணர்த்திய வள் செல்வி 'ழ' கரம் என்றதை நினைக்குந் தோறும் உவகையால் ஒவ்வொரு தமிழனின் உள்ளமும் உந்தப் படுமல்லவா மலர்!

"ஆழி சூழ் ஈழம்" எந் தாயகம்-பிறந்த மணித் திருநாடு. உப்பை எடுத்து உணவுடன் சேர்ப்பது தான் சுவை. உப்பைக் கூட ஆழியிற் றானே எடுக்கிறோம். "கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்" என்று சிலப்பதிகாரம் சிந்துகிறது இத்தனை சிறப்புக்கும் உரியவளே நந் தமிழ்ச் செல்வி 'ழ' கரந்தான் மலர்!

எந்த நேரமும் நீ வழிபடும் தொந்திக் கணபதியை "வேழ முகத்தோனே!" என்று தானே விழித்துப் பாடுகின்றனர். பூக்களில் நறுமணம் வீசும் தாழம்பூவை நீ கண்டிருப்பாயல்லவா? ஆம் மலர்! நீயும் கன்னிப் பெண்ணான பின்பு பின்னிய உன் கூந்தலை நிரப்பி அழகு செய்ய இதழ் இதழாய்ச் சூடுவாயே தாழம்பூ! அதற்கு அத்தனை வாசனையை ஊட்டுபவளும் 'ழ' கரச் செல்விதான் மலர்! இவற்றையெல்லாம் படித்த பின்பும் 'ழ' கரச் செல்வி சிறப்பை நீ அறிந்து மகிழ்ச்சியடையாமலா இருப்பாய்! சரி வள்ளுவர் தரும செந்தமிழ்ச் செல்வி 'ழ' கரத்தின் சிறப்பு இதோ!

"குழலினிது யாழினிது
என்பவர் தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்."

குழலின் ஓசை—யாழின் இசை இவைதான் காதுக்கு இனிமை என்று கூறுவர்—யார்? தம் மக்களின் மழலை மொழி கேளாதவர். ஆம்! செந்தமிழ்ச் செல்வி 'ழ' கரத்தின் இனிமை அறியாதவர்களும்—அதன் சுவை சொட்டாதவர்களும் மானிடராயப் பிறந்தும் என்பயன் கொல்லோ! மலர்! நாம்—நம் மொழி—அதன் சிறப்பு கூறுவதென்றால் என் பேனா இன்னும் ஆயிரமாயிரம் கட்டுரை எழுத வேண்டும். நீ படிக்க வேண்டும். அடுத்த அஞ்சலிலே அன்னை தமிழ்த் தாயின் அமரத்துவம் பற்றி இன்னும் பல அறைவோம். மற்றவை உன் மரகத மடல் கண்டு. வணக்கம்.

இங்கே
அன்பு அண்ணா
"மதியமுதன்"

## மொழி வளர மக்களுக்கு....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

### இலக்கணம் வேண்டுமா?

இலக்கணத்தைச் சிறிதளவேனும் போற்ற வேண்டியதில்லை என்ற மனப்பான்மையும் சில எழுத்தாளர்களிடம் குடிகொண்டு விட்டது. 'அவர்கள் தான் சொன்னார்கள்' 'அவர் அல்ல' என்று எழுதுவதைக் காணலாம். இன்றைய எழுத்தாளர்கள் அனைவரும் எழுதும்போது பதங்களைப் பிரித்து எழுதுவது பாராட்டத் தக்கது. இன்றைய போக்கை உணராத இலங்கை அரசகரும மொழிப் பகுதியினர் தாம் மொழிபெயர்க்கும் நூல்களில் சந்திப்புணர்ச்சிகளால் படிப்பவர்களை அஞ்சச் செய்கிறார்கள்!

### 'எல்லாந் தமிழில்' இயக்கம்

இன்று 'எல்லாம் தமிழில்' என ஓர் இயக்கம் இலங்கையில் தோன்றியுள்ளது. இந்த இயக்கம் நன்கு வளர வேண்டும்; வெற்றியடைய வேண்டும் என வாழ்த்துகிறோம். இந்த இயக்கத்திற்கு "சுதந்திரன்" உயிராக இருப்பதை யாவரும் அறிவர். இந்தியாவில் ஆங்கிலேயர் பலநூற்றாண்டுகள் ஆட்சி செலுத்திய போதிலும் இந்தியரின் அன்றாட சமுதாய வாழ்க்கையில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகம் வேரூன்றவில்லை. ஆயின் ஈழத் தமிழரின் வாழ்க்கையில் ஆங்கிலேயர் செல்வாக்கு நிலைத்து விட்டது இப்போது அந்தச் செல்வாக்கு மறைந்து போகிறது. 'எல்லாம் தமிழியக்'கத்தால் தமிழ் வளரும்; உரைநடை செழிக்கும் என்பதில் ஐயமில்லை.

### மொழி வளர அரசுரிமையும் வேண்டும்

ஒரு மொழியின் வளர்ச்சிக்கு மக்கள் உரிமையும் அரசியல் அதிகாரமும் இன்றியமையாதவை. தமிழ் மொழி தழைத்தோங்க வேண்டுமென்றால் தமிழர் தமிழரசு பெற்று உரிமையோடு வாழ வேண்டும். இன்று ஆங்கிலமொழி உலக மொழியென ஓங்கி வளர்ந்து விட்டது என்றால் அதற்குக் காரணம் ஆங்கிலேயருடைய அரசியல் செல்வாக்கே. ("Political ascendency would probably be found in most cases to have been the most powerful influence" — Otto Jespenson) தமிழ் மொழியும் தமிழரசு பெற்று வாழும் நாள் அண்மையில் உள்ளது


3-வது வாரம்! இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) றீகல் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)
நெல்ஸன் (திருகோணமலை) கிங்ஸ் (பதுளை) இம்பீரியல் (மட்டக்களப்பு)

ஆகிய திரைகளில்

சிவாஜி கணேசன்-வைஜயந்திமாலா-வசுந்தராதேவி
வனஜா-எஸ். வி. சுப்பையா-சரோஜாதேவி-கே. ஏ. தங்கவேலு நடிக்கும்

இரும்புத் திரை

3-வது வாரம்! இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கெயிட்டி றேயல் (பண்டாரவளை) அசோக்கமாலா (நீர்கொழும்பு) தாஜ்மஹால் (மாத்தளை) இம்பீரியல் (இரத்தினபுரி) சந்திரலோக (கம்பளை) மிட்லண்ட் (நாவலப்பிட்டி)

ஆகிய தியேட்டர்களில்

கல்யாணிக்குக் கல்யாணம்

ராஜேந்திரன்-ராஜம்-தங்கவேலு-மைனாவதி-பாலையா நடித்தது




மகத்தான 2-வது வாரமாக
ஓடிக்கொண்டிருக்கிறது

கூனன் நிமிர வேண்டும்!
குருடன் பார்வை பெறவேண்டும்!
கோழை வீரனாக வேண்டும்!

இந்தக் கொள்கை முழங்க

சென்ட்ரல் (மருதானை) ஓடியன் (கல்கிசை)

நடிப்புக்கோர் திலகமெனத் திகழ்கின்ற செம்மல் நாடெங்கும் கலைத்திறத்தால் புகழ் மணக்கும் பொற் பாவையுடனே பேராற்றல் காட்டுகின்ற பெரு நடிகர் குழுவும் பாராட்டு பெறுகின்ற பான்மையிலே நடித்து.........தமிழ் கொழிக்கும் எழுத்தாலே தன் மானம் செழிக்கின்ற கருத்தாலே பட அமைப்பு முறை—படைப்புமுறை தனிசிறக்க மேன்மைமிகு மேகலா தருகின்ற திரை விருந்து.

குறவஞ்சி

கதை வசனம்: மு. கருணாநிதி
டைரக்ஷன்: காசிலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 'செந்தமிழ்ச் செல்வி "ழ" கரம்'

அன்புள்ள மலர்!

கற்கண்டுத் தமிழிலே கடைந்தெடுத்த உன் கன்னித் தமிழ்க் கடிதம் கரம் கிட்டியது. களிபேருவகையடைந்தேன். சொட்டுத் தீந்தமிழின் சுவைசொட்ட, வண்ண வண்ண எழுத்துக்களால் வாரி வழங்கியிருந்தாய் வண்டமிழில் எண்ணக் குவியல்களை. படித்தேன். படிக்கின்றேன். பைந்தமிழின் சுவைதனைப் பருகிக்கொண்டேயிருக்கிறேன். ஆனால், உன் சிந்தனையிலேசிதறிய கேள்விகள் என்னை அப்படியே தமிழ்த் தாயின் முன் சரணடையச் செய்து விட்டது மலர்!

செந்தமிழிலே "ழ" கரத்தின் சிறப்பென்ன அண்ணா? என்றும் மற்ற மொழிகளிலே "செந்தமிழ்ச் செல்வி 'ழ' கரம்" போன்ற சிறந்த எழுத்து ஒன்று கிடையவே கிடையாதாமே! இது உண்மைதானா? இப்படிக் கொஞ்சும் தமிழிலே நெஞ்சையள்ளும் வண்ணம் எழுதியிருந்தாய். படித்த கணமே என் பைந்தமிழ்த் தங்கையின் மதிமுகம் என் மனக்கண் முன் நிழலாடியது. குறு குறு விழிகள் மொழி பேசின.

"தமிழுக்கு அமிழ் என்று பெயர். அது எங்கள் உயிருக்கு நேர்" இப்படியாக இன்பக் கவிதையைக்கடைந்தெடுத்தார் கவிஞர் பாரதிதாசன். அவரைவிட—அந்தக் கவிஞரின் கற்பனையை விட—என் கன்னித் தமிழ்த் தங்கையின் தாய்ப்பாசம்—தமிழ்ப்பற்று மேலானது. போற்றிப் புகழ வேண்டியது.

"தமிழ்" என்றால் இனிமை. அந்தத் தமிழுக்கு இனிமையைக் கொடுப்பது எது? அதுதான்—அவளே "ழ" கரச் செல்வி. அந்தச் "செந்தமிழ்ச் செல்வி "ழ" கரத்தின் சிறப்பைக் கூற இது ஒன்றே போதுமானது. தமிழ்த் தாயே கன்னித் தன்மையுடையவள்—கடல் கடந்து கமழ் மணங் கமழ்பவள் என்றால் செல்வி "ழ" கரத்தின் சிறப்பை மேலும் பரக்க விரிப்போம் மலர்!

இல் வாழ்விலே கொழுநன்—இல்லக்கிழத்தி—மழலை சிந்துங் குழந்தை இத்தனை பேருடனும் இன்பம் பெருக்குபவள் "ழ" கரம். மொழி விழியை விடமேலானது என்று போற்றிப் புகழுகிறார்கள் மொழித் துறைத் தலைவர்கள். வழியற்றவன் முழு மனிதனாக மாட்டான். அது போல் மொழிப் பற்றற்றவனும் உண்மையில் மனிதனே இல்லை. இதை எவ்வளவு சிறப்புடன் சிந்துகிறாள் எமது செந்தமிழ்ச் செல்வி 'ழ' கரம். தமிழின் சுவைமென்ற அமரகவி பாரதி "தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று உணர்ச்சியுடன் பாடினார்.

சில ஆண்டுகட்கு முன் இலண்டன் சர்வகலாசாலைப் பேராசிரியர் கோ. ஆசர் பி.ஏ; பி எச். டி. சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலே தான் கற்ற கன்னித் தமிழிலே "தமிழ்" என்னும் பொருள்பற்றிச் சொற்பெருக்காற்றினார். எப்படி?...

"தமிழிலுள்ள "ழ" எழுத்து உலக மொழி ஆராய்ச்சியாளர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. அந்தச் சுவையான எழுத்து வேறு எந்த மொழியிலும் இல்லாததால், தனிச் சிறப்புடையதாக இருக்கிறது." இப்படியாக 'ழ' கர நங்கைக்குப் புகழ் மாலை சூட்டினார்.

செந்தமிழ்ச் செல்வி 'ழ' கரத்தை விட்டோ? அதன் இனத்தை ஒழித்தோ? தமிழிற் சுவைபட எழுத முடியாது. 'எழுதல்' அதிற் கூடக்கலந்து கடிமணம் பரப்புகிறாளே. 'ழ' கரம்.

முப்பழங்கள் முறையாகச் சேர்த்து முழு முதற் கடவுளுக்குப் படைக்கிறோம். கழனியிலே கார் கண்டு ஏர் பிடித்து கதிரறுக்கிறான் உழவன். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" எனவும் "உழுவார் உலகத்தாருக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யின் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்.......................................................

பாடசாலை.......................................................

விலாசம்.......................................................

.......................................................

....................................... .......................................

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## "ங-போல் வளை"

இயல், இசை, கூத்து என்னும் பிரிவுகளைக் கொண்ட இம்முத்தமிழை, மூன்று பகுதிகளாய் இணைக்கப்பட்டுள்ள ஒரு முத்து மாலைக்கு ஒப்பிடலாம்.

தமிழ் மொழியில் உள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களையும். இருநூற்றுநாற்பத்தேழுமுத்துக்களுக்கு உவமையாக்கலாம். தமிழ் எழுத்துக்கள் நான்கு வகை. உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய்எழுத்து, ஆய்த எழுத்து என்பனவே அவை. இவற்றில் உயிர் எழுத்து குறில், நெடில் என இரு பிரிவாயும், மெய்யெழுத்து வல்லினம், மெல்லினம், இடையினம் என முப் பிரிவுகளாகவும் அமைந்துள்ளன. இவ்விபரங்களையெல்லாம் விரிவாகத் தமிழ் இலக்கணமாகிய நன்னூலிற் காணலாம். இவற்றை அமைக்கப் பழங்காலத் தமிழறிஞர் என்ன பாடுகள்பட்டிருப்பார்களோ? தமிழிற்குப் பாடுபட்ட அனைவர் புகழும் இந்நிலவுலகில் நீடூழி வாழ்க!

இத்தமிழிலே, உயிர்மெய் எழுத்துக்களிலே "க" வரிசைக்கு அடுத்தபடியாக "ங" வரிசை இருப்பது யாவர்க்கும் தெரியும். அவற்றில் "ங" தொடக்கம் "ஙௌ" வரையும் பன்னிரண்டு எழுத்துக்கள் உண்டு. "ங்" என்ற மெய்யும் "அ" என்ற உயிரும் சேர்ந்தே "ங" என்ற உயிர் மெய் தோன்றியது என்பதை அனைவரும் அறிவர். இவ்வாறே மற்றயவையும் தோன்றியுள்ளன. இவற்றிலே 'ங' என்ற எழுத்து மட்டுமே அன்றிருந்து இன்றுவரை எழுத்திலோ—பேச்சிலோ வந்துள்ளது. "இங்ஙனம்" என்ற சொல்லிலே "ங்ங" இரண்டையும் பார்க்கிறோம். இவற்றில் "ங்" என்ற மெய்போக "ங" என்ற உயிர் மெய் மட்டுமே பாவனையில் உள்ளது. ஏனைய "ஙா" தொடக்கம் "ஙௌ" வரையுமுள்ள பதினொரு எழுத்துக்களும் எழுத்திலோ—பேச்சிலோ வருவதில்லை. அவை பயனற்றவையாகிவிடுகின்றன. அதனால் அவற்றைத் தள்ளவும் முடியாது. அப்படித் தள்ளிவிட்டால் தமிழ் எழுத்துக்கள் இருநூற்று முப்பத்தாறாய்க் குறைந்துவிடும். தமிழ் மொழியின் மானமே பறிபோய்விடும். இதனால் அவை பயன்படுத்தப்படாவிடினும் எவ்வளவு முககியம் பெற்றவை என்பது விளங்குகின்றதல்லவா?

தமிழ் எழுத்துக்களை வகுத்த பழங்காலத் தமிழ் அறிஞர் இவ்வெழுத்துக்கள் பாவனைக்கு வராமற் செய்துவிட்டார்களே! பிற்காலத் தமிழ் அறிஞராவது அவற்றைப் பாவனைக்குக் கொண்டு வந்தார்களா? அப்பதினொரு எழுத்துக்களும் பேச வாயிருந்தால் இவ்விதம் வெளிவராமல் தாங்கள் ஒரு மூலையிற் கிடப்பதைப் பற்றிச் சொல்லிக் கண்ணீர் விடுங்களல்லவா? "ங" என்ற முதலெழுத்துத்தான் பல இடங்களில் தோன்றி அதன் பின்னுள்ள பதினொரு எழுத்துக்களின் மானத்தையும் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. அதுபோலவே கற்ற [illegible] [illegible] டும். இதுபற்றியே "ங-போல் வளை" என்று தமிழ் மூதாட்டி ஔவையாரும் கூறியுள்ளார்.

எனவே "ங" எழுத்து மற்றைய எழுத்துக்களைக் காப்பாற்றுவதுபோல் நாமும் நமது சுற்றத்தோரைக் காப்போற்றுவோமாக!

வாழ்க தமிழ்!

—"தாமரைத்திவான்"

மலைவீடு

## வெற்றி அவன் முயற்சிக்கு நாளை கைமேல்

—சோமலிங்கம்—

ஈழந்தின் தமிழனுக்கும் வீழ்ச்சி இல்லை
 என்றைக்கும் தமிழ் உணர்ச்சி இதுபோல் இங்கு
வாழவில்லை வளரவில்லை ஆனால் இன்று
 வாழ்வதற்குத் தமிழ் மக்கள் துணிந்துவிட்டார்
ஆளத்தான் போகின்றான் தமிழன் தன்னை
 அடிபணிந்து மாற்றானைத் தொழவும் மாட்டான்
கூழும் இல்லை பதர் இல்லை தமிழனுள்ளே
 கொள்கை யென்ற நெல்மணியே தமிழர் கூட்டம்

அடிமையில்லை அவன் இந்த நாட்டில் நாளை
 அருக்கும் தலைதனியத் தேவை இல்லை
கொடிகட்டி முடிபெற்று ஈழந்தன்னில்
 குடி உரிமை தான் பெற்று வாழப் போறான்
வெடிவைத்தால் தமிழ் உணர்வு ஒழிந்தாபோகும்?
 வெஞ்சிறையில் அடைத்தாலும் அழிந்தாபோகும்?
அடி உதையால் தமிழன் இங்கு அடங்கமாட்டான்
 அவன் வாழப் போகின்றான் பொறுத்துக் காண்போம்

கோழையென ஏழையென வாழமாட்டான்
 கொள்கையென்ற உறுதியது உள்ள மட்டும்
நாளைக்கே வாழ்வதற்குத் துணிந்து விட்டான்
 "நமக்கெதற்கு வீண் பிளவு"; என உணர்ந்து
ஆள்வதற்குத் துணிந்து விட்டான் தமிழைக்காக்க
 அனல் ஆறுதாண்டுகின்ற நிலை வந்தாலும்
மீழ்வதற்கு இறங்கி விட்டான் தமிழன் இன்று
 வெற்றி அவன் முயற்சிக்கு நாளை கைமேல்.

வள்ளுவர் குரல்: 18

## சிறப்பும் பூசனையும்

கோவில்களிலே தேவர்களுக்காக நாள்தோறும் வழிபாடு நடைபெறுகின்றது; அதற்குப் பூசனை என்று பெயர். நாள்தோறும் நடைபெறும் பூசனையிலே எவையேனும் குறை குற்றங்கள் இருப்பினும், அவற்றை நிறைவு செய்து குணப்படுத்தவே, சிறப்பாகத் திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்நாள் வழிபாடும் திருவிழாவும், மக்களின் மனவளத்துக்கு எடுத்துக் காட்டாக இலங்குகின்றன.

மக்கள் மனம் வளமுடையதாக இருக்கிறபோது, அம்மனத்திலே நன்றி பாராட்டும் பண்பு துளிர்க்கின்றது. வெயிலையும் மழையையும் தந்து, பயிரையும் விளைவையும் ஈந்த தேவர்களுக்கு, நன்றி பாராட்டும் பொருட்டுப் பூசனையும் விழாவும், மக்களினால் நடாத்தப்படுகின்றன.

மழை பெய்யாது விடுமாயின், நிலவளம் குன்றும்; கடல்வளம் குறையும்; மக்கள் மனவளமும் சுருங்கிவிடும் வானோர்க்காகச் செய்யப்படும் நாள் வழிபாடாகிய பூசனையும், சிறப்பு வழிபாடாகிய திருவிழாவும் நடைபெறுமல், மக்கள் மனமும் வளங்குறைந்து பண்பிழந்து விடுகின்றது. நிலமும் கடலும் செழித்துப் பயன்படுவதற்கு மட்டுமன்றி, மக்கள் மனமும் செழித்துப் பண்படுவதற்கும் மழையே காரணம் என்பது வள்ளுவர் வாய்மை.

"சிறப்பொடு பூசனை செல்
 லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும்
 ஈண்டு."

—பா. ஆறுமுகம்.

ஔவை அமுதம்: 26

## இலவம் பஞ்சில் துயில்

நாளாந்த வாழ்க்கையில் உபயோகப்படும் பொருட்கள் எல்லாமே நல்லவை எனத் தப்புக் கணக்குப் போடத்தான் தெரியும் எமக்கு. ஒவ்வொன்றையும் ஆராய்ந்து நன்மை தீமை தெரிவதில் எமக்கு அக்கறையேயில்லை. ஔவை, பாட்டியானாலும் எங்களைப் போல் சோம்பேறியல்ல, சிறு பொருளையும் துருவித் துருவி ஆராயும் அறிவும் ஆற்றலும் படைத்தவள். அந்தப் பழுத்த அறிவினால் தான் "இலவம் பஞ்சில் துயில்" என்றாள்.

படுக்கைக்குப் போகும் போது தலையணைகள் உபயோகிக்கிறோம். பஞ்சினாலானது ஒன்று; சேலைத் துணியினாலானது இன்னொன்று; றப்பராலானது மற்றொன்று; றப்பர் பையினுள் காற்றடைக்கப்பட்டது வேறொன்று. இவைகளெல்லாம் சுகத்துக்கு உகந்தவையல்ல. சேலையானது அதிக வெப்பத்தைத் தரும். றப்பராலானதும், காற்றினாலானதும் அதிக சோம்பலைக் கொடுக்கும். இவற்றை விட இலவம் பஞ்சிலான தலையணை தான் சுகத்துக்கு நல்லது.

நாகரிகமான, ஆடம்பரமான, அழகான பொருட்களைப் பாவித்தால் தான் மதிப்பு என்ற அசட்டுத்தனமான எண்ணம் எம்மை ஆட்டிவைக்கிறது. அதனால் எமது சுகத்துக்கே தீங்கான பொருட்களைப் பயன்படுத்துகிறோம், வீணாகப் பணத்தையும் செலவு செய்கிறோம். மலிவும், சுகமும் தரக்கூடிய பொருட்கள் இருப்பினும் விலையும், வேதனையும் தரக்கூடிய பொருட்களைத் தேடி வீணே அலைகிறோம். நீரை விலக்கி பாலைக் குடிப்பதில் தான் அன்னப் பட்சி திருப்தி காண்கிறது. நாம் பாலை விலக்கி நீரைக் குடிக்கவே அவதிப்படுகிறோம்.

றப்பர் மெத்தை அழகாக இருந்தாலும் பஞ்சு மெத்தைக்கு இருக்கும் தாற்பரியம், குணம் எதுவுமே அதனிடமில்லை. இது தெரியாத நாம் விஞ்ஞான உலகில் வாழ்கிறோம் எனப் பெருமைப்படுக் கொள்கிறோம். ஔவை இதைக் கண்டால் எமது அஞ்ஞானத்தைக் கண்டு விழுந்து விழுந்து சிரிப்பாள்—உண்மைதான்!

—ஏ. ஜீ. ஆனந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழர் திருமணத்தில் தீ வலம் வருதல்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறி விட்டு, அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடுவான். அங்கு அவர்களிருவரும் இனிதே இல்லறம் நடத்துவார்கள். இங்ஙனம் அவர்கள் 'இல்லறம் புகும்' நிகழ்ச்சியை ஊராருக்கு அறிவிப்பதுமில்லை; அதற்காக வேறு எந்த விதமான சடங்குகளும் செய்வது மில்லை.

### பிற்காலத்தில் வந்த வினை

ஆனால் காலஞ் செல்லச் செல்ல இதனால் சில ஒழுக்கக் கேடுகள் தோன்ற ஆரம்பித்தன. இல்லறம் புகு விழா, பலரறிய நடைபெறாததால், மாற்றானின் மனையே தஞ்சமெனக் கிடந்த ஒரு சில தறுதலைகள், காதலித்துக் கூட்டி வந்த கன்னியரை மறந்து உண்மைக்குத் திரைபோடத் துவங்கினர். எனவே ஆரியம் வாதும் தமிழகத்தில் நுழைந்த பிறகு தொல்காப்பியர் காலத்தில் துணைவி என்ற நிலை பலரறிய நடைபெற வேண்டிய மணவினையாக உருவெடுத்தது. இதைத்தான்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்பர்"—(கற்:4)

(ஐயர் அறிஞர்; கரணம்: மணவினை;)

—என்று தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால் மணவினை பற்றிய விளக்கம் எதுவும் அதில் திட்ட வட்டமாகச் சொல்லப்பட வில்லை. எனவே மணவினை தோன்றிய பிறகு என்னென்ன சடங்குகள் செய்யப்பட்டன என்பதும் தெரியவில்லை. தொல்காப்பியத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கடைச் சங்க காலத்தில் நடந்த சடங்குகளைப் பற்றி மட்டுமே அகநானூற்றின் மூலம் அறிய முடிகிறது.

### கடைச்சங்க காலத்தில் வதுவை மணம்

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு கடைச் சங்க காலத்தில், காதலனின் பெற்றோர் பெண் வீட்டிற்குச் சென்று பெண் கேட்பார்கள்; பின் திருமணத்திற்கு நாள் குறித்த பிறகு பெண் வீட்டார் மணமகனின் பெற்றோர்க்கு விருந்து வைப்பார்கள் (இன்றும் இந் நிகழ்ச்சிகள் 'பெண் பார்த்தல்' 'பருப்புஞ் சோறுண்ணல்' என்ற பெயர்களில் நடைபெறுகின்றன) குறித்த நாளில் உற்றாரையும் உறவினரையும் அழைப்பார்கள். பெண் வீட்டில் தான் மணவினை நடைபெறும். எனவே அங்கு மலர் மாலைகளினால் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் மணல் பரப்பி, பலவகை விளக்குகளை ஏற்றி வைப்பார்கள். மணமான மகளிர் ஐவர், புதுக் குடங்களில் நீர் கொணர்ந்து புதுத் தாழிகளில் ஊற்றி வைப்பார்கள். அத்தாழியில் நெல்லையும், மலர்களையும் தூவுவார்கள். பிறகு அந் நீரைக் கொண்டு பெண்ணை நீராட்டி, வாழ்த்துவார்கள். இந்த நிகழ்ச்சியை 'வதுவை மணம்' என்று குறிப்பிடுவர்.

### ஐயர் இல்லை, தீயை வலம் வருவதில்லை

வதுவை மணம் நடந்த பிறகு வாகை இலையையும் அருகம் புல்லையும் வெள்ளை நூலில் பின்னி, அதை மணமகளின் கையில் கட்டுவார்கள் (இப்போது இது 'கங்கணம் கட்டுதல்' என்று சொல்லப்படுகிறது) அதன் பின் மணமக்களைப் பந்தலில் உட்கார வைத்து, பெண்ணின் பெற்றோர், "நீ விரும்பியவனுக்கே உன்னைக் கொடுக்கிறோம்; நீவிர் இருவரும் இணைபிரியாது வாழ்வீராக!" என்று வாழ்த்தி, மகளின் கையை மணமகனின் கையில் ஒப்படைப்பார்கள். அதன் பின் அறுசுவை விருந்துடன் மணவினை முடிந்ததாக அகநானூறு 86, 136ம் பாடல்களிலிருந்து தெரிய வருகிறது. இந்த மணவினையில் தீ வளர்ப்பதில்லை; தீ வலம் வருவதில்லை, தட்சிணை பெறப் புரோகிதனும் இல்லை.

### தாலி இடையில் புகுந்தது

ஆனால், இம் மூன்றும் கண்ணகியின் திருமணத்தில் இருந்தது. புரோகிதன் மந்திரம் ஓத கோவலன் கண்ணகியின் கையைப் பிடித்துக் கொண்டு தீவலம் வந்ததாக இளங்கோ பாடுகிறார்.

"............கோவலன்
மாமுது பார்ப்பான்
மறை வழி காட்டிடத்
தீ வலஞ் செய்வது..."

(மங்கல வாழ்த்து: 51)

கண்ணகிக்கு நடந்த இத் திருமணத்திற்கு 'பாணிக்கிரகணம்' என்று பெயர். காலஞ் செல்லச் செல்ல அர்த்தமற்ற சடங்குகளும் குவிய ஆரம்பித்தன. எனவே கி. பி. 10-ம் நூற்றாண்டிற்குப் பிறகு தான் கட்டும் வழக்கமும் தோன்றியது. ஆனால் இன்று கூட, திராவிடப் பழங்குடி மக்களான தோடர்களிடம் தாலி கட்டும் வழக்கமில்லை.

இந்தத் தாலி கட்டும் வழக்கமும் இனத்துக்கு இனம் வேறுபட்டு, பல விநோதமான முறைகளில் நடைபெற்றதாக தர்ஸ்டன் என்ற ஆராய்ச்சியாளர் தனது, "தென்னிந்திய சாதிகளும் குடிகளும்" என்ற நூலில் கூறுகிறார்.

### தாலி கட்டுவதில் உள்ள விசித்திரம்

திருமணத்தில் பெண்ணிற்கு மணமகன் தான் தாலி கட்டுவது வழக்கம். ஆனால் கொங்கு வேளிர் இனத்தில் 'அருமைக்காரர்' ரும் கோட்டை வேளாளர், குயவர் போன்ற இனங்களில் பெண்ணின் நாத்தியும், கோவை ஊராளியர் இனத்தில் மணமகளைச் சார்ந்த ஒரு உறவினரும் மலையாள நம்பூதிரிப் பிராமணருள் பெண்ணின் தந்தையும் தாலி கட்டுவார்கள் என்று அவர் கூறுகிறார்! சாதாரணமாக விதவைகள் தாலி அணிய மாட்டார்கள். ஆனால் உப்பிலியவரும், வலையரும் கணவன் இறந்த பிறகும் தாலியை நீக்கமாட்டார்கள்.

### 'தேவர் கட்டுக் கல்யாணம்'

கொச்சி நாட்டில் உள்ள வாரியர் குலச் சிறுமியர் முதலில் தேவனுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுவார்கள். அதற்காக கோயிலிலே கடவுளின் சார்பாக யாரேனும் ஒரு பெரிய மனிதன் அச்சிறுமிக்குத் தாலி கட்டுவானாம்! இதற்குத் 'தேவர் கட்டுக் கல்யாணம்' என்று பெயர். இதற்குப் பிறகு தான் அந்தப் பெண் ஒரு நரனைக் கல்யாணம் செய்து கொள்ள முடியும்! தேவர் கட்டுக் கல்யாணம் செய்து கொள்ளாத வாரியர் குலவனிதை கடவுளருக்கு வழிபாடு செய்ய முடியாது அவர்களது உண்மைக் கல்யாணத்தில் தாலி கட்டும் வழக்கமில்லை தேவர் கட்டுக் கல்யாணத்தில் தாலி கட்டிய அந்தப் பெரிய மனிதர் எமலோகம் செல்லும் வரை அவள் தாலியை நீக்கக் கூடாது. ஆனால் இத்தாலிக்கும் உண்மையான கணவனுக்கும் ஒரு தொடர்புமில்லை. இக்காலத்தில் தேவர் கட்டுக் கல்யாணமும், உண்மையான திருமணமும் ஒரே சமயத்தில் நடைபெறுவதாக 'மலபார் கெசட்டியர்' என்ற நூலிலிருந்து (பக் 175—176) தெரிகிறது.

### இடத்துக்கு இடம் மாறுபாடு

இது தவிர, தாலி என்ற ஆபரணமும் இடத்துக்கு இடம் வேறு படுகிறது. சிலரது திருமணங்களில் வெள்ளிக் காப்பு அணிவிப்பதையே முக்கியமாகக் கருதுகிறார்கள். சிலர் வளையல்களையும், கன்னட நாட்டில் 'தாரை மணு' என்ற நகையையும், கேரளத்தின் ஒரு பகுதியில் 'மின்னு' 'மாத்ரா' என்ற நகைகளையும் தாலிக்குரிய மதிப்புடன் அணிவித்தனராம். இதை யெல்லாம் பார்க்கும்போது, தாழ்ந்து போன இத்தமிழகத்தின் ஏதாவது ஒரு மூலையில் பெண்ணே ஆணுக்குத் தாலி கட்டினாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை!

### பழந்தமிழர் திருமணச் சிறப்பு

நல்ல வேளையாக தொல்காப்பியர் காலத்து மணமக்களுக்கு இத்தகைய தொல்லைகள் இருக்கவில்லை. பெண்ணைப் பெற்றோர் கொடுக்க அவளைப் பலர் அறிய மணமகன் ஏற்றுக்கொள்வதே அன்றைய மணவினையாக இருந்தது. காதலுக்குத் தடையாகப் பெற்றோர் நின்றால், அவர்கள் இல்லாமலே (தொல்—கற்-2) பலரறிய இல்லறம் புகுவிழா வினை நடத்த வழி இருந்தது. எனவே திருமணம் என்பது காதலரது வாழ்க்கைக்கு இடையூறாக அமையவில்லை.

மேலும் அன்றைய தமிழ்ச் சமுதாயம் மகளிருக்குச் சம உரிமை நல்கியது. தான் விரும்பியவனையே மணந்து கொள்வது மகளிரது பிறப்புரிமையாகக் கருதப்பட்டது. கண்மூடித்தனமான சடங்குகளும், அர்த்தமற்ற கட்டுப்பாடுகளும் அன்று தோன்றவில்லை. அறியாமையை அழிக்கவும், அறிவை வளர்க்கவும் காதல் திருமணம் இன்றியமையாதது என அவர்கள் நம்பினார்கள். உலகில் எந்தப் பகுதியினரும் வாழ்க்கையைப் பற்றி சிந்திப்பதற்கு முன்பே, பழந்தமிழ் மக்கள் காதலுக்கு இலக்கணம் செய்து காதலை வளர்த்தனர்; காதலரை வாழ்த்தினார்! எனவே உணவிற்கு உப்புபோல், உயிருக்கு மூச்சுபோல், அன்று வாழ்க்கைக்கு காதல் அவசியமாகக் கருதப்பட்டது!

—'முத்தாரம்'

## சுவீப் டிக்கட்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"நான் அதிர்ஷ்டசாலி வசந்தி!'

"என்ன வாசு?"

"எனக்கு இரண்டு பெரிய அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது" என்றால் சந்தோஷத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

"என்ன?" அவள் புருவங்கள் நெரிந்தன.

"இரண்டு அதிர்ஷ்டங்கள்-ஒன்றின் பெறுமதி ஐம்பதினாயிரம், மற்றதிற்கு விலைமதிக்கவே முடியாது"

"என்ன வாசு, விபரமாகச் சொல்லித் தொலையுங்களேன்"

"இந்தா, முதல் பரிசு பெற்ற ரிக்கட்—ஐம்பதினாயிரம். இது உனக்கு. இதை எங்கள் அப்பாவிடம் கொண்டுபோய் கொடுத்து இனி உங்கள் மகனைத் தருகிறீர்களா இல்லையா என்று கேள் வசந்தி.'' என் பணத்தைக் கொடுத்து என்னை வாங்கப்போகிறாள் வசந்தி இதை அப்பா எங்கே அறியப்போகிறார்?

"வாசு...' வாடிப்போயிருந்த வசந்தியின் முகம் மகிழ்ச்சியால் பூரிப்படைந்தது.

"வசந்தி" என்றேன் உணர்ச்சியுடன்.

"மற்றது என்ன வாசு?"

"இது—வசந்தி" அவளைத் தொட்டுக் காட்டினேன்,

அப்போது அவள் அடைந்த ஆனந்தம்......!

# கழகச் செய்திகள்

### விபுலானந்த கழகம்

"சமயம் ஒரு சமூகத்தின் நிலையான வளர்ச்சிக்கு தேவையானது. சமய வாழ்வை அடிப்படையாகக் கொள்ளாத சமுதாய முன்னேற்றம் வெகுகாலம் நீடிக்காது. விரைவில் அழிந்து விடும்" என அகில இலங்கை காந்திய சேவா சங்கக் கௌரவ காரியதரிசி திரு. சி. க வேலாயுதபிள்ளை திருமலை விபுலானந்த கழக மாணவர்கள் மத்தியில் அணிமையில் பேசும் பொழுது கூறினார்.

கழகச் செயலாளர் திரு. இ. சோமசுந்தரம் தலைமை வகித்துப் பேசும் பொழுது, "மாணவர்கள் சமயத்தை முக்கியமான பாடமாகக் கொள்ள வேண்டும் எனவும், சமய ஒழுக்கங்களோடு கூடிய படிப்பே; நீண்ட நாள் பலனைத் தரக்கூடியதென்றும் கூறினார்.

செல்வன் விவேகாநந்தன் நன்றியுரை கூறினார்.

—

### சைவப்பிரகாச வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்

அல்வாய் தெற்கு சைவப் பிரகாச வித்தியாசாலை பழைய மாணவர் சங்கக் கூட்டம் கடந்த 26.3-60-ல் வித்தியாசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. கே. வி. சதாசிவம் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக கீழ்க் கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. ஆ. கணபதிப்பிள்ளை, உபதலைவர்: திரு. அ. தேவராஜ சர்மா, கௌரவ செயலாளர்: திரு. க. சிதம்பரம், உபசெயலாளர், திரு. க. கோபாலரத்தினம், பொருளாளர்கள்: திரு. க. மாணிக்கம், திரு. நடராசா, செயற்குழுவினர்; திருவாளர்கள்: கே. குட்டித்தம்பி, க செல்லையா, சி. வைரமுத்து, க கணபதிப்பிள்ளை, க. வீரகத்தி, அ. பொன்னையா, த இராசையா, க. கணபதிப்பிள்ளை, வீ. கணபதிப்பிள்ளை, மூ. தாமோதரம்பிள்ளை, இ. வைத்திலிங்கம், செல்வி சி. அன்னம்மா.

—

### முத்தமிழ் முன்னேற்றக் கலைமன்றம்

முத்தமிழ் முன்னேற்றக் கலைமன்றத்தின் இரண்டாம் சந்திப்பு 13-3-60-ல் 121, மலாய் வீதி, கும்பனித் தெருவில் திரு. ப. இசை நவராசன் தலைமையில் நடைபெற்றது.

இளங்கோ கலைமன்றச் செயலாளர் திரு. வாசகர் தமிழர் வளமெனும் தலைப்பில் பேசி மன்றத்திற்கு நல்வழி காட்டினார். திருவாளர்கள் செல்வராசன், தாவீது, ஆகியோர் தமிழ்க் கலைவளர்வதற்கான விதிகளை முறையே விளக்கினர்.

ஈற்றில் திரு. இளஞ்செழியன தமிழ் உணர்[illegible] என்பதைப் பற்றி[illegible] பொழிவு நிகழ்த்தினார்

### அகில இலங்கை அருந்ததியர் சங்கம்

அகில இலங்கை அருந்ததியர் சங்க செயற்குழு கூட்டம் அணிமையில் கூடிய போது கீழ்க் கண்ட தீர்மானம் ஏக மனதாக நிறைவேறியது:—

அடிமைகளாக ஏழைகளாக சமுதாய சாக்கடையில் தள்ளப்பாட்டு; அவமானத்துக் குள்ளாகி இருந்த அருந்ததியர் (தமிழர்)களின் சீர்திருத்தத்துக்கும் புரட்சிகரமான முன்னேற்றத்துக்கும் கடந்த முப்பதாண்டுகளாக அயராதுழைத்து வரும் அருந்ததியர்களின் தந்தை என போற்றிப் புகழப் பட்டு வந்த காலஞ்சென்ற திரு. மா. மு. இராசகோபாலின் அகால மரணம் சமுதாயத் துறையில் மறுமலர்ச்சி பெற்று முன்னேறிக் கொண்டிருக்கும் அருந்ததியர்களுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். திரு. இராஜகோபாலின் திடீர் மறைவால் கவலையிலாழ்ந்திருக்கும், குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும்; சமூகப் பெரு மக்களுக்கும் அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அவர் துவக்கி வைத்த சமூகப் பணியின் வெற்றிக்கு இடைவிடாதுழைப்பது அன்னாரின் ஆத்ம சாந்திக்கு நாம் செய்யும் நீடித்த பிரார்த்தனையாகுமென அ. இ. அ. ச. கருதுகிறது.

கூட்டத்திற்கு சங்கத் தலைவர் [illegible] தலைமை வகித்தார்.

## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால மலரில் கருத்தோவியம்

## கோலாகலத்துடன் கொண்டாடப் போகிறது

## தமிழ் திருநாளாம் சித்திரை வருடப் பிறப்பு

## இத் தினத்தை புவியெல்லாம் கொண்டாட

## ஏப்ரல் 13-ம் திகதி புதன்கிழமை முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) நியூசினிமா (குருணாகல்) விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா)

ஆகிய திரைகளில்

நடிகர்கள்:

ஜெமினி கணேசன்

டி. எஸ். பாலையா

எஸ். வி. ரங்கராவ்

கே. ஏ. தங்கவேலு


சாரங்கபாணி

டி. ஆர். ராமச்சந்திரன்

கருணாநிதி

பக்கிரிசாமி

ஏழுமலை



நடிகைகள்:

சாவித்திரி

ஜமுனா

ஈ. வி. சரோஜா

டி. பி. முத்துலட்சுமி

ஆகியோர் நடித்த

## விஜயாவின்

# கடன் வாங்கி கல்யாணம்

பின்னணி பாடியவர்கள்:

ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், எஸ். சி. கிருஷ்ணன், லீலா, சுசீலா, ரத்னமாலா

டைரக்ஷன்: பிரசாத்

ஸ்டூடியோ: வாஹினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க [illegible] இல் பதிப்பித்து 1960 ஏப்ரல் 10-ம்தேதி பிரசுரிக்கப்பட்டது.